personality in the Divine, like the river becoming the ocean itself. It is not a stone-like inert state as some people seem to think. It means a life in the Spirit, a richer inner life. Freed from all mental modifications and imaginations, and thus transcending the limitations of the empirical existence, the Samadhi-Yogi leads an intensified universal life. It is a so of expanded cosmic life with a cosmic vision, and all his activities are for the good of humanity, irrespective of race, religion, colour or creed. May the lives and teachings of such Mahatmas inspire us to think of Self- realisation as the Goal of Life.

Who soever Comes to me through whatsoever form
I reach him; all men are struggling
through paths which in the end
leads to me — **Geta**

Ask nothing; want nothing in return back
give what you have to give It will Come to you
but do not think about it now.
It will Come back multiplied thousanfold
but the attention must not be on that
yet have the power to give
give & there it ends — **Swami Vivekananda**

St. APPAR'S CONCEPT OF GOD

S. THANANJAYARAJASINGHAM, B. A. (HONS.)

' as lamp does not burn without oil
so a man cannot live without god '

The Tiruttandagams of Saint Appar are spoken of as invaluable gems of the ocean of Tamil literature. They are well saturated with the lofty tenets of saiva siddhantam. The following song which reveals Appar's concept of God is taken from his Tiruttandagam collections:

மைப்படிந்த கண்ணுளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையான்
என்னில்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன் ஒரூர
னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணின்
அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்
டொணுதே

Many devotees had attempted to describe God in the light of their experiences. All their descriptions tend to differ from one another on account of their diverse experiences. Appar advises them not to define God in the light oft heir experiences. According to him, God is without any form and name and beyond the reach of human thought and word. He is beyond description. To describe him as possessing particular attributes or as hailing from a particular place or of a particular shape or colour is just limiting him within our sphere of knowledge. God,to Appar,does not possess any material qualities. In short he transcends all human concepts of a supreme being. Appar's concept of God tallies with that of Sankara who describes God as Nirguna Brahman. To picture Him as having gunas or attributes is to limit him to the functions we know of. Both Appar and Sankara believe in God as a trancendental being. Arulnandhi Sivachariyar also describes the mystic nature of God as beyond the understanding of the Vedas, of Brahma and Vishnu, of the mind and speech and of other modes of faultless measurement.

மறையினுல் அயனுல் மாலால் மனத்தினுல்
வாக்கால்
மற்றும் குறைவிலா அளவினுலும்
கூருெணுதாகி நின்ற இறைவனுர்.....
—சிவஞானசித்தியார்

If God is indescribable, how could ordinary mortals like us conceive Him. We who suffer from many worldly limitations could hardly think of an abstract impersonal God. Appar does not fail to formulate a satisfactory solution to this problem. We can conceive God and know Him in his true form only by the light of his grace. The grace of God is bestowed on us spontaneously. Yet many of us are unable to avail ourselves of his generous offer. This is on account of our being victims of the threefold malam namely Anavam, Kanmam and Maya. Our bondage to these three malams or defects deprives us of the grace of God which will lead to our salvation. Purged of them, we could see God and attain moksa which is the the highest goal of human life. The phrase 'அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்' in Appar's hymn means that God will manifest only to those worthy of His grace. Manikavasagar also holds the same view when he sang as follows :-

'அவனருளாலே அவன் தாள் வணங்கி'
18, சிவபுராணம்

God only of His free will bestows grace to beings who are worthy of it. No one can demand grace by force or claim that he had won it by his own skill. To think so is but to betray the egoistic self The spontaneity with which grace is showered on mortals who have attained the ripe gnana or knowledge is well expressed in a short venpa by Umapathi Sivachariyar.

தாமே தருமவரைத் தம்வலியினற் கருத
லாமே யிவனு ரதற்கு— 80, திருவருட்பயன்.
Since Appar is convinced that God is not what others (who have been granted His grace) describe Him to be and he does not believe in worshipping God in any form, he does not want us to be misguided in our concept of God by those who see God in a particular colour, form, place or regard him as having attributes.

Today we find the existence of people belonging to different religions. Different religions had arisen because of the attempt to define God in the light of the experiences undergone by the prophets of each faith. If only they had acquiesced in the philosophic truth of saint Appar that God is above human analogy or description, the universe as a whole would think in terms of a common God. Then the fundamental truth that God is one, would have been reached.

" a person who is Convinced that everything is done by the will of god, feels himself to be a mere tool in His hands. He is then free from all bondage even in this very life. " Thou doest Thy Work, Lord, but man says " I do it "
— **Sri - Ramakrishna**

when the grace of almighty descends on any one he immediately understands his mistakes; knowing this, you should not dispute.—**Sri - Ramakrishna**

VIVEKANADA'S MESSAGE OF UNIVERSALISM

SWAMI PREMATMANANDA

(RAMAKRISHNA MISSION — CEYLON BRANCH)

' as long as I live so long do I learn '

Swami Vivekananda learnt the message of universalism sitting at the feet of his master, Sri Ramakrishna. Religlous harmony has been the central theme of Hinduism. In spite of this, some fanatics have at times raised discordant notes. The Rig Veda, contains the greatest declaration of religious harmony.

Truth is One but sages call it by various names. Sri Krishna, the great harmoniser declares in the Bhagavat Gita: "In whatever way men approach me the Supreme Spirit, even so do I accept them. Whatever path they choose leads to me alone." Many of us possess the mentality of the proverbial frog in the well which considers the well to be larger than the ocean, and wants to continue living in it. This is due to ignorance.

At a famous meeting of the Free Religious association of America held in Boston during the latter half of the 19th century, a somewhat over-zealous Christian minister quoted some passages from the Christian gospels and added that those could not be matched in the sacred books of any of the other religions. At this point, the great American Transcendentalist, Ralph Waldo Emerson, who was well-acquainted with Indian thought rose and said quietly: "The gentleman's remark only proves how narrowly he has read."

Thoughts influence one another. Through contact with other religions we can all appreciate the practical religious ideal of Zoroastrianism, the living faith in God of Judaism, the burning love of Christ for God and man expressed through the social service of Christianity, the religious fervour and democratic spirit of Mohammed, the ideal of living in harmony with the Cosmic Spirit proclaimed by Lao Tse, the stabilizing and humanizing moral and social ideal of Confucius, the message of righteousness and peace of Buddhism and the ideal of potential divinity of man and the spirit or unity-in-diversity of Hinduism.

In the Parliament of Religions held in Chicago in 1893 Swami Vivekananda Proclaimed:- "If there is ever to be a universal religion, it must be one which will have no location in place or time; which will be infinite, like the God it will preach, and whose sun will shine upon the followers of Krishna and of Christ, on saints and sinners alike; which will not be Brahmanic or Buddhistic, Christain or Mohammedan,but the sum-total of all these and still have infinite space for development; which in its catholicity will embrace in its infinite arms, and find a place for every human being. It will be a religion which will have no place for persecution or intoleranc in its polity, which will recognize divinity in every man and woman, and whose whole scope, whose whole force, will be centred in aiding humanity to realise its own true, divine nature. The Christian is not to become a Hindu or a Buddhist, nor a Hindu or a Buddhist to become a Christian. But each must assimilate the spirit of the others

and yet preserve his individuality and grow according to his own law of growth." His concluding words were: "Help and not Fight," Assimilation and not Destruction," Harmony and Peace and not Dissension."

Religion has been the central theme, the key-note of Indian life. In spite of an amount of narrowness, there has existed in India a great universal spirit, a unique freedom of thought in the field of religion, the like of which does not exist in any other part of the world. As late as the end of the last century, Robert Ingersoll - the famous agnostic orator of America-told Swami Vivekananda who had gone to America to spread the message of Vedanta: "Forty years ago you would have been hanged if you had come to preach in this country, or you would have been burnt alive. You would have been stoned out of the villages if you had come even much later."

The world today has become very small due to modern methods of travel. Nations are coming in close contact with each other and they are becoming liberal in the views about other religions. A time will come at no distant date when the Vedic dictum "Truth is one, but sages call it by various names' will be accepted by many of the religions. When that day dawns we shall have real peace on earth.

' He who has faith has all, and he who lacks it, lacks all '

He who can resign himself to the will of the Almighty with simple faith and guileless love realises the Load very quickly

— **Sri Ramakrishna**

THE ANNUAL REPORT

I consider it a rare privilege in assessing the activities of the Hindu Students' Union for the eventful period from July to December 1959. We the members of the Hindu Students' Union of the University of Ceylon at Peradeniya, are indeed proud that we have been able to conduct the union's activities so successfuly. But our activities had to be curtailed due to the ruling of the students' welfare committee. Until now we were following the academic year and from next year onwards we are to follow the calender year; and as such a good part of our programme for the third term had to be left out. Generally speaking we stuck to the traditional pattern as followed in previous years. But it could be stated without any exaggeration, in the short term of office allotted for us that we were able to break new ground and that our activitics excel all previous years.

As in previous years we were able to conduct the prayer meeting in an orderly manner every Friday evening. The attendence at prayer meetings had been more than satisfactory. This year's programme commenced with the blessings and lecture by Shri Satchithananda Yogi of Thapovanam, Kandy, on "Yoga for all". During the course of his talk, he made it very clear to us the need of yogic exercise and offered to give a public demonstration in the University premises on a later date.

Like last year we were able to celebrate the Navarathri Pooja with prayer meetings and devotional hymns' each day of the Navarathri period. During this period Shri Kailasanatha Kurukkal M. A. gave a discourse on the significance of "Sakthi Worship". On the ninth day we celebrated the "Saraswathy Pooja" on a very grand scale in the Senate Room. Although we did not have a satisfactory venue to celebrate the Saraswathy Pooja, it turned out to be a complete success. Prof. T. Nadarajah, the Patron cum Senior President of our union delivered the inaugural address. Mr. Chelvanayagam M. A. spoke on the significance and importance of Saraswathy Pooja. Dr. A. Sathasivam sang devotional hymns (Devi Sutras). This was followed by singing of devotional songs with musical accompaniments and distribution of Prasadam. The Hindu Students' Union is indebted to Messers V. Chelvanayagam, Kailasanatha Kurukkal, A. Kanagasabapathy and Dr. A. Sathasivam for the invaluable help they rendered in making the Saraswathy Pooja a success. I should thank all the members of the Hindu Students' Union, specially the ladies, for the immense help given and keen interest taken in making this a success.

The pilgrimage to the Historic Muneeswaram Temple in Chilaw was a fitting climax to the Union activities this year. A party of fourty-seven students accompanied by Dr. and Mrs. A. Sathasivam of the Tamil Department made this pilgrimage on the day following Saraswathy Pooja. After witnessing the special pooja in the morning we left Chilaw for Negombo. We were given a cordial welcome and a warm reception by the Young Men's Hindu Association (Y.M.H.A.) of Negombo. They entertained us at lunch and at tea. The president of the Y. M. H. A. in his address outlined the

activities of the Association. He concluded his address by stating that the Association was able to celebrate its Silver Jubilee last year. On behalf of the members of the Hindu Students' Union I wish to convey my sincere thanks and well wishes to the Y. M. H. A. Negombo for the hospitality accorded to us. A special mention should be made of its Patron Mr. A. Nallathamby, for the services rendered by him for the cause of Hinduism. Finally it should be incomplete if I fail to mention the co-operation extended to our committee by Shri Kailasanatha Kurukkal, Dr. A. Sathasivam and the members of the union to make this pilgrimage a success. We were able to revive an old practice, of holding benefit shows, which had been absent in the past few years. We screened the film, " Andronocles and the Lion " Benard Shaw's immortal play, in the University Arts Theater. I take the opportunity of thanking all those who helped the committee in making this a success.

A novel feature of the Union's activities this year was the screening of free documentary films on Wednesdays. We had four occasions on which the following films were screened. They are Glory of Parathisthan ; Golden River (Kaveri) ; Industrial Bihar ; Bharatha Natyam ; Sangeetha Bharat ; Buddha Jayanthi Celebration ; Indian Independence ; Cave temples of South India ; Shanthi Niketen; Handicrafts of Travancore ; Kashmir Looks Ahead ; Rajasthan ; Nargarjuna Konda and The Indian President's Visit to Ceylon. These films were of cultural and religious significance. The noteworthy feature of these films is that they helped to bring a closer understanding between the various religious sects. Many of these films depicted the life and teachings of Lord Buddha. For the first time in the history of the Union, Hindu devotional songs were played before the screening of these Indian documentaries. We sincerely thank the Indian High Commission in Ceylon, for kindly lending us these films and do hope they would extend this kind help in the future too.

We had the opportunity of listening to Dr. W. Balendra on " The future of Hinduism in world civilization ". Dr. Balendra in his discourse explained that in a period of rivalry, mutual hatred, personal jealousy, cut-throat competition, and in an age of atomic power, the part played by Hindu philsosophy and how Dr. Radhakrishnan, Pandit Nehru and Rajagopalachchari, the living monuments of Hindu Philosophy are maintaining the civilization that India has built up despite serious threats from all quarters. On a later date we had the pleasure of listening to an instructive talk by Mr. A. Thetchanamoorthy C.C.S. on " Religion for modern age ". In the course of his lecture he pointed out that in the scientific age when people doubted the existence of God and the need for religion, how religion could be fashioned practically to suit the modern age. On a subsequent date we had the distinguished Sir Kandiah Vaithianathan addressing us on " The basic principles of Hinduism ". As the audience was graced by the presence of members of other religious bodies too, Sir Kandiah Vaithianathan, happily preferred to speak in English. During his address he stated the basic principles of Hinduism as a whole in simple and clear manner. He went on to deduce the Hindu philosophy from Thirukkural and showed how it had bearings upon all aspects of human life in relation to religion. The series of talks were concluded with the address by Swami Prematmanandaji of Ramakrishna Mission (Ceylon Branch) on the

life and teachings of Shri Ramakrishna. In the course of his lecture he pointed out the chief incidents of note in Shri Ramakrishna's life and went on to explain the functions and duties performed by the Ramakrishna Mission all over the world. On behalf of our Union, I wish to convey my sincere thanks to those gentlemen for having readily consented to address our Union despite the pressure of laborious work ahead. Generally speaking the attendence at meetings were satisfactory and on many occasions there were well-packed audiences.

Although we did not have the opportunity of listening to Pithukuli Murugadas' 'Kaladchepam' in person we were fortunate enough to listen to the tape-recording of it. This was made possible by the kind help of Shri Satchithananda Yogi, of Thapovanam, Kandy. We had it played on two occasions. Pithukuli Murugadas, the living devotee of Lord Murugan in the course of his Kaladchepam went on to explain the significance of Lord Murugan worship which was studded with devotional hymns. This was followed by distribution of prasadam. Large crowds turned up each day. We sincerely thank Dr. A. Sathasivam and all others who helped us to make this a complete success. We look forward to their kind help and co-operation in the future too.

The ever long ambition of having a bronze statue of Lord Nadaraja (in dancing position) has come close to reality due to the untiring efforts of Messers V. Chelvanayagam and Kailasanatha Kurukkal ; who in co-operation with the committee gave the final touches to the project. The order has been already placed by Kailasanatha Kurukkal with a firm in South India, on behalf of the Union ; and we expect that by March, next year, it would be about two feet high and would cost asout Rs. 400 which would be met out of the Shrine Room Fund.

The other aspect is the urgent need of a library for our union. The union was able to purchase a book case this year. Prof. T. Nadaraja, had kindly consented to devote a section of the Law Library for our need. We are proud to say today that we have a library of our own. I do sincerely hope that it would function regularly next year.

Now that our problem of finance was overcome to some extent by the annual aid given by the Governmen through the Hindu Religious Advisory Committee, the pressing problem of the need for a shrine room confronts us. I do hope the future office bearers would take this problem to heart and summon the old boys of the Union and other leading Hindu Religious workers to discuss the possibility of having a shrine room built to serve the Hindu Community in the campus. At present our prayer meetings are held in a lecture room of the Geography Department for the use of which we express to Prof. Kularatnam our sincere gratitude.

Apart from these, initial arrangements were finalised for the following activities which could not be worked off by us due to the unforseen ruling of the Students' welfare committee.

(1) An Inter-faculty debate (Arts and Science) on " Religion is a conspiracy by the clergy to deceive the common man".

(2) The Annual Parliament of Religion.

(3) The proposed pilgrimage to South India during the third term vacation.

I hope that the in-coming office bearers would carry out these activities initiated by us.

A possibility of presenting a report of crowded activities of our union would not be possible if not for the untiring efforts and necessary guidance rendered to us by our Senior President cum patron of the union Prof T. Nadaraja, our Senior Treasurer Mr. V. Chelvanayagam and Dr A. Sathasivam. We also thank Dr. A. Sathasivam and Mr. S. Muthulingam for the help they have rendered in making the prayer meetings a success. At the same time we are also sorry to have lost the services and guidance of a devoted Hindu, Mr. S. Muthulingham who left us by the end of the first term to further his studies. We wish him all success and hope he would be back with us in the near future.

Hony. Secretary,
KANDIAH SATCHITHANANTHAN

OFFICE-BEARERS—1959 [JUNE--DECEMBER]

Patron, Senior President	:	Prof. T. Nadarajah
Senior Treasurer	:	Mr. V. Chelvanayagam, M. A.
President	:	Mr. P. Puvanarajan
Vice - President	:	Mr. J. Senthilnathan
General Secretary	:	Mr. K. Satchithananthan
Junior Treasurer	:	Miss. T. Ponnampalam
Joint Editors	:	Mr. S. Ganeshanathan Miss. G. Sivasubramaniam
Librarian	:	Mr. S. Sivasamboo
Unofficial Committee Members		Miss. A. Vaithilingham Miss. S. Changarapillai

A WORD OF THANKS

We wish to thank all those who made contributions to this magazine, however large or small. The success of this magazine is due to the ungrudging help extended by most of our members and well wishers.

We are greatly indebted to our Senior President Professor T. Nadarajah for the most valuable assistance and able guidance he gave us, at all time. We also thank our Senior Treasurer Mr. V. Chelvanayagam M.A. for his kind help and guidance.

Thanks are also due to our Advertisers, and we sincerely appeal to our readers to patronise them whenever and wherever possible.

Our thanks are also due to the manager Mr. Wilfred of the Eelanadu Limited press, Jaffna, for the good publication of this magazine.

Last but not least we owe our gratitudes to all those who have helped us.

EDITORS.

THE COMMITTEE OF HINDU STUDENTS' UNION

1959 — '60.

Seated: (*Left to right*) Mr. S. Senthilnathan (Vice-President) Prof. T. Nadarajah (Senior President) Mr. P. Puvanarajan (President) Sir Nicholas Attegalle (Vice-Chancellor) Miss G. Sivasubramaniam (Editor) Mr. V. Chelvanayagam, M. A., (Senior Treasurer) Mr. K. Satchithanandan (Gen-Secy).

Standing: (*Left to right*) Miss S. Changarapillai (unofficial Committee Member) Miss T. Ponnampalam (Junior Treasurer) Mr. S. Ganeshanathan (Editor) Mr. S. Sivasamboo (Librarian) Miss A. Vaithilingam (unofficial Committee Member).

தமிழ் நாட்டு ரசிகர்களின் இதயங்களைக் கவர்ந்த இன்பத் தமிழ்க் காவியம், இன்னூட்டு மக்களுக்கும் எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கப்போகிறது.

வெகு விரைவில்! எதிர்பாருங்கள்!!

சினிமாஸ் திரைகளில்

சீரும் சிறப்புமாக ஒரு குடும்பம் வாழ்கின்றது.....
ஆனால்.....
கபட உள்ளங்கொண்ட ஒரு கயவன் சேர்க்கையால்
சிரித்து சீலித்த குடும்பம் சீர் குலைந்து போகின்றது.....
அதனால்.....
எல்லோருடைய பாகங்களும் பிரிக்கப்படுகின்றது.

பின்பு நடந்தது என்ன? கண்டு களிக்கத் தயாராகுங்கள்.

★ நடிகர்திலகம் சிவாஜி கணேசன்
★ நடிகவேள் எம். ஆர். ராதா
★ பி. சரோஜாதேவி
★ என். லலிதா
★ டி. எஸ். பாலையா
★ எம். வி. ராஜம்மா
★ பத்மினி பிரியதர்சினி
★ எம். என். நம்பியார்
★ எஸ். வி. சுப்பையா

— ஆகியோர் அதியற்புதமாக நடித்த —

சரவணை பிலிம்ஸ்

★★ பாகப் பிரிவினை ★★

டைரக்ஷன்:
ஏ. பீம்சிங்

சங்கீதம்:
விஸ்வநாதன் ராமமூர்த்தி

ஓம்

இந்து தருமம்

1959-'60

ஆசிரியர்கள்:

செல்வி ஞானு சிவசுப்பிரமணியம்

சொ. கணேசநாதன்

இந்து மாணவர் சங்கம்

இலங்கைப் பல்கலைக் கழகம்

பேராதனை.

பொருளடக்கம்

			பக்கம்
1	இந்து தர்மம்	.. யோகி சுத்தானந்த பாரதியார்	
2	ஆசிரியர் எழுது கோலிலிருந்து		1
3	அறம்	சைவப்புலவர் த. குமாரசாமிப்பிள்ளை	3
4	யாஅம் இரப்பவை	.. பண்டிதர் க. பொ. இரத்தினம்	6
5	நிஜனவு நல்லது வேண்டும்	.. சி. தில்லைநாதன்	9
6	இலங்கையில் இந்து சமயம்	.. குல. சபாநாதன்	12
7	எம்பெருமான் தூது செல்லாயோ		16
8	மாணிக்கவாசகரின் ஆத்மீக யாத்திரை	.. ச. அம்பிகைபாகன்	18
9	சகலகலா வல்லி	.. ராஜபாரதி	22
10	மருதம்	.. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை	26
11	பத்தி	.. ஜெ. செந்தில்நாதன்	29
12	சைவத்தின் இரு கண்கள்	.. அருள்	32
13	ஆதிகால மனிதனும் அவன் கண்ட சமயமும்	.. பண்டிதை பத்மாசனி அம்மாள் இராசேந்திரம்	37
14	மாணிக்கவாசகர் ஒரு வழிகாட்டி		39
15	உதிர்ந்த மலர்		42
16	பூசலார் புதுமைக் கோயில்	.. ஆ. கந்தையா	44
17	குறிப்பிட வேண்டியவை	..	46
18	இந்த மலர்	..	47



தோத்தீரம

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள்தணேடு முடனுய்
வாண்மதிவன்னிகொன்றை மலர்சூடிவந்தெ
னுளமே புகுந்தவதனல்
ஏழ்கடல்சூழிலங்கை யரையன்றனேடும்
இடரான வந்துநலியா
ஆழ்கடல்நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

இலங்கைக் கோவிலில் இந்து தரும தீபம்
கூடர் விட்டொளிர்க.

இந்து தர்மம்

— யோகி சுத்தானந்த பாரதியார் —

ராகம்: **கல்யாணி** தாளம்: **ரூபகம்**

இந்துதர்மம் எங்கள் தர்மமே
இகபரசுபமர்மமே—ஓம் (இந்து)

அனுபல்லவி

சிந்தைக்கினிய திருவாசகம்
திருமந்திரம் திருக்குறள் கீதை
திருப்புகழ் சிவஞான போதம்
திருவாய் மொழி
யுருவாய் வளர் — (இந்து)

சரணம்

சரியை கிரியை யோக ஞான
சாதனங்களைத் தூக்கி
சகலாத்தும வித்தியாசிவ
சத்துவங்களை விளக்கி
அரிய உயிரை இறை நிலைக்கே
உரியதாக மாற்றி
அன்பு மலர்ந்தே அருள் கனிந்தே
இன்பரசம் மொழியமுதச் சோலை (இந்து)

ஒன்றே கடவுள் ஒன்றே யுலகம்
உருகுலம் உயிர்த்தொகையே
உள்ளக்கோயில் உள்ளே விளங்கும்
உண்மை யறிவுச் சுடராம்
நன்றே யான்ம வொருமை கூடி
நின்றே மனதை ஸன்றே
நானது ஸனு ஞானனந்த
தேனையுண்ணச் செய்யுந் துய்ய (இந்து)

இந்து சமயம் எங்கள் சமயமே
இதகைப்புற மெல்லா மதமும்
இந்துதர்மம் எங்கள் தர்மமே
எல்லா உலகும் இணைந்ததாமே (இந்து)

இந்து தருமம்

மலர் 4 | அன்பருக்கு அன்பனே | 1959—60

ஆசிரியர் எழுது கோலிலிருந்து.....

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்

எனக் கனிந்து வேண்டுகிறார் அருணகிரிநாதர்.

ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குபவன் இறைவன்; அவ்விசை இன்பமாம் இறையைப் பண்ணமைந்த பக்திப் பாமாலைகள் பல சூட்டி வீடு பேறெய்திய இந்து சமய அடியார்களின் தொகை அநந்தம்.

பல்லவர் காலத்திலே சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தேவார, திருவாசகப் பிரபந்தமாம் அமுத மழையால் பரம்பொருளை அபிஷேகம் செய்தனர். சோழர் காலத்தும் நாயக்கர் காலத்தும் வாழ்ந்த மன்னரும் மக்களும், அப் பக்திப் பாடல்களைப் பொன்னே போற் போற்றி வந்தனர். கோயில்களில், திருமுன்னர் பூசை நடக்கும் காலத்தும், விழாக் காலத்தும், ஓதுவார்கள் தோத்திரப் பாடல்களை வாத்திய இசையுடன் ஓதினர்.

இப்படியாகப் பண்ணமைந்த தோத்திரப் பாடல்கள், அன்றைய இந்து மதத்தினர் சமய வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்கள் உள்ளங்களில் இறை பக்தியை வளர்த்தன. **ஆனால் இன்று பக்திப் பாடல்களின் நிலை என்ன?**

தேவார திருவாசகங்களைப் பாடுவது வெறும் 'கருநாடக' வழக்கம்; சினிமாப் பாட்டுக்கள் பாடுவதே நாகரிகம், என்ற போலி எண்ணம் கொண்டு பெருமைப்படுகின்றது இன்றைய இந்து சமுதாயம் — என்னே எம்மவர் மதியீனம்? பெயருக்காகவாவது ஒரு தேவாரம் தெரியும் என்று சொல்ல முடியாத நிலையில் எம்மிடையே எத்தனையோ இந்துக்கள் இருக்கின்றனர் என்று கூற நாம் மிகவும் வருந்துகிறோம் — ஆனால் அதே 'நபர்கள்' ஒன்றல்ல, இரண்டல்ல இருபது சினிமாப் பாட்டுக்களை ஒரே அடுக்கில் பாடி முழக்கத் தயாராயிருக்கின்றனர். பெரியவர்கள் மட்டுமா? மழலை மொழி மாறாத பச்சிளம் பாலகர்கள் வாயிலும் பொருளற்ற 'டப்பாப் பாட்டுக்கள்' நர்த்தனம் புரிகின்றன என்றால், எமது சமயப் பாடல்களின் பாழ்பட்ட நிலையைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? இந்நிலை எமது சமய மேன்மையை எவ்வளவு தூரம் பாதிக்கின்றதென்பதனை இந்து மக்கள் என்று உணர்கிறார்களோ, அன்றுதான், எமது சமயப் பாடல்களின் மறுமலர்ச்சித் திருநாளாகும்.

இன்று நம் ஈழநாட்டிலே இந்து சமயப் பக்திப் பாடல்களாயின் எவை என்று அறியாது தகராறு செய்யும் அறிவிலிகளும் சிலர் உள்ளனர் என்றால், — இதைப் பார்த்து நாம் அழுவதா? சிரிப்பதா?

பத்தாம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் நாட்டிலிருந்து இறைவன் புகழைப் பாடிய சமய குரவர்களின் பாடல்களைப் பன்னிரு திருமுறைகள் எனத் தொகுத்துக் கொடுத்தார் நம்பியாண்டார் நம்பி; இப்பன்னிரு திருமுறைப் பாடல்களை மட்டுமே நாம் நமது பக்திப் பாடல்கள் எனக் கொண்டு பாராயணம் பண்ண வேண்டுமென்பது ஒரு சிலரது குறுகிய நோக்கு; அப்படியாயின் பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் இந்து மதம் வளர்ச்சியடையவில்லையா? பக்தர்கள் புதிய புதிய பாமாலைகளை இறைவனுக்குச் சூட்டவில்லையா? அருணகிரிநாதர் பாடிய திவ்யமாம் திருப்புகழ் மாலைகள் தெய்வீகப் பாடல்களில்லையா? இராமலிங்க சுவாமிகளின் அருட்பாக்கள் கல் நெஞ்சையும் கசிய வைக்காவா? யோகர் சுவாமிகளின் நற்சிந்தனையாம் நற்றமிழ் பாடல்கள் ஊனை உருக்கவில்லையா? இன்றைய நாமாவளிகள் தான் எத்தனை பக்திப் பரவசமூட்டவல்லன?

நாம் இப்படிக் கூறுவதால் பன்னிரு திருமுறைகளை மறுக்கிறோம் என் பதில்லை. – பழமையைப் போற்றுங்கள். ஆனால் அதனோடு புதுமையையும் சேர்த்து ஏற்றுக் கொள்ளுங்கள், இதையே நாம் விரும்புவது.

இறைவன் இசைக்கு இரங்குபவன்; அவ்விசைப் பிரியனை இசையாலேயே நம் வசப்படுத்தி விடலாம்; நாம் மனத்துள் தேவாரங்களை முணுமுணுத்து விட்டால் மட்டும் போதாது; தேவாலயங்களில், நாள் தோறும் கூட்டுப் பிரார்த்தனைகளும், பஜனைகளும் நடாத்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஒவ்வொரு இந்து வீட்டிலும், குறைந்தது ஒரு கிழமைக்கு ஒரு நாளாவது, — வெள்ளியோ, ஞாயிறோ, குடும்பத்தார் யாபேரும் கூடிப் பண்ணால் பரமன் புகழ் பாட வேண்டும்; இப்படிச் செய்வோமாயின், கட்டாயமாக எம்க்கு உள்ளத் தூய்மையும், மனச்சாந்தியும் ஏற்படும்; கொந்தளிப்பு மிக்க நம் சமூகத்தினரிடையே ஒற்றுமையும் ஏற்படும்.

ஒவ்வொரு இந்துவும், தோத்திரப் பாடல்களின் உண்மைப் பொருளை உணர்ந்து, அவற்றைப் பண்ணோடு கனிந்து பாடப் பழக வேண்டும்; இனி வரும் சந்ததியாராய நம் குழந்தைகளுக்கும் அவற்றினைப் பயிற்றுவிக்க வேண்டும்; இது நாம் நமது சமயத்திற்குச் செய்யும் மகத்தானதோர் தொண்டாகும்.

" பஜனை செய்வாய் மனமே — அனுதினமும் "

அறம்

— சைவப்புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை —

" உலகமெல்லாம் இறைவன் சன்னிதானம் "

"அறத்தான் வருவதே இன்பமற்றெல்லாம்
புறத்த புகழுமில" —திருக்குறள்

அறம் என்பது மக்கட் கூட்டத்தினர் யாவருக்கும் பொதுவாக உள்ளது. அது செயலும், ஒழுக்கமும் என இருவகையால் பேணப்படும். "அற்ம் செயவிரும்பு" என்பது ஔவையார் வாக்கு. எனவே செயல் என் பதைப்பற்றி முதலில் குறிப்பிடுவாம். ஏழை கள், உறுப்புக்குறைவுடையோர், ஆற்றலில்லா தோர் முதலானவர்க்கு பொருள் முதலியன கொடுத்து உதவுதல். அதுவும் தன்னோடு தொடர்புடையார்க்குக் கொடுத்தல், பாகுபா டின்றி யாவருக்கும் ஒப்பக்கொடுத்தல், தான் நலம் பெறக்கருதிக் கொடுத்தல் எனப் பல வகையாம். இம்மூவகையிலும் சிறந்த செயல் ஒன்று உண்டு. அதுதான் கடவுட் பணிக்கும், அவன் அடியார்கட்கும் கொடுத்தல். நல்லறம் இதுவே. பதிபுண்ணிய மென்றும் சொல்லப் படும்.

"கருமத்தான் ஞானமுண்டாம்
கருமத்தைச் சித்தசுத்தி
தருமத்தாலிகந்த சித்த
சுத்தியைத் தரும நல்கும்
அருமைத்தாந்தருமத்தாலே
சாந்தியுண்டாகு மாண்ட
பெருமைத்தாஞ் சாந்தியாலே
பிறப்பதட்டாங்க யோகம்"
—பரஞ்சோதி முனிவர்

இதன் பொருள் நல்வினையினாலே ஞானம் கைகூடும். அந்த நல்வினையை, உளத்தூய் மையை அறம் கொடுக்கும். மயக்கத்தினின் றும் நீங்கிய உளத்தூய்மையை அறம் கொடுக் கும். அருமையையுடைய அறத்தினாலே சாந்தி உண்டாகும் மாட்சிமைப்பட்ட பெருமையை யுடைய சாந்தியினாலே அட்டாங்க யோகம் கைவரும். யோகத்தினாலே ஞானம் கைகூடும். பரஞ்சோதி முனிவர் கூறிய இவ்வாக்கினால் ஒருவருக்கு ஞானம் வருதற்குரிய காரண காரிய முறையை அறியத்தக்கதாயிருக்கின் றது.

"கிரியை என மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்"

என்று சைவசாத்திரங்கள் பதினென்கினுள் ஒன்றாகிய சிவப்பிரகாசத்தில் உமாபதிசிவாச் சாரியர் கூறுவதனாலும் தெளியலாம்.

"தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
ஆருளெனும் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனு மாட்சி எய்துமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்"

என்று காசிபமுனிவர் வாக்கில் வைத்துக் கச் சியப்பசிவாச்சாரியர் கூறுகின்றார். தம்மை வந்தடைந்தார் யாதானும் ஒன்றைப் பெற விரும்பின் அவற்றைக் கொடுத்து அவரது மலர்ந்த முகத்தைக் காணுதலால் வரும் இன் பம் மிகச்சிறந்ததாம். இதனை "ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவர் கூறுவர். குறிப் பறிந்து கொடுத்தலும், கேட்டபின் கொடுத் தலும், கேட்டபின்னும் தவணை வைத்துக் கொடுத்தலும் எனக் கொடுத்தலும் பலவகை யாம். இவைகளிலிருந்து மக்களாயுள்ளார் உள்ளொளியாகிய ஞானம் பெறுதலே பிறவி யின் பயனும். அந்த ஞானத்தைப் பெறுதற்கு மனம் தூயராய் அறம் செய்தலே சிறந்த வழி யாகும் என்பது தெளிவாம்.

இனி, அறம் என்பது ஒழுக்கம். தர்மம் சர என்பது வேதவாக்கு. இதன் பொருள் தருமநெறியில் ஒழுகு என்பதாம். மக்கள் ஒழுக வேண்டிய தரும நெறிகளைப் பலவகை யாக வேதங்கள் எடுத்துக்கூறுவன. அவை களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தகு திக்கும் ஆற்றலுக்கும் பொருத்தமான நெறி களை மேற் கொண்டொழுகுதல் முறையாம். அந்த அறநெறியில் ஒழுகுபவரே உயர்வான

நிலையைப் பெறுவர். "வேத நெறி தழைத் தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்றும் "உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும், நிலவு மெய்ந்நெறி சிவநெறிய தென்பதும்" என்றும் சேக்கிழார் கூறுவார். இதன் பொழிப்பு உலகில் வாழ்பவர்கள் வேதங்கள் கூறுகின்ற அறநெறியில் ஒழுகவேண்டும். அங்ஙனம் ஒழுகுபவரே மேலான நெறியை அடைவர் என்பது.

திருவள்ளுவரும் இல்லறம், துறவறம் என வகுத்து இல்லறத்தில் வாழ்பவர் ஒழுக வேண்டிய நெறிகள் இவை எனவும் துறவறத்தில் வாழ்பவர் ஒழுக வேண்டிய நெறிகள் இவை எனவும் சிறப்பியல்புகள் கூறியிருத்தலால் "அறமென்பது ஒழுக்கம்" என்பதும் அவருக்கும் கருத்தாம் என்பது அறிக. அதனை வலியுறுத்தவே ஒழுக்கமுடைமை என ஒரு அதிகாரம் கூறியுள்ளார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்று உயிரினும் சிறந்ததாக ஒழுக்கத்தைக் கூறியமையாலும் இக்கருத்துப் புலப்படும். ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரம் முழுவதும் எழுத்தெண்ணிப் படித்து மனத்திற் பதிக்க வேண்டும் என்பதும் கருதுக.

ஒழுக்கத்தினை விளக்கும் நூல்கள் பல உள்ளன. விரிவஞ்சி இங்கே சிலவே காட்டப் பட்டன. இந்துக்களில் அரசர் முதல் ஆண்டி வரையிலும் தத்தமக்குரிய ஒழுக்க நெறியை உயிரிலும் சிறந்ததாகப் பேணி வாழ்ந்தனர் என்பது முன்னைநாள் இலக்கியங்களிலிருந்து அறிகின்றோம்.

"இறைகாக்கும் வையக மெல்லாமவனை
முறைகாக்கு முட்டாச் செயின்"

"ஓர்ந்து கண்ணோடா திறை புரிந்தியார்
தேர்ந்து செய்வஃதே முறை [மாட்டும்

வேந்தர்கள் நிலையையும் அரசியல் முறையையும் வள்ளுவர் கூறுவர்.

"வேந்து மேம்பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய
[கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய
[புகன்மறவருமென
நான்குடன் மாண்டதாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், நமரெனக்கோல் கோடாது
பிறரெனக்குணங்கொல்லாது
ஞாயிற்றன்ன வெந்திற லாண்மையும்
திங்களன்ன தண்பெருஞ்சாயலும்
வானத்தன்ன வண்மையும் மூன்றும்
உடையையாகி யில்லோர் கையற
நீ நீடுவாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணியலைக்கும் செந்தில்
நெடுவேணிலைஇய காமர்வியன்றுறைக்
கடுவளிதொகுப்ப வீண்டிய
வடுவாழெக்கர் மணலினும்பலவே"

என மருதனிள நாகனார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய இப்பாடலில் பாண்டியனுக்கு அறிவுறுத்து முகமாக நால்வகைப் படையும் சிறப்புற அமைந்திருந்தாலும் அரசியல் வெற்றிப் பாடு அறநெறியை முதலாக உடையதே என்று கூறும் அருமைப்பாடு பாராட்டத் தக்கதாம். இன்னும்,

"ஆவுமானியற் பார்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலவாழ்நர்க்கருங்கடனிறுக்கும்
பொன்போற் புதல்வற் பெறுதீரும்
எம்மம்புகடிவிடுதும் நும்மரண்சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக்கொடிவிசம்பு
நிழற்றும்
எங்கோவாழிய குடுமிதங்கோச்
செந்நீர்ப்பசும் பொன் வயிரியர்க்கீத்த
முந்நீர்விழவின்னெடியோன்
நன்னீர்ப்பஃறுளி மணலினும் பலவே"

என நெட்டிமையார் பாடிய இப்பாடலில் பசு, பார்பார், பெண்டிர், பிணியுடையார், புதல்வற் பெறுதீர் எல்லோரும் உமக்குரிய பாது காப்பைத்தேடிக் கொள்க என்று போர் செய்ய முயலும் பொழுது அறநெறி கூறிய அரசன் திறம்பாராட்டியமை காண்க. இன்னும் சிலப்பதிகாரம் வழக்குரைகாதையில் கண்ணகி சென்று கோவலனைக் கொன்றது அறநெறி திறம்பிய செயல் என அறிவுறுத்திய பொழுது,

"மெய்யிற் பொடியும் விரித்த
கருங் குழலும்

கையிற்றனிச் சிலம்பும்
கண்ணீரும்—வையக்கோன்
கண்டனவே தோற்றுனக் காரிகை
தன் சொற்செவியி
லுண்டளவே தோற்றுனுயிர்".

வீரபத்தினியாகிய கண்ணகியின் உருவைக் கண்ட அளவிலே தோல்வி யடைந்தான். சிலம்பையுடைத்து மாணிக்க மணிமுகத்தில் தெறிக்கக்கண்டு,

"பொன்செய் கொல்லன்றன் சொற்கேட்ட
யானேவரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென் புலங்காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென்
னுயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே"

என்று சிலப்பதிகாரம் கூறும்வழி அறநெறி தவறியதால் உயிரைவிடுத்த பாண்டியன் நெடுஞ்செழியனின் அறநெறி வாழ்வின் பெருமை எத்துணைச் சிறப்புடையது.

"ஓடிய தேரின் கீழ்உயிர்போன கன்றுலே
நீடுபெரும் பாவமின்றே நீங்குமென—
நாடித் தன்
மைந்தனையும் மூர்ந்தோன் வழக்கே
வழக்காக"

என்று போற்றிப் பரிபாடை என்னும் சைவசாத்திரத்திற் கூறிய வரலாற்றைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் விரித்துக் கூறுகின்றனர்.

"ஒரு மைந்தன்றன் குலத்துக்குள்ளா
னெனபது முணரான்
றருமந்தன் வழிச் செல்கை கடனென்று
தன் மைந்தன்
மருமந்தன் றேராழியுய வூர்ந்தான்
மனு வேந்த
னருமந்த வரசாட்சி யரிதோமற்
றெளிதோதான்"

தருமத்தின் வழி மனிதர் செல்ல வேண்டுவது இருக்க தான் வாழும் நெறியில் தர்மம் வந்து தன்னைச் சேரவேண்டும் என்று கருதிச் செய்த மனுநீதிகண்ட சோழனுடைய பெருமை எத்துணைச் சிறந்தது.

ஒரு புருவின் பொருட்டுத் தன் உடலையே அரிந்து தராசிலிட்ட சிபிச்சக்கரவர்த்தி முதலானோர் வரலாறும் நினைவு கூர்க.

"பொய் கடிந்தறத்தின் வாழ்வார்
புனற் சடைமுடியார்க் கன்பர்
மெய்யடியார்கட் கானபணி செய்யும்
விருப்பினின்றூர்
வையகம் போற்றுஞ் செய்கைமலி
யறம் புரிந்து வாழ்வார்
சைவ மெய்த்திருவின் சார்வே
பொருளெனச் சாருநீரார்"

ஏழைநிலையில் மண்ணினுல் பாண்டம் வனைந்து சீவனம் செய்த திருநீலகண்ட நாயனர் பொய்யை நீக்கி அறநெறியில் வாழ்ந்தார். இறைவனிடத்தும் அடியாரிடத்தும் அன்பு பூண்டார் என்று சேக்கிழார் அடிகள் கூறுகின்றனர். இத்துணையும் கூறியதிலிருந்து அறம் என்பது தருமம் செய்யலும் ஒழுக்கநெறியும் என இருவகையாலும் கொள்ளப்பெறும். இந்த உண்மைகளை பரஞ்சோதி முனிவர், வேதவாக்கு, உமாபதி சிவாசாரியர், கச்சியப்ப சிவாசாரியர், சேக்கிழார், திருவள்ளுவர், மருதனினநாகனர் நெட்டிமையார், இளங்கோவடிகள் முதலான பன்நூலாசிரியர்களின் வாக்குகளால் அரசர், முதல் ஏழை வரையும் "அறம்" என்னும் ஒழுக்கத்தை பேணிவாழ்ந்தனர் என்பது தெளிந்து கொள்ளத்தக்கது.

விணைப்பயனில் பற்றற்றவனுய், நித்திய
திருப்தனுய் எதையும் சாராதவனுய் இருப்பவன்
கர்மத்தில் ஈடுபட்டாலும் அவன் கர்மம்
செய்தவன் அல்லன்

— பகவத்கீதை

யாம் இரப்பவை

— பண்டிதர் க. பொ. இரத்தினம் —

"அப்பனே: முருகா: சண்முகா: என் மகன் இந்த முறை பரீட்சையிற் சித்தியடைய அருள் புரிவாய். உனக்கு மாவிளக்கு எரிப்பேன்" என்று ஒருதாய் முருகனை வேண்டுகிறாள்.

"தாயே! ஈசுவரி! என்மகளுக்கு ஒரு நல்ல நாயகன் கிடைக்க அருள் செய்வாய். அவளுடைய திருமணம் நிறைவேறியவுடன் நான் உனக்குப் பெரியதொரு அபிசேகம் செய்விப்பேன்....." இது வயதுவந்த மகளை வைத்து ஏங்கிக்கொண்டிருக்கும் வேறொரு தாயின் வேண்டுகோள்.

"என் வயிரவக் கடவுளே! பெருமானே: இன்று களவெடுக்கும்பொழுது நான் பிடிபடாமல் தப்பவேண்டும். எனக்கு நல்ல பொருள் கிடைக்கவேண்டும். உனக்கு ஒரு மடைபோடுவேன்" இஃது ஒரு கள்வனின் விண்ணப்பம்.

"அப்பனே சிவா! சூதாட்டத்திலே இன்று நான் வெல்லவேண்டும். உன்னை நம்பியே இன்று போகிறேன். இன்றைக்கு நான் வென்றால் வெற்றிப் பணத்தில் அரை வாசிக்கு உனக்கு ஒரு பூசை செய்வேன்" என்று சூதாடச் செல்வோன் இரக்கிறான்.

"ஓம் விநாயகா! விக்கினேசுவரா! எங்கள் குலதெய்வமே! இந்தமுறை நான் தேர்தலிலே வெற்றிபெறுதற்கு உதவிபுரிவாய். உனக்கு ஓர் அலங்காரத் திருவிழாச் செய்வேன். அப்பனே உன்னையே நம்பினேன்; கைவிட்டுவிடாதே" இது பாராளுமன்றத் தேர்தலிலே கண்ணைமூடிக்கொண்டு குதித்த சுயேச்சையாளர் ஒருவரின் பிராத்தனை.

"என்கடவுளே: ஐந்து கரத்தானே: ஆனைமுகத்தானே: உன்னருளினாலேதான் நான் இந்தத் தேர்தலிலே இறங்கியிருக்கிறேன். என்னை வெல்லச்செய்வாய்: உனக்குச் சங்காபிசேகஞ் செய்வேன்," என்று பாராளுமன்றத் தேர்தலிலே போட்டியிடும் ஒருவர் பிள்ளையாரை வேண்டுகிறார்.

பிள்ளையாருக்கு ஒரு பெரிய இக்கட்டான நிலை உண்டாகிவிட்டது. பாராளுமன்றத்தேர்தலிலே போட்டியிடும் இந்த இருவரும் ஒரு தொகுதியிலே ஒருவரோடொருவர் போட்டியிடுகிறார். வேறுஞ் சிலர் இவர்களோடு போட்டியிடுகிறார்கள். பிள்ளையாருக்கு இரண்டுபேர் நேர்த்திக்கடன் செய்ய முன்வந்திருக்கிறார்கள், இல்லை, "சந்தோசம்" கொடுக்க விரும்புகிறார்கள். உண்மையான நிலைமையின்படி இந்த இருவரும் வெல்ல முடியாது. ஒருவருக்குப் பிள்ளையார் உதவி செய்தால் மற்றையவர் தோற்றுவிடுவார். இருவரும் பத்தர்கள், பிள்ளையாரை இரந்து இரந்து வேண்டுகிறார்கள்; பிள்ளையார் என்ன செய்யலாம்? கடவுளாலும் தீர்க்க முடியாத பிரச்சினை இது.

சூதாடுகிறவரும், களவெடுப்பவரும் கூடக் கடவுளுக்குப் பங்குகொடுத்து வெற்றி அடைய எண்ணுகிறார்கள்.

சைவசமய ஒழுக்கம் - கடவுள்வழிபாடு - இந்த நிலையை இப்பொழுது அடைந்துவிட்டது. இதை அபிமானத்தால் மறைப்பதோ மறுப்பதோ அறிவுடைமையாகாது. இந்தப் பிறழ்ச்சிக்குக் காரணத்தை அறிந்து அதை நீக்குதல் வேண்டும்; தகுதியானவர்கள் நீக்குதற்குரிய செயல்களில் ஈடுபடல் வேண்டும்.

பொதுமக்களுக்கு நன்கு புரியாத சித்தாந்தக் கருத்துக்களையும் வடமொழிச் சுலோகங்களையும் 'விளாசுவதால்' மட்டுஞ் சைவத்தை வளர்த்தல் முடியாது. இச்செயல் சைவத்தின் அடித்தளத்தையே

அசைத்து விட்டது. சைவத்தின் பெயராலே சமுதாயத்திலே பல கொடுமைகளும் அநீதிகளும் நடைபெறுகின்றன. இவற்றை நீக்குவதற்கும், உலகெங்கும் சைவம் விளங்கச் செய்தற்கும் இப்பொழுதே துணிந்து செயலாற்றல் வேண்டும்.

சைவம் சிவசம்பந்தமானது. சிவமும் அன்பும் ஒன்று. எனவே சைவநெறி அன்பு நெறி. உலகத்திலுள்ள பெரியார்களும் சமய நெறியாளர்களும் அன்பை வியந்து போற்றியுளரெனினும் சைவநெறிபோல அன்புடன் இரண்டறக் கலந்ததொரு சமயநெறி வேறில்லை எனலாம்.

அன்பே யென் அன்பே யென்று அன்பால், [அழுதிட்டு
அன்பே அன்பாக அறிவழியும் அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவர்ச்சிகளை செய்யு [மது
சாற்றும் பழமன்றே தான் ''
—திருக்களிற்றுப்படியார்.

இத்தகைய அன்புக்கு மாறுன செயல்களை எல்லாம் சைவர்கள் ஒழித்து விடல் வேண்டும். சைவர்களுடைய எண்ணம் சொல், செயல் யாவும் அன்பு நெறியின் பாற்படல் வேண்டும். சைவக்கிரியைகள் யாவும் அன்பு நெறியோடிசைதல் வேண்டும்.

இன்று இந்த அன்பு நெறிக்கு மாறுன பல செயல்கள் சைவத்துக்கு மாசு விளைக்கின்றன. சைவத்தின் பெயரால் தன்னலவாதிகள் பிறரைச் சுரண்டிப் பிழைக்கவும், சிலரைத் தாழ்த்தி வைக்கவும் முயல்கின்றனர். உண்மையாகச் சைவம் வாழ வேண்டுமெனில் சைவத்தின் பெயராலே சாதி வேற்றுமை பாராட்டுவதும், தீண்டாமை போற்றுவதும் உடனே ஒழிக்கப்படல்வேண்டும். ''தாழ்த்தப்பட்டோர்'' என நாம் அறியாமையாற் பிரித்து வைத்த மக்களை எவ்வித வேறுபாடுமின்றி நமக்குச் சமமானவர்களாக நாம் கொள்ளுதல் வேண்டும்; நம் உள்ளத்திலேயுள்ள ஆணவத்தை அகற்றி அன்பை நிறைத்து அனைத்துயிரையும் நம்மைப்போல் மதித்து நடுக்கும் அருளினை நல்குமாறு கடவுளை இரத்தல் வேண்டும்.

அன்பும் அருளும் பொலியவேண்டிய திருக்கோயில்களிலே ஆட்டையும், கோழியையும் வெட்டும் அசுரத்தன்மையை ஒழித்தல்வேண்டும். குருட்டு நம்பிக்கையை நீக்கி மக்கள் உண்மை அறிவுபெற வழிவகுத்தல் வேண்டும்.

கையிலுள்ள பணத்துக்குத்தக்க துண்டு வாங்கி அருச்சனை செய்விக்கும் முறையை உடனே அகற்றல்வேண்டும். இந்த வியாபாரமுறை, 'கடவுளுக்கு கைக்கூலி கொடுக்கிறார்கள்' என்ற பழிப்புரை பரம்புதற்கு வழிவகுக்கிறது. கடவுளின் அருளைப் பெறுதற்கு ஒருவருடைய பணநிலை காரணமாயிருத்தல் கூடாது. செல்வர்கள் கூடிய பெறுமதியுள்ள அருச்சனைத் துண்டையும், வறியவர்கள் குறைந்த பெறுமதியுள்ள அருச்சனைத் துண்டையும் வாங்கும்பொழுது உயர்வு தாழ்வு இடம்பெறுகின்றன. கடவுளருளுக்குக் கூடப் பணம் காரணமாகிப் பணமே கடவுளிலும் பெரியதாகிவிடுகிறது.

கையிலே ஒரு செம்புக்காசு இல்லாதவரும் கோவிலிலே சென்று எவ்வித வேறுபாடுமின்றிச் சமமாக வணங்கத்தக்க சூழ்நிலையை நாம் திருக்கோயில்களிலே உண்டாக்குதல் வேண்டும். ''யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை'' என்று திருமூலர் காட்டிய நல்வழியை இனியாகுதல் நாம் கடைப்பிடித்தல் வேண்டும்.

மக்களுக்கு விளங்காத வடமொழிச் சுலோகங்களை விட்டுவிட்டுத் தேவார திருவாசகங்களை - திருமுறைகளை - ஓதி அருச்சனை செய்தால் அன்பும், அருளும், அறமும் சிறக்க வழி உண்டாகும், ''தமிழோடிசைபாடல் மறந்தறியேன்'' என்னும் நாவுக்கரசர் திருவாக்கை மறந்துவிட்டோம். நாயன்மார்கள் சைவத்தைத் தமிழோடு பிணைத்தே வளர்த்தார்கள். இதனாலேதான் மக்கள் உள்ளத்தை அவர்கள் ஈர்த்து ஈர்த்து இன்புறுத்தினர். அவர்கள் காட்டிய இவ்வழியைத் தான் நாம் கடைப்பிடித்தல் வேண்டும்; இனித் தயங்காது கோவில்களிலே தமிழோடிசை பாடல் வேண்டும். வழிபடுவோர் யாவருமே அருச்சனை செய்யும் வாய்ப்பும் உண்டாகல் வேண்டும். கூட்டு வழிபாடும், நாயன்மார்கள் காலத்திலிருந்ததுபோல் இப்பொழுது

நடைபெறல் வேண்டும். இவ்வழிபாட்டின் போது அருட்பாடல்களையே - சிறப்பாகத் திருமுறைப் பாடல்களையே - பாடுதல் வேண்டும். கண்ட கண்ட பாடல்களைக் கண்மூடிக் கொண்டு கூட்டுவழிபாட்டின்போது பாடும் வழக்கம் இப்பொழுது தோன்றியுளது. இதனையும் நீக்குதல் வேண்டும்.

தம்வாழ்வின் துறையனைத்திலும் தமிழர் தமிழுக்கு முதன்மை கொடுத்தற்கு முயலுதல் வேண்டும். அன்பு வாழ்வுக்கும், அருள் வழிக்கும், அறநெறிக்கும் மாறுன யாவற்றையும் சைவத்தோடு சேர்க்காமல் விடுதல் வேண்டும்.

இங்கு எடுத்துக்காட்டிய குறைகளை நீக்கி இன்றியமையாத சீர்திருத்தங்களைச் செய்தற்கு முன்வருமாறு அன்புள்ளம் படைத்த சைவர்களை இரக்கின்றேம். இத்துறையிலே பல்கலைக்கழக மாணவர்களும் பேராசிரியர்களும் தமிழாசிரியர்களும் செய்யத்தக்க தொண்டுகள் பலவுள. இவற்றை எல்லாம் உடனே செய்தால்,

பொருளும் பொன்னும் போகமுமல்ல
யாவும் இரப்பவை நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் இடம்பின் ஒலிதாராயே"

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழன் இரந்ததுபோல், நாமும் இரக்கும் பெருநிலை விரைவில் உண்டாகும்.

நல்லூர்த் தேரடியில்.....

" பழம் பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர்தே னேந்தி யெழிலார் அளவிலா
மங்கையரு மாடவரு மல்கு நல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டேனினிது.

காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காத லடியரெலாஞ் — சீராகச்
சென்னியிலே கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை
என்னையவன் பார்த்தா னினிது.

இன்றைக்கோ நாளைக்கோ இன்றுநாட் சென்றிடுமோ
என்றடியா ரேத்து மினியவொளி — நன்றுடைய
நல்லூரிற் றேரடியில் நான்கண்டு போற்றினேன்
சொல்லுந் தரமோ சுகம்....."

— நற்சிந்தனை சிவதொண்டன்

நினைவு நல்லது வேண்டும்

—சி. தில்லைநாதன்—

"சஞ்சலமில்லாமல் நெஞ்சில் தானென தன்னையறி"

"மனிதன் பிறவியிலே குழந்தை, அவனுக்குள்ள ஒரே சக்தி வளரும் சக்திதான்" என்று தாகூர் குறிப்பிட்டார். வளரும் சக்தி என்று அவர் கூறியது இயற்கையில் நிகழும் உடல் வளர்ச்சியையல்ல; மன வளர்ச்சியை —அதாவது அறிவு வளர்ச்சியைத்தான். நமக்கு எத்தனையோ சக்திகளெல்லாம் உண்டு. நினைத்தவை யாவையும் கூட நம்மால் பெறமுடியலாம். ஆனால் இன்னதையே நினைக்கவேண்டுமென்று ஒரு சிறிய திட்டமிட நமக்கு முடிகிறதா? நமது மனம் எதையெல்லாமோ எண்ணுகிறது; எதற்கெல்லாமோ கவலைப்படுகின்றது; பொருமைப்படுகிறது; ஏங்குகிறது. இந்த மனம் நமக்குத் தரும் தொல்லைகள்போல வேறெதுவும் நமக்குத் தொல்லைகள் தருவதில்லை.

எத்தனையெல்லாமோ சாதிக்கமுடியாதென்று சொல்லப்பட்டவற்றை, அறிவியல் வளர்ச்சியால் சாதித்துக்காட்டினோம். நோய்களுக்கெல்லாம் மருந்துகண்டோம். மழையைக்கூடப் பெய்விக்கிறோம். சந்திரமண்டலத்தையே அடையப்போகின்றோம். இதையெல்லாம் செய்யும் மனிதர்களைப் பார்த்து நினைவு நல்லது வேண்டுமென்று சொல்வது வேடிக்கையாக இருக்கலாம். ஆனால்,

"பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணர்க் கரிது"

என்று வள்ளுவர் சொன்னது பொய்மொழியல்ல. நமக்கு நல்லநினைவுகளை உற்பத்தி செய்யும் சக்தி முழுவதும் இல்லையென்றே கூறலாம். அந்தச் சக்தியை ஓரளவுக்காவது வளர்க்க நாம் எத்தனை பாடுபடவேண்டியுள்ளது? அதற்காக நமது சமயமும் அதன் வழிபாட்டு முறைகளும் துணை புரியாவா?

வாரமொருமுறை நாம் பிரார்த்தனைக் கூட்டத்திலே கூடி "நெஞ்சகமே கோவில் நிறைவே சுகந்தம்" "காசினியெங்கும் வேற்றுமை போகக் கருத்தினிலே அன்பருள்வாய்," "மாறுதலின்றிப் பராசக்தி தன் புகழ் வையமிசை நித்தம் பாடுகின்றோம், நூறுவயது புகழுடன்வாழ்ந்துயர் நோக்கங்கள் யெற்றிட வேண்டுமென்றே" என்றெல்லாம் பாடிப் பரவுகின்றோம். சும்மா அவற்றையெல்லாம் கூட்டத்தில் கூடிநின்று கூடிப் பிதற்றுகிறோமே? அவற்றை நாட்டத்தில் கொள்ள நமக்கு முடிகிறதா? உயர்நோக்கங்களுக்காகப் பாரதி பராசக்தியை வேண்டுகிறார். நூறுவயது புகழுடன் வாழ்ந்தாலும் உயர் நோக்கங்கள் பெற்றிருக்காவிட்டால் அந்த நீண்ட வாழ்வும் பயனுடையதாகாது என்று அறிந்திருந்தான் பாரதி. அவன் உணர்ந்து பாடியதை நாம் பிரார்த்தனைக் கூட்டத்திலே குனிந்த தலைகளோடும் கூப்பிய கரங்களோடும் பரவசப்பட்டதுபோலப் பாடுகின்றோம். ஆனால் பிரார்த்தனை முடிந்ததும் இறைவனைப்பார்த்து நாம் வேண்டியதையே மறந்துவிடுகிறோம். மற்றவர் மகிழ்ச்சியாய் இருந்தால் நமக்குப் பொறுமை. மற்றவன் நல்லாயிருந்தால் எமக்கு எரிச்சல். யாரைக் கேலிசெய்யலாம், எவரைக் கிண்டல்பண்ணலாம், எவரெவர்க்கிடையே பகைமையை மூட்டலாம் என்றெல்லாம் நாம் தினமும் கவலைப்படுகின்றோம்.

உடல் வாழ்க்கையைப் பற்றி நம்மில் பலருக்குத் தெரியும், ஆனால் மனிதன் மிருகங்களைப்போல வெறும் உடல் சொரூபமானவனல்லவே! அறிவுடையவனே உண்மையான மனிதனாய் இருக்க முடியும். மன்னுயிர்க்கு ஆக்கமே மன நலம்தான் என்கிறார்

திருவள்ளுவர், ஆகவே மனப்பண்பாட்டை வளர்ப்பதே மனிதவாழ்வின் உயர்ச்சிக்கு மிக அவசியம். அதை வளர்ப்பதைவிட உயர்ந்த எந்தச் சேவையை மக்களுக்குச் சமயங்கள் செய்யமுடியும்? நல்ல மனப்பண்பாடே உண்மையான சமயம் என்று சொன்னால் தவறுகாது. "மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்" என்றார் வள்ளுவர். "சீலம் பேணும் உள்ளத்தைத் தெய்வம் தேடி வாராதோ?" என்று ஓமர் கயாமின் வினவைத் தமிழகத்திலே எழுப்பினார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.

அழகை அழகுபடுத்தும் சாதனம் நல்ல நினைவுதான். ஆனால் புறத்திலே எத்தனையோ அழகுகளைச் செய்து கொள்பவர்கள் அகத்தூய்மையைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதேயில்லை. அகத்தூய்மை இல்லாதவர்கள் பிறர் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்த்துப் பொறுக்க முடியாதவர்கள்; நல்லதை நினைக்க முடியாதவர்கள்; பிறர்மீது குறைகாண்பதிலும் பிறரை இழிவுபடுத்துவதிலும் நாட்டமுள்ளவர்கள் - இவர்கள் எந்தச்சமயத்தைப் பின்பற்றினாலென்ன, எத்தனை புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிமீண்டாலென்ன, எத்தனை ஆலயங்களை வலம்வந்தாலென்ன எத்தனை அபிஷேகங்கள் செய்தாலென்ன, - அவர்களால் தங்களையும் உலகத்தையும் ஏமாற்ற முடியுமேயொழியச் சாந்தியை வாழ்வில் காணமுடியாது.

நல்லதையே நினைப்பவன், நல்லதுக்காக உழைப்பவன் உலகத்தாரால் வெறுக்கப்படலாம்; துன்பப்படு குழியிலே தள்ளப்படலாம். ஆனால் அவனது மனச்சாட்சி அவனுக்கு ஆறுதல் சொல்லும். அதுபோதும் அவனுக்கு அமைதியாக வாழ்வதற்கு. ஆனால் தன்னையே தான் ஏமாற்றிக்கொண்டு உலகத்தில் கலித்துவாழ்பவனுக்கு அவனது மனச்சாட்சி - அப்படி ஒன்று இருந்தால் - தீராத துன்பம் தந்துகொண்டே இருக்கும்.

உயர்ந்த மாளிகைகள், கோபுரங்கள் எல்லாம் கட்டுகின்றோம். ஆனால் கட்டுபவர்கள் உயர்ந்தபாடில்லை. நீரில் பயணம் செய்கின்றோம். வானிலே பறக்கின்றோம். ஆனால் மண்மீது வாழத்தெரியவில்லை. எந்தச் சாதனையைச் செய்தாலும் நாம் மட்டும் வளர்ச்சியடையாவிட்டால் நாம் குருடர்கள் தானே.! நாம் உயர்வடைய முடியாவிட்டால் இந்தச் சாதனைகளினாலெல்லாம் என்ன பயன்? வெறும் குருடர்களாய், வாழத்தெரியாமல் நல்ல நினைவு மனதில் இல்லாமல் தவிக்கும் நமக்கு இதனாலெல்லாம் என்ன பெருமை? இருள்கூட ஒளிக்கு வழிவிடும். ஆனால் குருட்டுத்தன்மை அழிவை நோக்கியே நம்மை இழுத்துச்செல்லும்.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்" என்றார் எச்சமயிகளும் மதித்துப் போற்றும் வள்ளுவர். மனத்தூய்மையே எச்சமயத்திற்கும் அடிப்படை. அது இல்லாதவன் மனிதனுக்கே மதிக்கத் தகுதியில்லாதவன். அப்படிப்பட்டவனுக்குச் சமயமும் பூசையும் ஏன்?. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று சொன்ன திருமூலர் அதையடுத்து இடைவிடாது தொடர்கிறார் "நன்றே நினைமின்! நமன் இல்லை" என்று நல்லதை நினைக்க வேண்டுமென்பது புத்த சமய அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களெல்லாம் இந்த மனத்தூய்மையை மிகவும் வற்புறுத்துகின்றன.

நினைவுதான் பேச்சாக வடிவம் கொள்கிறது. நல்ல நினைவினால்தான் நல்ல மொழி பிறக்கிறது; நல்ல பேச்சுப் பேசப்படுகின்றது. மனிதவினத்தின்மீது நம்பிக்கையும் நல்லெண்ணமும் கொண்டவன் உண்மையான புனிதமான வார்த்தைகளையே பேசுவான். மற்றவர்களை இழிவுபடுத்துவதற்காகவோ, ஏமாற்றுவதற்காகவோ அல்லது மக்களிடையே வேற்றுமையையோ, ஆத்திரத்தையோ உண்டு பண்ணுவதற்காகவோ பேசப்படும் வார்த்தைகளை நல்லவர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். புறத்தூய்மை நீரால் ஆவது போல அகத்தூய்மை வாய்மையால் உண்டாகும் என்று சொன்ன வள்ளுவர், வாய்மைக்குப் "பிறருக்குத் தீமையிலாத சொலல்" என்று இலக்கணமும் வகுத்தார். பிறருக்குத் தீமையானவற்றைச் செய்யாமலே இருக்கமுடியாதவர்கள், தீமையானவை சொல்லாமல் எப்படி இருக்க முடியும்? அதை நினைக்காமலே இருப்பதென்றால் அதைவிட அரிதுதான்.

என்ன செய்வது? மனத்தூய்மை அவசியமென்று நமக்குத்தெரிகிறது. ஆனால் அதை வளர்ப்பது மிகத் துன்பமாயிருக்கிறது. பாரதி தனது மனதிற்குக் கட்டளையிட்டே வலியுறுத்திப் பார்க்கிறார்.....

"பேயாயுழலுஞ் சிறுமனமே
பேணியென்சொல் இன்றுமுதல்
நீயாயொன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்"

மனதின் தலைவன் தானேயென்று மனதிற்கு நினைவுபடுத்தித் தன்சொற்படி அதனை நடக்கும்படி அவர் ஆணையிடுகிறார். நம்மில் பலர் இப்படி ஆணையிட்டுவிட்டுப் 'பிறரைத் தூற்று', 'பிறரைப்பற்றி இழிவான கதைகளைப் பரப்பு' என்றெல்லாம் மனதிற்குக் கட்டளைகள் பிறப்பித்துவிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனெனில் அவைகளைச் செய்வதிலே பேரின்பம் இருப்பதாகப் பேதை மனங்களுக்குப் படுகிறது.

மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு; அமைதியாக வாழ்வதற்கு; மற்றவரை மதித்து எல்லோருக்கும் நல்லவராக வாழ்வதற்குப் பாரதி சொன்னவை நான்கு இருந்தால் போதும்; மற்றவர்களுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. இந்நான்கையும் நாம் பெற்று அவற்றைச் சரியான வழியில் பயன் படுத்தி வாழ்வில் அமைதி காண வேண்டுமென்று எம் இறைவனை வேண்டுவோமாக:

"மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்

ஆத்ம தியானம் பழகுகிற யோகியின் அடங்கிய
மனதுக்கு காற்றில்லாவிடத்தில் வைத்த தீபம்
அசையாதிருப்பது உபமானமாகக் கருதப்படுகிறது.

அலைவதும் நிலையற்றதுமாகிய மனது
எக்காரணத்தால் எதன்கண் திரிகிறதோ
அதன் அதனிடத்திலிருந்து மீட்டுவித்து
ஆத்மாவின் வசத்திற்குக் கொண்டு வருக.

பெரும் முயற்சியுடைய யோகி பாபங்களற்றுப்
புனித வாழ்வு பல பிறவிகளில் பக்குவ
மடைந்து பரகதியைப் பெறுகிறான்.

—பகவத்கீதை

இலங்கையில் இந்து சமயம்

— குல. சபாநாதன் —

"சிவத்தொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்"

இலங்கைத் தீவில் இந்து சமயம் சரித்திர காலத்துக்கு முன்னரே வேரூன்றி வளர்ச்சியுற்றதெனக் கொள்ளலாம். ஏனைய மதங்கள் இலங்கையிற் குடியேறிய காலத்தை ஓரளவு வரையறுத்துக் கூறிவிடலாம். ஆனால் இந்து சமயத்தின் வரலாறு இத்தகைய ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு நிற்பதால் இதன் தொன்மையை அளவிட முடியாது.

இலங்கையில் முதன்முதற் குடியேறியவர்கள் யார் என்று நிச்சயமாய் ஒன்றுஞ்சொல்ல முடியாது. எனினும் இயக்கர், நாகர் எனும் இரு சாதியாருமே பண்டைக் காலத்தில் இலங்கையிற் குடியிருந்தார்கள் எனச் சரித்திரவாராய்ச்சியாளர் கருதுகின்றனர். இலங்கையில் வாழ்ந்த இப்பூர்வீகக் குடிகள் இந்து சமயத்தையே கைக்கொண்டனர். மேலும் குபேரன், இராவணன், மண்டோதரி முதலியோர் சிறந்த சிவ பக்தியுடையவராகத் திகழ்ந்தனர். இராவணனுடைய சிவ பக்தியைத் திருஞானசம்பந்த சுவாமிகளும், மணிவாசகரின் சிவபக்தியை மாணிக்கவாசக சுவாமிகளும், பாராட்டியுள்ளார்கள். இராவணன் தன்னுடைய தாயாரின் அபரக் கிரியைகள் செய்வதற்காகக் கன்னியா தீர்த்தம் அமைக்கப்பெற்றதெனத் தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது. இதனாற் கீழ்மாகாணத்திற் பண்டைக்காலந் தொடக்கமாக இந்துசமயம் சிறப்புற்று விளங்கிற்றெனக் கொள்ளலாம். குவிரேஸ எனும் போர்த்துக்கேயச் சரித்திரவாசிரியர் இலங்கைச் சரித்திரத்தைப் பற்றித் தாம் எழுதிய நூலில் "திருகோணமலைக் கோவில் கிறீஸ்துவுக்கு முன் 1300ஆம் ஆண்டில் மனுராசாவாற் கட்டப்பட்டதெனக் கூறும் கல்வெட்டொன்று இருந்தது" எனக் கூறுகிறார்; எனவே இக்கோயிலின் தொன்மையும் கீழ்மாகாணத்தில் இந்து சமயத்தின் தொன்மையும் நன்கு புலப்படுதல் காண்க.

இனி, இலங்கைச் சரித்திரவாராய்ச்சியிலீடுபட்ட மேனாட்டறிஞர்களும் இலங்கையின் புராதன சரித்திரத்தைக் கூறப் போந்தவிடத்து இந்து சமயமே எல்லாச் சமயங்கட்கு முன்னர் இலங்கையில் விளங்கிற்றென அறிவுறுத்துகின்றார்கள்.

திரு. ஜே. டபிள்யூ. பெனற் என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திர நூலில் "இலங்கைத் தீவில் ஆதியிற் குடியேறியவர்கள் இந்துக்களே" எனக் கூறுறார். "இலங்கைத் தீவில் உள்ள பல்வேறு குடிகளின் பாஷை, இலக்கியம், சமயம், பழைய ஞாபக சின்னங்கள் என்பனவற்றை நோக்குமிடத்து, இத் தீவானது வரலாற்றுக்கப்பாற்பட்ட காலந் தொடக்கமாக இந்து சமயக் குடிகளையே கொண்டதாதல் வேண்டும் என்பது புலனாகும்" என சேர். உவில்லியம் ஜோன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் முதல் அரசனாக விளங்கிய விஜயன் பௌத்த மதத்தைச் சார்ந்தவன் என்றுதல், அம்மதத்தைப் பரப்பினன் என்றுதல் மகாவம்சம் குறிப்பிடவில்லை. ஆனால் அவன் கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம் ஆதியாம் கோயில்களைக் கட்டினனென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. மேலும் அவன் பாண்டி நாட்டு இளவரசியை மணமுடித்தான் என்பது உண்மையாயின் அவன் இந்து சமய வளர்ச்சியில் ஈடுபட்டிருப்பான் எனக்கருத இடமுண்டு. மேலும் தேவனம்பியதீசனே (கி. மு. 247-207) இலங்கையின் முதற் பௌத்த அரசனாக விளங்கினன் என மகாவம்சம் கூறுகின்றது.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் தமிழர் படையெடுத்து வந்து இலங்கை இராச்சி

யத்தைக் கைப்பற்றினர். எல்லாளன் (கி. மு. 145-101) எனும் சைவ மன்னன் அனுராதபுரத்திலிருந்து 44 வருடம் அரசுபுரிந்த காலத்தில் இந்து சமயம் இலங்கையில் நன்கு பரவியிருத்தல் வேண்டும். பௌத்த மத வளர்ச்சியினைப் புனைந்துரைப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்ட மகாவம்சம் இவ்வரசன் ஆற்றிய சைவத் தொண்டினைப்பற்றி மௌனஞ் சாதிப்பது வியப்பன்று. இத்தகைய சைவ சிகாமணிகள் ஆற்றிய அருந் தொண்டினை எடுத்துக்காட்டும் நூல்கள் இல்லாதொழிந்தமை எம் தவக்குறைவேயாகும்.

இரண்டாம் நூற்றாண்டிலிருந்த 'கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' பத்தினி வழிபாட்டை இலங்கையிற் பரவச் செய்தான். இதன் பயனாகப் பத்தினி வழிபாடு (கண்ணகியம்மன் வழிபாடு) பௌத்த, இந்து மதப் பொது மக்களிடையே வேரூன்றத் தொடங்கியது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கண்ணகி வழிபாட்டைக் கண்டித்திருந்தும், அது ஒருவாறு வேரூன்றி விட்டது.

இனி, நான்காம் நூற்றாண்டில் அரசு செலுத்திய மகாசேனன் பௌத்தமதமல்லாத பிறமதங்கள் பரவுவதைத் தடுக்க முயன்றபொழுது, சிவாலயங்களைத் தகர்த்தெறிந்தான் எனக் கூறப்படலால், அவனுக்குச்சிறிது முற்பட்ட காலத்தில் இந்து சமயம் நன்கு பரவியிருத்தல் வேண்டுமென ஊகித்தற்கிடமுண்டு.

ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் பல்லவர் ஆதிக்கம் பெற்றனர். இக்காலத்திற்றான் சைவநாயன்மார் அவதரித்துச் சைவத்துக்குப் புத்துயிர் அளித்தனர். இவர்கள் இலங்கையிலுள்ள திருத்தலங்களாகிய திருக்கேதீச்சரத்தையும் திருக்கோணமலையையும் தேவாரமோதி வழிபட்டனர். எனவே இவர்கள் காலத்தில் இத்திருத்தலங்களின் புகழ் இலங்கையில் மட்டுமன்றி, கடல்கடந்து இந்தியாவிலும் பரவியிருந்ததெனச் சொல்லலாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் காலத்திலும் இந்துசமயம் இலங்கையிற் பரவிற்றெனக் கருத இடமுண்டு. மாணிக்கவாசக சுவாமிகள் ஈழநாட்டுப் புத்தரை வாதில் வென்றமையால், பௌத்த மதம் ஓரளவு வலிகுன்றி இந்து சமயம் புத்துயிர் பெற்றிருத்தல்கூடும்.

கி. பி. 1017-ம் ஆண்டு இலங்கை சுதந்திரமிழந்து சோழ சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாயிற்று. அக்காலத்தில் இந்து சமயம் உச்ச நிலையையடைந்ததென்று கூறலாம். சோழர் பொலன்னறுவையைத் (புலத்திநகர்) தலைநகராக்கி அரசாண்டு வந்தனர். புலத்தியநகரம், பதவி, மாதோட்டம் முதலிய இடங்களிற் பல சிவாலயங்களைக் கருங்கல்லினாற் கட்டியெழுப்பினர்கள். புலத்தி நகரில் மட்டும் ஏறக்குறைய ஏழு ஆலயங்களைக் கட்டினர்கள். இவற்றுள் ஒன்றினை (சிவாலயம் இல. 2) இன்றும் பொலன்னறுவையிற் காணலாம். இந்நகரிற் காணப்படும் வேறொரு சிவாலயம் பாண்டியர் காலத்திற் கட்டப்பெற்றதெனக் கருதப்படுகின்றது. சோழர்கள் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரத்திலும் கோயில் கட்டினர்கள்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் அரசாண்ட கலிங்கனை மாகன் (கி. பி. 1215–36) இந்துமதத்தில் அளவிறந்த அபிமானம் பூண்டு, பௌத்த ஆலயங்களை அழிக்கத் தொடங்கினன். எனவே இவன் ஆட்சிக் காலத்தில் இந்து சமயம் பரவலாயிற்று.

முதலாவது விஜயபாகுவுக்குப் பின் (கி. பி. 1059) இலங்கையை ஆண்ட அரசர்களுட் பெரும்பாலார் கலிங்க அல்லது பாண்டிய வம்சத்து வழித்தோன்றல்களாதலின், அவர்கள் இந்துசமயத்துக்குப் பேராதரவு கொடுத்து இந்து ஆலயங்களையும் கட்டினர்கள்.

திருகோணமலைப் பகுதியிலுள்ள கந்தளாய் விஜயராஜ சதுர்வேதி மங்கலம் எனச் சாசனங்களிற் குறிப்பிடப்படலால், இவ்வரசனும் (முதலாவது விஜயபாகு) பிராமணக் குடிகளை ஆதரித்து இந்து மத வளர்ச்சிக்கு உதவி புரிந்துவந்தான் என அறியக்கிடக்கின்றது. இதன் பின்னரும் ஒரு நூற்றாண்டு வரை கந்தளாய் நான்மறையோர் வதிந்த இடமாகவே விளங்கியது. எனவே திருக்கோணமலை யாழ்ப்பாணத்திலும் ஒருபடி கூட என்றுதான் சொல்லவேண்டும்.

பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் வன்னியர்கள் ஆதிக்கம் மேலிட்டுத் தாம் வாழ்ந்த பகுதியில் இந்துமத வளர்ச்சியில் ஈடுபட்டனர். அநேக இந்து ஆலயங்களைக் கட்டினர். இப்பகுதியிலுள்ள குமாரபுரம் எனும் முருகஸ்தலம் புராதனப் பெருமை வாய்ந்ததொன்றென்பதிற் சந்தேகமில்லை.

பாண்டிய அரசர்களாகிய ஜடாவர்மன் சுந்தரபாண்டியனும் (1253-1270) மாறவர்மன் குலசேகரனும் (1270-1310) இலங்கையைத் தம்மாணைக்குக் கீழ்ப்படுத்தினர்கள். சுந்தர பாண்டியன் பொறித்த மீனமுத்திரை திருக்கோணமலையிலுள்ள பிரடெறிக் கோட்டை வாயிலின் நிலைக் கல்லிற் காணப்படலாம். இவன் கோணேசர் ஆலயப் புனருத்தாரண வேலையிலும், சைவசமய வளர்ச்சியிலும் நாட்டஞ் செலுத்தியிருத்தல் கூடும்.

இனி, யாழ்ப்பாணப் பகுதியை நோக்குமிடத்து தமிழரசாட்சி எப்பொழுது ஆரம்பமாயிற்றெனத் திட்டமாகச் சொல்வதற்குரிய போதிய சான்றுகள் இல்லை. பதின்மூன்றும் நூற்றாண்டு வரை சிங்கை நகரிலும் பின்னர் நல்லூரிலுமிருந்து தனியரசு செலுத்திய ஆரியச் சக்கரவர்த்திகள் வட இலங்கையிற் பல இந்து ஆலயங்களைக் கட்டினர்கள்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில், கைலாயநாதர் கோயில், சட்டநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், வீரமாகாளியம்மன் கோயில், அரசகேசரிப் பிள்ளையார் கோயில் ஆதியாம் பல கோயில்கள் கட்டப் பெற்றன. சங்கிலித் தோப்பிலுள்ள யமுனா தீர்த்தமும் இவ்வரசர்கள் அமைத்ததே. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நகுலேஸ்வரம் முதலிய கோயில்களும் சிறப்புற்று விளங்கின. இவர்கள் ஆட்சிக் காலத்தில் தீவுப் பகுதிகளிலும் இந்து சமயம் நன்கு பரவியது. நயினாதீவு நாகேஸ்வரியம்மன் ஆலயம் புராதனப் பெருமை வாய்ந்த ஸ்தலமாக விளங்கிற்று.

தம்பதேனியா, குருணாக்கல், கம்பளை; கோட்டை, இராயகம அரசர்கள் ஆட்சிக் காலத்திலும் இந்து சமயம் வளர்ச்சியுற்றதென்றே சொல்லலாம். இக்காலத்தில் இந்து சமய நிலையைப்பற்றி டக்டர் ஜீ. ஈ. மென்டிஸ் அவர்கள் தாம் எழுதிய "இலங்கையின் பூர்வ சரித்திரம்" எனும் நூலிற் பின் வருமாறு கூறுகின்றார்:- இக் காலத்தில் இந்து சமயமும் செல்வாக்குற்றது. சில சிங்கள அரசர்கள் பிராமணரை ஆதரித்ததுமல்லாமல் அரண்மனையில் சமய சம்பந்தமான கிரியைகளைச் செய்வதற்குப் புரோகிதரையும் ஏற்படுத்தினர்கள். இரண்டாவது பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் இரத்தினபுரிக்குச் சமீபத்தில் மகாசமன தேவாலயமொன்று கட்டப்பட்டது. கடுகண்ணைவக்குத் தென்மேற்கே சில மைல் தூரத்திலுள்ள அலுத்துநுவரையில் நாலாம் பராக்கிரமபாகு ஒரு விஷ்ணு தேவாலயத்தை நிர்மாணித்தான். கோட்டையை அரண்செய்தபொழுது அழகக்கோனரன் அந்நகரின் பாதுகாப்புக்காக நாலு கோயில்களைச் சமைப்பித்தான். இவை விபீஷணன், கிரிதெலி, உபுலுவன், ஸ்கந்தன், சமன் என நான்கு தெய்வங்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டன. சமன் என்ற தெய்வம் சிவனெளரிபாதத்துடன் சம்பந்தப்பட்டிருந்தது. புத்த விகாரைகளோடு இந்துக் கடவுளர்க்குத் தேவாலயங்கள் அமைக்கப்பட்டு அங்கே வழிபாடு செய்துவந்தார்கள். சில சமயங்களில் விகாரைகளிலேயே இந்துத் தெய்வங்களும் வழிபடப்பட்டன. கம்பளைக்குச் சமீபத்திலுள்ள இலங்காதிலக விகாரத்தில் உட்சுவருக்கும் புறமதிலுக்குமிடையில் இந்து தெய்வங்களின் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டன. சிங்கள ஆசிரியர்கள், முதலிற்றமது நூல்களில் புத்தபகவானையும், தம்மபதத்தையும், சங்கத்தையும் வழிபட்டபின், சிவன், பிரமா போன்ற கடவுளருக்கும் வணக்கம் தெரிவித்து அவர்களின் அருளையும் வேண்டினர்கள். போதிசத்துவரான நாதனையும், சமன தெய்வத்தையும் சிவனுகவும், ராமானுஜனை இலக்குமணனுகவும் இவர்கள் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கடலதேனிய, இலங்காதிலக ஆலயங்களை நோக்குமிடத்தும் இவ்வுண்மை புலப்படும். தம்புல்ல கற்கோயிலில் கதிர்காமக் கடவுள் மயிலேறி அயிலெடுத்து வருங் காட்சி உயிர் ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்

ளது. பதினேந்தாம் நூற்றாண்டில், கோட்டை யிலிருந்து அரசாண்ட ஆரியவது பராக்கிரம பாகு முன்னேஸ்வர ஆலயத்துக்குச் சர்வ மானியமாகச் சில வீடு நிலங்களை அளித்து இந்து சமயத்துக்கு ஆதரவு அளித்து வந்தான்.

கண்டி மன்னர்கள் ஆட்சிக் காலத்திலும் இந்து மதம் வளர்ச்சியுற்றது. இவர்களுட் பலர் தென்னிந்தியாவிலிருந்தே தம் பட்டத்துத் தேவியரைத் தெரிந்தெடுத்துக்கொண்டார்கள். ஆதலால், இத்தேவிமார் வணங்குவதற்காகவும் கண்டியிற் சைவாலயங்கள் அமைக்கப்படலாயின. கதிர்காமம், கோணேசுவரம், முனீசுவரம், கண்டிக் கதிரேசன் ஆலயம் முதலியன இம்மன்னர்களின் பேராதரவைப் பெற்றன. முதலாம் இராசசிங்கன் இந்து சமயத்தில் மிக்க பற்றுடையவனாகி, சீதவாக்கையிற் பைரவ ஆண்டி கோயில் எனப்படும் சிவாலயத்தைக் கட்டுவித்தான், இரண்டாவது இராசசிங்கன் தம்பலகாமத்துக் கோணேசர் கோயிலையும் கதிர்காமக் கோயிலையும் திருத்தியமைப்பதில் ஈடுபட்டான்.

போத்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இந்து சமயம் மிகவும் தளர்ச்சியுற்றது. இவர்கள் சைவக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கும் பணியில் ஈடுபட்டார்கள். இந்து மதத்தினர் தம் சமய அநுட்டானங்களை மறைவிற் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. விரதம் அனுஷ்டித்து உணவு உண்ட வாழை இலைகளை வீட்டுக் கூரைக்குட் செருகிவிடும் வழக்கமானது அந்நியர் ஆட்சிக் காலத்தில் இந்துக்கள் பட்ட துன்பத்தை நினைவூட்டுகின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்துப் பிற்பகுதியில் இலங்கை மக்களுக்குச் சமய சுதந்திரம் சிறிதளவு கிடைத்ததென்றே கூறலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் (கி. பி. 1791) வண்ணை வைத்திலிங்கச் செட்டியார் யாழ்ப்பாணம் கம்மந்தோரின் உதவிகொண்டு வைத்தியேசுவரன் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகமுஞ் செய்வித்தார். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் புத்துயிர் பெற்றெழுந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் ஆரம்பமானதும், சமய வழிபாட்டிற் சுதந்திரம் சிறிது சிறிதாக ஏற்பட்டது. இந்து சமயப் பயிர் செழிப்புற்று வளரத் தொடங்கியது. இலங்கை,சுதந்திரம் அடைந்த பின் சமய விருத்தியில் இந்துக்கள் அக்கறை கொண்டனர். பாடல்பெற்ற தலங்களைப் புனருத்தாரணஞ் செய்யத்தொடங்கினர். இந்து சமயம் விருத்தியடையத் தொடங்கியுள்ளது.

தலைமகனுகிய இறைவன்பால் தலைவியாகிய ஆன்மா குயிலையும், கிளியையும் தும்பியையும் தூதனுப்பும் அழகுதான் என்னே!

--ஞானை.

எம்பெருமான் வரத் தூது செல்லாயே?

கூவு குயிலே பறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவு குயிலே

நாவுக் கினியவனை நல்ல குயிலே
நம்பனை யிங்குவரக் கூவு குயிலே

நாவலரும் பாவலரும் பணிந் தேத்தும்
நல்ல சிவனிங்கு வரக் கூவுகுயிலே

நான் பாடும் பாடனைத்தும் நயந்து சொல்லி
நாதனை இங்கு வரக் கூவுகுயிலே

வாயாரப் பாடுவார் தம் மனத்தானை
வள்ளலை யிங்கு வரக் கூவு குயிலே.

—யோகர் சுவாமிகள்

நல்லூரான் திருவடியை நான்பிறந்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி கிளியே இரவுபகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி கிளியே நல்லூரான் தஞ்சமடி

தேவர் சிறைமீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி கிளியே கவலையெல்லாம் போகுமடி

எத்தொழிலைச் செய்தாலென் ஏதவத்தைப்பட்டாலென்
கந்தன் திருவடிகள் கிளியே காவல் அறிந்திடெடி

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி.

—யோகர் சுவாமிகள்

வன்னெஞ்சக் கள்வன் மனவலியான் என்னுதே
கல்நெஞ்சு உருக்கிக் கருணையினல் ஆண்டுகொண்டே
அன்னம் தினைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்அம் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

—மாணிக்கவாசக சுவாமிகள்

நீல உருவிற் குயிலே நின்மணி மாடம் நிலாவும்
கோல உருவில் திகழும் கொடிமங்கை உள்ளுறை கோயில்
சிலம் பெரிதும் இனிய திருஉத் தரகோ சமங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயகனே வரக் கூவாய்

—மாணிக்கர்

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ
மருப்பு ஒசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
வருப்பு உற்றுக் கேட்கின்றேன் சொல்ஆழி வெண்சங்கே.

—ஆண்டாள்

பிள்ளையாருக்கு ஏன் ஐந்து கைகள்?

மற்றத்தெய்வங்கட்கு நான்கு கரங்கள் இருப்பதாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆனைமுகனுக்கு மாத்திரம் ஐந்து கைகள் ஏன் தெரியுமா? உயர்த்திப்பிடித்திருக்கும் இரண்டு கைகளிலே கணேசன் அங்குசம், பாசம் என்னும் இரண்டு ஆயுதங்களை ஏந்தியுள்ளார். ஜீவர்களை நல்வழியில் நடாத்த அங்குசம் பயன்படுகிறது. தீவினையாளர்களை தன் பாசத்தைக் கொண்டு தளைக்கிறார். இன்னும் இரண்டு கைகளிலே முறையே தந்தமும் அக்ஷமாலையும் இருக்கின்றன. சிந்தனை சக்தியின் முக்கியத்துவத்தை ஜப மாலையும், கல்வியறிவின் மேன்மையை எழுதுகோலாகிய தந்தமும் எடுத்துக்காட்டுகின்றன. ஐந்தாவது கரமாகிய தும்பிக்கையில் 'மோதகம்' இருக்கின்றது. உணவு இல்லாது உயிர் வாழ முடியாது என்பது இதன் வியாக்கியானம். இவ்வைந்து தொழிலையும் செய்யும் பொருட்டேதான் கணபதி ஐந்து கரங்கள் உடையவராகத் திகழ்கின்றார்.

மாணிக்கவாசகரின் ஆத்மீக யாத்திரை

ச. அம்பிகைபாகன்
(உதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.)

'நிமலனே நின்னடிக் கடைக்கலம்'

மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகத்தைப் படிக்கும்போது - சிறப்பாக சிவபுராணத்தையும், போற்றித் திருவகவலையும் திருவண்டப்பகுதியையும் படிக்கும்போது அவர்கள் ஆத்மீகயாத்திரையில் படிப்படியாக முன்னேறியதைக் காணக்கூடியதாக விருக்கின்றது. அவர்கள் பலபிறவிகளை யெடுத்து இளைத்தது, கடைசியாக மானிடப் பிறவியெடுத்துச் சமயவாழ்க்கையில் ஈடுபட்டபோது பல தடைகள் ஏற்பட்டதும், அத்தடைகளைப் போருட்படுத்தாது சமய வாழ்க்கையில் முன் னேறியதும், ஈற்றில் திருவருள் அடைந்ததும், திருவாசகத்தில் விரிவாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. தெய்வநம்பிக்கை குறைந்துவரும் இக்காலத்தில் மாணிக்கவாசகரின் அனுபவங்களை அவர்களின் வாக்குக்களைக்கொண்டு ஆராய்வது பயனுடைத்தாயிருக்குமென்று கருதியே இக்கட்டுரை யெழுதப்படுகின்றது.

பல பிறவிகள் :

உயிர்கள் தம் வினைப்பயனுக்கேற்பப் பலபிறவிகளை எடுத்துழல்கின்றன. அப்பிறவிகள் நால்வகைத்தோற்றம், எழுவகைப் பிறப்பு, எணபத்துநான்கு நூருயிரம் யோனி பேதம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. மேலும் அவற்றைத் தாவர சங்கமம், சராசரம் என்றும் கூறுவதுமுண்டு. மாணிக்கவாசகர் தாம் எடுத்த பிறவிகளைச் சிவபுராணத்தில் பின்வருமாறு கூறுகின்ருர்.

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களா
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய் [ய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் "

இந்த இடத்தில் டார்வினுடைய கொள்கைக்கும் உயிர்களின் தோற்றத்தைப் பற்றி நமது சாத்திரங்கள் கூறுவதற்குமுள்ள வித்தியாசத்தைக் கவனித்தல் அவசியம். டார்வின் கொள்கைப்படி உயிர்களின் தோற்றங்கள் படிப்படியாகச் சிறப்படைந்து வருகின்றன. ஆனல் நமது சமயக் கொள்கைப்படி உயிர்கள் தத்தம் வினைக்கேற்ப மாறிமாறிப் பிறக்கின்றன.

மனிதப்பிறவி :

இதுநிற்க, மாணிக்கவாசகர் போற்றித் திருவகவலில் யானை முதல் எறும்பீருகவுள்ள பிறவிகளில் ஏற்படக் கூடிய கெடுதிகளிலிருந்து தப்பியதையும், தாயினுடைய கருப்பையில் இருந்த பத்து மாதங்களில் நிகழக் கூடிய கெடுதிகளிலிருந்து தப்பியதையும், விரிவாகக் கூறி, அதற்குமேல் மனிதப்பிறவியில்ஏற்படக் கூடிய இடையூறுகளையும் விவரிக்கின்ருர். மலக்கழிவு, பசி, துயில், போக்குவரவு, பெண்ணசை, மண்ணசை, கல்வி, வறுமை முதலியவற்ருல் ஏற்படும் துன்பங்களிலிருந்து மனிதன் தப்பித்துக் கொள்ளல் அரிதென்கிருர்,

பலதடைகள் :

இவற்றிலிருந்து பிழைத்துக் கடவுள் சித்தம் ஏற்பட்டுப் பரம்பொருளை அடைவதற்கு நாட்டம் கொள்ளும் போது, ஏற்பட்ட தடைகளை மேலும் கூறுகின்றனர். நண்பர்களும்அயலாரும் நாத்திகத்தினைப் பலமுறை எடுத்துப் பேசி நாவில் தழும்பேறப்பெற்றனர். சுற்றத்தார்தம் பாசங் காரணமாகக் கூவிப் பதைபதைத்துக் கூட்டமிட்டுக் கடவுளை நாடவிடாது தடுத்தனர். பிராமணர் விரதமிருத்தலே மேலான சாதனமென்பதற்குச் சாத்திரப் பிரமாணங்களைக் காட்டினர். சமயக்கணக்

கர் தத்தம் மதங்களே உண்மையானவை என்று முழங்கினர். மாயாவாத மென்னும் சுழல் காற்று ஓங்கி வீசியது. உலகாயதம் என்னும் விஷம் வந்துசேர்ந்து பல சூழச்சி களைச் செய்தது.

"தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி
முனிவிலாததோர் பொருளதுவருதலும்
ஆறுகோடி மாயாசத்திகள்"

வேறுவேறு தம் மாயைகள் தொடங்கின

ஆத்தமானர் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தமும்பேறினர்
சுற்றமென்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றியழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பரமாக வேதியரும்
சரதமாகவே சாத்திரங் காட்டினர்
சமயவாதில் தததம் மதங்களில்
அமைவதாக அரற்றி மலிந்தனர்
மிண்டிய மாயா வாதமென்னுஞ்
சண்டமாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து
கலாபேதத்த கடுவிடமெய்தி
உலோகாயதமெனு மொன்திறற் பாம்பின்
கலாபேதத்த கடுவிடமெய்தி
அதிற்பெரு மாயை யெனப்பல சூழவும்"

இவற்றைப் பொருட்படுத்தாது, தாம் கொண்ட கடவுட் கொள்கையைக் கடைப் பிடித்து, இறைவனே வழிபட்ட முறையை அதேதிருவகவலிற் தொடர்ந்து கூறுகின்றார்.

அன்பு மேலிடல்:

நெருப்பிலிட்ட மெழுகுபோல் உள்ளம் உருகி, உடல் நடுங்கி, கொடிறும் பேதையும்போல கொண்டகொள்கையை விடாது, பசியமரத் தில் அறையப்பட்ட ஆணிபோல் உறைத்து நின்று, மனம் வாடி உடல் அசைவுற்று, உல கத்தவர் நம்மைப் பேயென்று சிரிப்பதற்கு வெட்கப்படாது. அதை அணியாக ஏற்று, மனங்கொணாது, தற்போதமிளந்து, வீடு பேற்றினையே மேலான பொருளாகக்கருதி, கன்றைக்காணாத பசுப்போல் மனம் பதை பதைத்து, பிறதெய்வங்களைக் கனவிலும் நினையாது, எட்டுதற்கரிய பரம்பொருள் குருமூர்த்தியாக வந்தருளியதை அசட்டை செய்யாது, குருவின் திருவடிகளை விடாது வணங்கி. என்புருகி, அன்பெனும் ஆறு கரை புரண்டோட, ஐம்புலன்களுமொடுங்கித் தலை வனேயென்றழைத்து வாய்குளறி, மயிர் புள கங்கொண்டு கைம்மலர் குவித்து, இருதய கமலம் விரிய, கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய, இறைவனுடைய அருட் செயல்களைக்கூறி வணக்கஞ் செலுத்துகின் றார்.

"தழலது கண்ட மெழுகது போலத்
தொழு துளமுருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டதுவிடாதெ
படியேயாகிநல் லிடையரு வன்பிற் [னும்
பசுமரத்தாணி யறைந்தாற் போலக்
கிவிது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுலமாய் மெய்விதிர்த்துச்
சகம் பேயென்று தம்மைச் சிரிப்ப
நாளது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணதுவாகக் கோணுதலின்றிச்
சதுர் இழந்தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசய மாக
கற்றுமனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது
அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமையென்றிகழாதே திருவடியிணையைப்
பிறிவினை அறியா நிழலது போல
முன்பின்னாகி முனியாது அத்திசை
என்புருகந் துருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நண்புலன் ஒன்றி நாதவென்றரற்றி
உரைதடுமாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா அன்பினை நாடோறும் தழைப்பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி"

திருவருள் கைகூடுதல்:

இப்படி மாணிக்கவாசகர் வழிபாடு செய்துவருங்காலத்தில், இறைவன் மறைய வர் கோலத்தில் தோன்றி அவருக்கருள் செய்தார். இதைத் திருவண்டப்பகுதியில் இறுதியில் தெளிவாக எடுத்துரைக்கின்றார். "தனக்கொப்பிலாத இறைவன், என்போன் றவர்கள் கேட்கும்படி, அறிவுறித்தியருளி, போருக்கழைத்தாற்போல் அழைத்து அடி மையாகக்கொண்டு, அந்தணனாகிய ஆசிரிய

வடிவத்தோடு தோன்றி அருள் செய்தலும், அன்புமேலிட்டினால் என்புருகும்படி ஓல மிட்டு, கொந்தளிக்கின்ற கடலின் அலைபோல எழுந்து விழுந்து, பித்துப் பிடித்தவர்போல மயக்கங்கொண்டு, வெறிபிடித்தவர் போல் களித்து, பார்த்தவர் திகிலடையவும், கேட் டவர் அதிசயிக்கவும் பாகனை ஏறவிடாதமதங் கொண்ட யானைபோல, அன்பினைத் தாங்க முடியாதபடி, என் உறுப்புக்களை யெல்லாம் கொம்புத் தேன்போன்ற இன்ப உணர்ச்சி யாற் செய்தமைத்தான். புன்னகையினால் திரிபுரங்களை யெரித்தமாதிரி, அருளென்னுந் தீயால் எங்கள் அடிமை உடம்புகளை ஒடுங்கு வித்தான், உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற அமுதமாயினன். அவன் எனக்கருள் செய் ததை ஏடுத்துரைக்க அறியேன், அவன் அருளைத் தாங்கவும் மாட்டேன்; அதையறி யும் ஆற்றலுமிலேன். நான் செருக்கற்று விட் டேன். எனக்குக் கிடைத்த பேரின்பத்தை முழுதும் குடிக்கவும்மாட்டேன், விழுங்கவும் மாட்டேன், முழுச்சந்திரன் பிரகாசிக்கும் போது கடலிற் பொங்கும் நீர்போல, உள் ளத்தினுள்ளே பேரின்பம் நிறைந்து பாற் கடலைப்போல் எழச்செய்து, அமுதானது உரோமத்தின் அடிதொறும் நிரம்பச் செய் தான். நாய்போன்ற என் உடம்பின்கண்ணே எழுந்தருளி, இரத்தக்குழாய்தோறும் நரம்பு தோறும் அமுத தாரைகள் ஓடச்செய்தனன். உருகுந் தன்மையுடைய உள்ளத்தினால் உட லமைத்தாற் போல ஒவ்வொரு பகுதியிலும் அமுதம் ஊறுகின்ற உடம்பைத்தந்தனன். கற்கண்டு போன்ற இனிமையையுடைய கனி களைத் தேர்ந்து உண்ணுகின்ற யானைபோல் இறுமாப்புடன் இருக்குமாறு என்னைச் செய் தனன். அயனரி அறியாப் பெரியோன் திரு வருட்டேனனது என்னுடன் கலக்கும்படி செய்து அவ்வருளோடு பேரின்ப அமுதத் தையும் அமைத்து வைத்தான்.

"தன்னேரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறை கூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பு என்புருக ஓலமிட்டு
அலைகடல் திரையில் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறு வீழ்ந்துபுரண்டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களிறு ஏற்றுத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேனை அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றூர் மூதூர் எழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கு) அன்று
அருட்பெருந்தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையின் நெல்லிக்கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது
தெரியேன் ஆஆ செத்தேன் அடியேற்
கருளிய தறியேன் பருகியு ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தன் பாற்கடல் திரைபுரை வித்(து)
உவாக்கடல் நள்ளநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுநம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன்ஊன்
குரம்பை தோறும் நாயுட லகத்தே [தழை
குரம்பை கொண்டின்தேன் பாய்த்து
அற்புதமான அமுத தாரைகள் [நிரம்பிய
எற்புத்துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங் கொண்டோ ருருச்செய்
[தாங்கெனக்
கள்ளூறுக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறு எனக் கடை முறை
என்னையு மிருப்ப தாக்கினன், என்னிற்
கருணைவான் தேன் கலக்க
அருளொடு பரா அமுதாக்கினன்
பிரமன் மாலறியாப் பெற்றியானே"

பேரின்ப அனுபவம் சொல்லுக் கடங்கா தென்று வேதமும் உபநிடதமும் கூறுகின்றன. அப்படிச் சொல்லொணாத அனுபவத்தை மாணிக்கவாசகர் மேல் எடுத்துக் காட்டிய அடிகளில் சொல்ல எத்தனித்து வெற்றியும் பெற்றிருக்கிறார். இறைவன் **"தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்"** என்றறுதி யிட்டுக் கூறுகின்றார் இதற்குமேல் தெளிவா கப் பேரின்ப உண்மையைக் கூறமுடியாது. இராமலிங்க சுவாமிகள், மாணிக்கவாசகரைத் தமது குருவாகப் போற்றி அவரருளிய திரு வாசகத்தைப் பிறவிப் பெரும்பிணிக்கு மருந் தாகக் கருதி நன்கு பயின்றவர். இப்படிப் பயின்று மாணிக்கவாசகப்பெருமானின் பெரு மையை பத்துப் பாடல்களில் எடுத்துக்

காட்டியுள்ளார். அதில் ஒருபாட்டில் திரு வண்டப்பகுதியில் அவர் ஈடுபட்டு அதன் கருத்தைத் தமக்கு முற்றுக விளக்குமாறு மணிவாசகப் பெருமானை வேண்டுகின்றார். அந்தப் பாட்டை இங்கு தந்து இக்கட் டுரையை முடிக்கிறேன்.

" உருவண்டப் பெருமறையென்
றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனும்
திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவரும்
கூறுகின்ற கோவேநீ
இருவென்றத் தனியகவல்
எண்ணமெனக் கியம்புதியே."

முற்றும்.

பெரியோர்கள் வாழ்க்கையில் சிறியதொரு சம்பவம்

ஸ்ரீ ராமதாஸ் சுவாமிகளின் சுயசரிதையிலிருந்து.....

ஒரு நாள் ராமதாசரும் இன்னொரு தொண்டனும் ரெயிலில் 'டிக்கட்' இன்றிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் டிக்கட் பரிசோதக ரால் ரெயிலினின்று வெளியில் விடப்பட்டனர். இருவருக்கும் வாக்கு வாதம் வரவே டிக்கட் பரிசோதகர் ராமதாசரைப் பார்த்து "தாங்கள் இவ்வாறு பிரயாணம் செய்ய ஏன் உத்தேசித்தீர்கள்" எனக் கேட் டார். அதற்கு "கடவுளை நாடி" என்று ராமதாசரிடமிருந்து பதில் வந்தது. "கடவுள் எங்குமிருக்கின்றார் அப்படியிருக்க நீங்கள் அவரைத் தேடியலைவது விந்தையாகவிருக்கின்றதே"என்றார் டிக்கட் பரிசோதகர்.

"உண்மைதான் ஆயினும் எங்கு சென்றாலும் அவரேதானிருக்கிறா ரென்பதை நேரேயனுபவித்துணர இவன் விரும்புகிறான்" என்றார் ராமதாசர்.

"நல்லது அப்படியாயின் இவ்விடத்திலேயே நீங்கள் கடவுளைக் காணவேண்டுமே" என்றார் பரிசோதகர்.

"ஆம்! நாம் நிற்கும் இவ்விடத்திலேயே அவர் நிற்கிறார் சகோ தரரே" என்றார் சுவாமிகள்.

"எங்கே, எங்கே?" என்று அதிசயப்பட்டார் பரிசோதகர். ராம தாசர் புன்னகையுடன் "இங்கே, இங்கே என்றியம்பியவாறு டிக்கட் பரிசோதகரின் நெஞ்சைத் தொட்டு முன்னே நிற்கும் இவ்வளர்ந்த வடிவில் ராமதாசன் கடவுளைக் காண்கின்றான்" என்றார்.

டிக்கட் பரிசோதகர் சிரித்துவிட்டு இருவரையும் ரெயிலேற்றி அனுப்பிவைத்தார்.

சகலகலாவல்லி

"ராஜபாரதி"

அகல் மேரு மாமலைமேல்
"அட்சரமாய்" உற்பவித்தே..
புகழ் மேவு காவியமாய்ப்
பொலியுங் கலைமடந்தாய்!

2

உள்ளத் திருளோட்டும்
ஓங்காரச் செஞ்சுடரே
கள்ளமிலா வெள்ளை நிறக்
கமலப் பூ வாசனியே!

3

வீட்டை நிறைக்கும்..
விட்டகலாப் பொற்குவையே
நாட்டிற் கலைக் கூடம்
நாடி உறைபவளே!

4

மன்னரிலும் கற்றோர்க்கு
மதிப்புத் தருபவளே!
இன்னமுதே! பன்னரிய
ஏடுகளாய் நிற்பவளே!

5

சிற்பி செதுக்குஞ்..
சிலையிற் சிரிப்பவளே!
கற்பனை செய் நற்புலவன்
கலியாய்க் கதைப்பவளே!

6

கொட்டுகிற கொல்லன்கைக்
கோலஞ்செய் நல்லனியே!
கட்டழகைச் சித்திரிக்கும்
கலைவாணர் ஓவியமே!

2. தோத்திரக் கும்மி

காணுங் கலையெலாங் காட்சி தருங் கலா
வாணியை வாழ்த்தி வழுத்திடுவோம்–புகழ்
வேணு கானஞ் செயும் வித்தியா தேவியை
வேண்டிப் பதமலர், கைகுவிப்போம்

2

முட்டறு சிந்தை யளிப்பவளே அகம்
மொய்த்த இருளைக் கிளிப்பவளே-வெண்
பட்டை யுடுத் தொளிர் பங்கயதேவிமேற்
பாமலர் சூட்டி அலங்கரிப்போம்

3

தென்னன் புகழிற் திருவிளக்கங் காட்டித்
தீந்தமிழ்க் கூடல் உறைந்தவளே–வைகைத்
தண்ணீரைத் தாழ்த்தி நடந்தவளே! தலை
தாழ்த்தினை மெம்மையாட் கொண்டருள்வாய்..

4

"பஞ்ச புலன்களும்" நீர் விளையாடிடும்
"பாவைகள்" என்பதை நாமுணர்வோம்–வெண்
கஞ்சமலர்ப் பள்ளி கொண்டவளே, கடைக்
கண் திறந்தே "ஞானக் கண்" தருவாய்!

5

அம்மை-அபிராமி! உம்மன வாடையை
எம்மனப் பைம்புலத் தேற்றிடுவாய்–துணைக்
கைம் மலர் கொட்டியே ஆடினம், பாடினம்,
காத்தருள்வாய், கலாக்ஷேத்திரமே!

3. கழலாட்டு வரி

அண்ட பேரண்ட மெலா அஞ்ஞான மோட்டுவாள்
அற்புதப் பேருரைத் தாடாய் கழல்!
கண்ட கலையாவிலுங் காட்சி தரு வாணிமேற்
கானமழை பெய்து நின்றாடாய், கழல்!

2

அந்தர செளந்தரி! அநந்த பைரவி! ஆறறிவு
அம்மையென் றாடாய், கழல்!
புண்டரீக வாசனி! போதக் கருவூலப்
பூரணியை வாழ்த்தியே, ஆடாய் கழல்

3

வீணை எழு நாதனீ, வேய்குழற் கீத நீ
வித்தகி பேர் கூறி ஆடாய் கழல்!
காணு தொழில் யாவிலும் கலையாக்கஞ் செய்திடுங்
கற்பகி.. பேற்றினின் ருடாய்கழல்!

4

சகல கலா வல்லி மேற் சங்கூதிப்
பூசைசெய் தாடாய் கழல்!
சரசுவதி அம்மையே! சரணம்..
சரணமென்ருடாய் கழல்!

4. சிறுவர் பிரார்த்தனை

பஞ்ச வயதான முதல் பள்ளித்தலங்
கொண்ட எம்மை,
கஞ்ச மலர்த் தேவதையே! – தாயே!
கையளித்தே காத்திடுவாய்..

2

படித்த பயன் நிறைந்தே
பரம்பொருளைத் தெரிந்து
எடுத்த பிறப்பறுக்கத் தாயே
ஈடேற்றம் ஈந்தருள்வாய்..

3

செய்யுங் கரியைகளில்..
செவ்விமுகங் காட்டி எம்மை
ஐயமற ஞானம் பெறத் – தாயே!
ஆட்கொண்டருள் புரிவாய்..

4

சித்திரமும் நல்லிசையும்
சீர்த்தமிகு நாடகமும்
வித்தைகள் பலவுந் தந்தே - தாயே!
விழுப்பமடையச் செய்வாய்..

5

"ஏட்டில்" நடம் புரியும்
ஏக கலா வல்லியே!
நாட்டில் கலை விளக்கம் - ஈட்டும்
நல்லருள் தந்தடம்மா..

6

வெள்ளைக் கலைகள் தந்து
வெள்ளை இதயந் தந்து
பள்ளித் தலமனைத்தும் - கோயிற்
பண்பினைத் தந்திடுவாய்!

7

உள்ளச் சுத்திகரிக்கும்..
உத்தமி! வித்துவத்தை
அள்ளித் தெளித்திடம்மா – தாயே
அஞ்சலி ஏற்றிடம்மா.

5. மங்கள வாழ்த்து

காதொளிருங் "குண்டலத்தாள்"
கவிமொழியாள் பேர் வாழி..
மேதகு மென் மார்பிடைச் "சிந்
தாமணியாள்" சீர் வாழி..
கீதமிடும் "வளையாபதி" க்கரத்தாள்
சீர் வாழி....
ஓது "திருக்குறள்" உயிர்
உட்கொண்டாள் பேர் வாழி
மான்புறு நற் துடியிடைமேல்
"மணிமேகலாபரணி!"
தங்குரல் வாய் "சிலம்ப" லறுந்
திருவடிகள் வாழியவே..

முற்றும்

ஷண்முகனின் தோற்றம்

உலகை உய்வித்தற் பொருட்டு உண்டுபட்ட முருகக் கடவுளின் பிறப்பு வியக்கத்தக்கது! தவத்தின் விளைவே முருகவேள். சிவனுடைய ஐம்பொறிகளிலின்று ஐந்து ஒளிப்பிழம்பு, மனத்தினின்று மற்றோர் ஒளிப் பிழம்பு ஆக ஆறு ஒளிப்பிழம்புகள் வெளிக்கிளம்பின. அவ்வொளித்திரள்கள் சரவணப் பொய்கையில் பிர வேசித்தது. சிவகுமாரன் அங்கிருந்து உதித்தான். ஆறு முகம், பன்னிரு தோள்கள், ஒரு உடல் உடைய தெய்வக் குழவிதான் எம் ஷண்முகன்!

மருதநிலத்துத் தெய்வவழிபாடு இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது—

மருதம்

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை—

"தண்டலை மயில்களாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் குழவினேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினிகாட்டத்
தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிதுபாட
மருதம்வீற் றிருக்குமாதோ."

மயில்கள் குளிர்ந்த சோலைகளிலே தோகை விரித்து ஆடுகின்றன. தாமரைகள் விரிந்து விளக்கேற்றுகின்றன. முகில்களாகிய முழவுகள் நீல ஆகாயத்தின் திரையுள் முழங்குகின்றன. இச்சமயத்தில் குவளைகள் கண்விழித்து நோக்குகின்றன. வண்டுகள் தித்திக்கும் தேனைப் பிழிந்து ஊற்றுவது போல யாழ்செய்கின்றன. இந்தக் கோலாகலங்களுக்கு மத்தியிலே மருதம் என்கின்ற அரசிளங் குமாரி கொலுவிருக்கின்றாள். மருத நில வளப்பம் அரசிளங் குமாரியின் கொலுவிருக்கையோடு ஒப்பிடப்பட்டிருக்கின்றது.

"சேலுண்ட ஒண்கணிரிற் றிரிகின்ற செங்
[காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய
[மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளிக்
[கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப்பச்சைத் தேரை
[தாலாட்டும் பண்ணை."

வயல்களின் இடையிடையே தாமரைத் தடாகங்கள். புஷ்ப சயனத்தில் அன்னப் பிள்ளைகள் கண்வளருகின்றன. எருமைகள் தம்கன்றை நினைக்குந்தோறும் பால் சோர்ந்து அப்பாலால் அன்னப்பிள்ளைகளுக்கு உணவு ஊட்டுகின்றன. அதனால் நித்திரை குழம் பாமல் பச்சைத் தேரைகள் பச்சிலைகளில் தோன்றித் துணையாயிருந்து தாலாட்டுகின்றன. அன்னப் பெண்கள் அன்னப்பிள்ளைகளைப் பாலூட்டித் தாலாட்டும் பொறுப் பின்றித் துரைப்பெண்கள்போல் உலாவித் திரிகின்றன. இது வயல் நிலக்காட்சி. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். மருதநிலத்து அன்னங்களின் வாழ்க்கை இப்படியானால் அந்நிலத்து மக்களின் செலவ வாழ்க்கையைச் சொல்லவேண்டுவதென்ன!

'மஞ்சளாவிய மாடங்கள் தோறும்
மயில்கள்போல் மடவார்கணம் சூழும்'

என்று சின்னத்தம்பிப் புலவர் வர்ணிக்கின்றார். மருத நிலத்து ஆடவரும் மகளிரும், செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருப்பவர்கள். பொன்போலும் புதல்வர்களைப் பெற்று அன்பு வாழ்க்கை வாழ்கின்றவர்கள். குறையொன்று மில்லாமைதான் அவர்கள் வாழ்க்கையில் ஒரு குறை. கல்வி செல்வங்கள் நிரம்பித் ததும்புகின்ற செல்வ வாழ்க்கை மருதநில வாழ்க்கை. தெய்வந் தொழாது கொழுநனைத் தொழுது எழுபவள் மருதநிலத்துப் பெண். கணவனுகிய தலைவனே மருதநிலத் தலைவிக்குத் தெய்வம். அடியார்களுக் கூடாகக் கடவுளைத் தரிசிப்பதுபோல், கணவனுக் கூடாகக் கடவுளைத் தரிசிக்கின்றவள் மருதநிலத் தலைவி. அவள் தான் ஒரு சந்தர்ப்பத்தில்,

"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா"
என்று கேட்டவள்.

"கண்ணுள்ளார் காதலவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து"

மருதத் தலைவி கண்ணுக்கு மைதீட்டுவதில்லை. மைதீட்டும் நேரம் மிகச்சிறிய தொன்றுயினும் அவ்வளவு நேரந்தானும் அவள் அவனைக் காணுதிருக்கச் சகிக்கமாட்டாள். அதனால், அவள் மைதீட்டுவதையே தவிர்த்துவிடுகின்றாள். அவ்வாறே அவனும்

அவள்பாலே தலையளிசெய்கின்றான். தலையளி - தலையாய அன்பு, கணவனுக்கும் மனைவிக்கும் உடம்பு இரண்டு, உயிர் ஒன்று 'தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்பத் துன்பங்கள்' என்பது மணிவாசகம். ஒருநாள் மருதத் தலைவி ஒருத்தி கணவன் மாளிகையில். அவன் நுகர்தற்குக் குழம்பு சமைக்கின்றாள். தாளிதத்தை அவள் கண்கள் இமையாமல் நோக்கியபடி இருக்கின்றன ; புருவம் பார்க்கின்றன. அதனாலே தாளிதப் புகை கண்களில் மொய்க்கின்றது. ஒருகை அகப்பை பிடித்தபடி துழாவிக்கொண்டே யிருக்கின்றது. மற்றக் கை கட்டியாகிய முளிதயிர் பிசைகின்றது. இந்தச் சமயத்தில் அவள் உடுத்திருந்த விலை மதிக்க ஒண்ணாத தூயதுகில் முந்தானை நெகுழுகின்றது. கை கழுவித் தொட வேண்டியதுகில் அந்தத்துகில், அப்படியிருக்கவும் அந்தத்தலைவி அதனைத் தயிர்க் கையைக் கழுவாமலே தீண்டிச் சரிசெய்து கொள்ளுகின்றாள். தலைவன் நுகரும் குழம்புக்கு எதிரிலே அந்தத் தூசு, அவளுக்கு வெறுந் தூசி மாத்திரையாய்விட்டது. அன்பு இருந்தபடி அது. குழம்பு சமைத்துவிட்டாள். அதன்மேல், அவன் நுகர்தற்கு அமருகின்றான். குழம்பு படைக்கப்படுகின்றது. படைக்கும்போதே அவன் இனிது இனிது என்று மகிழ்கின்றான். நுகர்தற்கு முன்னமே அவள் அன்பு பெருகப் படைக்கும் வகையில் அவனுக்கு இன்பம் பெருகுகின்றது. காகத் திருகண்ணுக்கு ஒன்றே மணி கலந்தாற் போன்ற ஒன்றுபட்ட வாழ்க்கை மருத வாழ்க்கை. இப்படிப்பட்ட வாழ்க்கையிலேயும் கண்ணூறு வீழுந்து விடுகின்றது ஒரு சமயம் ஒரு குறை ஒரு தலைவியின் அடிமனத்தில் குடிகொண்டுவிட்டது. தலைவன் செய்யுந் தலையளியில் எவ்வித குறையும் இல்லை. அப்படி இருந்தும் அவள் மனசில் ஏதோ ஒரு குறை குடிகொண்டிருக்கிறது. அந்தக்குறை நன்மைக்கோ தீமைக்கோ ஆர் அறிவார் ! நன்மைக்குந்தான் என்கின்றது உயர்ந்தோர் உலகம். மருதநில வாழ்க்கைக் குரிய அன்பொழுக்கம் 'ஊட்டல்' என்கின்றது பொருளிலக்கணம்.

"இல்லை தவறு அவர்க்காயினும் ஊடுதல்
வல்லதவர் அளிக்கு மாறு."

தவறு அவர்க்கு இல்லை - தலைவரிடமோ தவறு என்பது மருந்துக்கும் இல்லை. அவர் மகா புனிதர். அப்படியிருந்தும் அவள் அவரை ஊடுகின்றாள். அந்த ஊடுதல், அவர் அளிக்கு மாறு வல்லது – தலைவர் அளிசெய்கின்ற அன்பின் மகாபுனிதத்தைத் தலைவி உணர்தற்கு உபகாரமாயிருக்கின்றது ; ஊடுதல்தான் உணர்த்த வல்லது. உவகை பெருகுதற்கு ஊடுதல் உபகாரம். நிழலின் அருமையை வெய்யிலிலேதான் உணரமுடியும். அவ்வாறுதான் அன்பின் அருமையை ஊடலிலேதான் உணரலாம்.

தலைவி தலைவனின் தலையன்புக்குப் பாத்திரமாய் இருக்கின்றாள். அவனின்றி அவளில்லை. அப்படியிருந்தும், அவன்தனக்குச் செய்யுந் தலையன் பிற் பாதியை - ஒரு துளியை – மற்றொருதிக்கு அவன் செய்வதுண்டானால், அதை அவளால் சகிக்க முடிவதில்லை. அதுதான் அவள் குறை. அந்த நோய்தான் ஊடலாய் வெளிப்படுகின்றது. நோய் உள்ளடங்கக் கூடாது. வெளிப்பட்டுத்தான் தீரவேண்டும்.

இந்த ஊடலாகிய மருதத்துக்குப்புறம் உழிஞை. பகை மேற்சென்ற வேந்தன் பகைவன் நாட்டை முற்றுகையிடுகின்றான். பகைவேந்தன் முற்றிக்கைக்குள் அகப்படாமல் தன் நாட்டைப் பாதுகாக்க முயல்கின்றான். இந்த நிலைக்கு உழிஞை என்று பெயர். தலைவி தலைவனின் தலையளியை மற்றவர்கள் பங்கு செய்யாமல், அவனைத் தன்வயம் செய்து முற்றிக்கையிட முயல்கின்றாள். அவனை சுவதந்திரன் ; பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தாற் போன்றவன் ; ஊருணி; ஊராரால் நுகரப்படும் நீர்நிலை போல்பவன்; யாவருக்கும் ஊதியம் ; அவன் எவருக்குங் கட்டுப்படாதவன். அதனாலே முற்றிக்கையிடுகின்ற வேந்தன் நிலை தலைவிக்கும் பிறக்கின்றது. ஆதலினாலே ஊடுகின்றாள். இது அவன் குறையன்று; அவள் குறை.

தலைவிக்கு இல்லக்கிழத்தி என்று பெயர். வீட்டுக்கு உரியவள் ; வீட்டுக்காரி. மோகூஷக் காரியென்றும் சொல்லலாம். மோகூஷம் என்றால் வீடு. பந்தங்களை எல்லாம் விட்டவள். பற்றுக்களை விடும்பொருட்டு பற்றுதற்குரிய ஒருவனைப் பற்றுக்கோடாகப் பற்றினவள் ;

ஒருவனைப் பற்றிக்கொண்டு ஓரகத்து இருப் பவள்; இரண்டு அகம் இல்லாதவள்; மிக உயர்ந்தவள். இவளுக்குக் கீழே இவள் நிலையை அடையாமல், மோகூஷக்காரிகள் ஆகாமல், காமம் அர்த்தம் தர்மம் என்ற படிகளில் பலர் இருக்கலாம். அவர்களும் ஒருவனைப்பற்றி ஓரகத்திருக்க முயற்சிப்பவர் களே. அவர்களும் அவன் அன்புக்குப் பாத் திரம் ஆனவர்களே. அவனே காரணி கற் பகம்; ஊருணி.

இல்லக்கிழத்தி மோகூஷக்காரியாய் இருப் பது போல, அவளுக்குச் சற்றே கீழ்ப்படி யில் ஒரு காமக்காரி இருக்கலாம். அவள் இல்லுக்குரியவள் அல்லாதவள். அந்த உயர் நிலை அவளுக்கு இன்னமும் சித்திக்கவில்லை. அவள் இற்பரத்தையாயிருக்கின்றாள். இல் லுக்குப் புறம்பானவள் என்று கருத்து. பரத்தை என்றால் பொதுப்பெண் என்று இங்கே கருத்தில்லை. இற்பரத்தை என்றால் இல்லக்கிழத்தி அல்லாதவள் என்று பொருள். அவளுக்கு மற்றொரு பெயர் காமக் கிழத்தி, அவனைக்காமித்தற்கு உரியவள்; தர்மார்த்த காமமோகூஷம் என்ற படியில் மூன்றாவது படி யில் உள்ளவள்; அவளும் அவனை அடைதற் குரியவள்; அவன் அன்புக்குப் பாத்திரம் ஆனவள். அது நீதி. ஆனால், இல்லக்கிழத் தியால் அதைச்சகிக்க முடிவதில்லை.

நாய் நன்றிக்கு உதாரணமான மிருகம். ஆனால் காக்கையின் குணம் அதற்கு வருவ தில்லை. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்கின்ற உயர்ந்த குணம் காக்கைக் குணம். அக்குணம் நன்றிக்கு வித் தான நாய்க்கு வகுவதில்லை. காக்கைக் குணம் இல்லக்கிழத்திக்கு வரவேண்டும். வராமை ஒரு குறை. மிக மிக உயர்ந்த நிலையிலும் இந்தக்குறை தலை காட்டிக்கொண் டேயிருக்கும். அதன் வெளிப்பாடுதான் ஊடல். ஒரு நாள் ஒரு தலைவிக்கு ஒரு தவறும் செய்யாத தலைவனிடம் ஊடல் உண்டா கிறது. அவள் சொல்லுகின்றாள்.

''நேற்று எங்கள் செல்வக்குழந்தை தெரு வில் தேர் உருட்டிக்கொண்டு நின்றான். நான் இல்லுள் இருந்து அதனை அநுபவித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு ஒருத்தி தோன்றினாள். அவள் குழந்தையை ஐயுற்று ஏற இறங்கப் பார்த்தாள். தலைவ ராகிய தங்களைப் பார்க்கிற பார்வையாய் இருந்தது அவள் பார்வை. திடீரென்று குழந்தையைக் கட்டித்தழுவி முத்தமிட்டாள். உடனே அவளை நான் கூவி, இங்கேவா; இவன் உனக்கும் மைந்தனே; நீ உறவு கொண்டாடுவதில் தவறே இல்லை; இந்த இல்லமும் உனக்கு உரியதே என்றேன். அவ்வளவில் அவள் நாணித் தலைகுனிந்து கொண்டு போய்விட்டாள். நான் அவ்வாறு உபசரிக்கத்தானே வேண்டும்." இது அந்த இல்லக்கிழர்த்தியின் கூற்று. இக்கூற்றுக் காமக்கிழத்தியைச் சகிக்காமையின் வெளிப் பாடு; தலைவனை இடிக்காமல் இடிப்பது.

தேவர்கள் தவங்கிடந்து வரம் பெறுகின் றார்கள். அவ்வாறு அசுரர் வரம்பெறுவதை அவர்களால் சகிக்க முடிவதில்லை. இறை வனைக் கட்டுப்படுத்தத் தேவர்கள் ஆர்! இறைவன் அசுரர்களுக்கும் அருளுகின்றான். ஆண்மையைக் கட்டுப்படுத்தல் பெண்மைக்கு அடாது. பெண்மை வழி அடங்குதல் ஆண் மைக்கு இல்லை. தெய்வயானை அம்மையார் தவமிருந்து முருகனைப் பெறுகின்றார்; அவனை அநுபவிக்கின்றார். அவ்வாறே முருகனைப் பெற வள்ளிநாயகியும் முயல்கின்றார். இத னைத் தெய்வயானை அம்மையார் அறிந்ததும். முருகனைக் கட்டுப்படுத்த அவர் முயலவில்லை. ''ஈங்கு ஒரு தமியளாகி இருந்திடுவெனுக்கு இன்று ஓர் பாங்கிவந்துற்றவாறு நன்று எனப்பரிவு கூர்ந்தார்.'' 'யான் பெற்ற இன் பம் பெறுக இவ்வையகம்' என்கின்ற உயர்ந்த நிலை தெய்வயானை அம்மையாரின் நிலை மருத நிலைக்குமேற்பட்ட நிலை அந்தநிலை. குறைகளெல்லாம் போய் ஊடலுக்கு அப் பாற்பட்ட நிலை அம்மையாரின் நிலை. அந்த நிலையை 'மறுவில் கற்பு' என்கின்றது திரு முருகாற்றுப்படை.

மருதத் தலைவி ஊடுதலினாலே தன் மறு வாகிய குறையைப் போக்குகின்றாள். அவன் ஊருணி என்பதை உணர்ந்து உவகை பொங்குகின்றாள். 'ஊடல் உவகை' என்ற தொடர்ப்பொருள் இங்கே சிந்திக்கத் தக் கது. 'ஊடுதல் காமத்துக்கின்பம்' என்பது திருவள்ளுவ நாயனாரின் இறுதி வார்த்தை. 'ஊருணி' என்பது மணிவாசகரின் இறுதி வார்த்தை. முதல்வனை 'ஊருணி' என்று உணர்வதுதான் மறுவில் கற்பு; மருதம் பரி சுத்தப்பட்ட நிலை.

பத்தி

— ஜெ. செந்தில்நாதன் —

"எதை நீ பாவனை செய்கிறாயோ அது நீ யாவாய்"

இறைவன் அன்பு வடிவானவன் "அன்பே சிவம்" என்பதே சைவசமயத்தின் அடிப்படைக்; கொள்கை. அன்பு வடிவான இறைவனை அன்பினூற்றூன் பற்ற முடியும். "பத்தி வலியிற் படுவோன் காண்க" என்ற மாணிக்கவாசகரின் அருள்வாக்கும் இதையே உறுதிப்படுத்துகின்றது. நாம் இறைவன் மாட்டுச் செலுத்துகின்ற அன்பு பத்தி எனப்படும்.

பத்தி எத்தன்மைத்து என்று கூறுதல் முடியாது. பத்தி செய்து முத்தி பெற்ற அடியவர்களும் தமது பிரசுரங்களில் பத்தி எத்தன்மைத்து என்றியம்பினரிலர். தாம் இறைவன் மாட்டு அன்பு செலுத்த இறைவன் அவர்கள் மாட்டு அருள் பொழிய அதனால் ஏற்பட்ட தமது அனுபவங்களையே தமது பாசுரங்களில் அமைத்துப் பாடினர். சிவமேயாய காட்சியிற் திளைத்த மாணிக்கவாசகப் பெருமான் கூட தமது ஊன் உருகிற்று. எலும்புருகிற்று, உள்ளொளி பெருகிற்று என்றிவ்வாறு பத்தியின் பயனைக் கூறினரே ஒழிய அதன் தன்மையைக் கூறிற்றிலர். அது அனுபவித்தறிய வேண்டியதொன்று.

நமது ஆன்ம ஈடேற்றத்திற்குப் பத்தியினதும் அதனோடு கூடிய தெய்வ வழிபாட்டினதும் இன்றியமையாமையைப் பல அடியவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். நம்மை புன்நெறியதனிற் செல்லவிடாது. நன்நெறி ஒழுகச்செய்து இரு வினையையும் நீக்கி ஆளக் கூடியவன் ஆண்டவன் ஒருவனே. அத்தகைய இறைவனை ஆராத அன்போடு வணங்குதலாலேயே மானிடப்பிறவி உறுதிப் பொருளை அடையும் இவ்வாறுக ஆன்ம ஈடேற்றத்திற்கு மட்டுமன்றி இவ்வையக வாழ்வைச் செவ்வனே நடத்துவதற்கும் பத்தி எவ்வளவோ துணைபுரிகின்றது. அது எவ்வாறென ஈண்டுக் கூறுவாம்.

இவ்வையக வாழ்வு இன்பமும் துன்பமும் கலந்தது. இவ்வாழ்வில் களிப்புற்றிருக்கும் ஒருவன் தெய்வவழிபாட்டைப் பற்றிப் பெரும்பாலும் எண்ணுவதில்லை. துன்பத்தால் அலமந்து வெதும்புகின்றபோதுதான் தெய்வ சிந்தனை அவனைத் தொடுகின்றது. தனது உற்றூர் உறவினர்கள் தனது துன்பத்தைத் துடைக்கும் சக்தி அற்றவர்கள் என்றுணர்கின்றான். தன்னிடத்திலிருந்து பயன் பெறுதற்குத் தன்னோடு நெருங்கிப் பழகியவர்கள் தான் துன்புறுங்கால் தன்னை விட்டு விலகுவதைக் காண்கின்றான். இந்த நிலையில் உலகியலில் ஒரு வெறுப்புத் தோன்றுகின்றது. தனக்கு இன்பமும் துன்பமும் விளைவிக்கின்ற மகாசக்தி ஒன்றுண்டு என்பது புலனாகின்றது. இந்த நிலையில் மெய்யன்போடு கூடிய தெய்வ வழிபாடு நடத்தி மனச்சாந்தி பெறுகின்றான். பத்தியோடு தெய்வத்தை வழிபடுகின்ற பொழுது இறைவன் திருவருள்வீடு படுகின்ற நிலை ஏற்படுகின்றது. அன்பு பெருகப் பெருக அந்த நிலை நீடிக்கின்றது. அந்த நிலை நீடிக்க இவ்வுலகப் பற்றினால் வரும் துன்பம் சூறைகின்றது. ஆகவே ஒருவனுடைய சாதாரண வாழ்வினிலே துன்பம் காரணமாகத் தெய்வத்திடம் உண்டாகும் மெய்யன்பும் தெய்வவழிபாடும் அவனுடைய மனக்கவலையை மாற்றி மனச்சாந்தி கொடுக்கின்றன.

இறைவன் பால் அன்பு செலுத்துகின்றவன் அவனுடைய படைப்புக்களிலும் அன்பு செலுத்துகின்றான். பத்தியின் உச்சநிலையிலே அவையின் பால் தெய்வத்தின் சாயலையும் காண்கின்றான். இறைவனையும் அவனையும் பிணிக்கின்ற பத்தி உறவினரிடத்தில் அன்பாகவும் பிறவுயிர்களிடத்து அருளாகவும் பரிணமிக்கின்றது. அவனுக்குப் பெரியவன், சிறியவன், மேல்சாதி, கீழ்சாதி என்ற வேறுபாடே தோன்றாது. சாதி குலம் எனற வேறு

பாடில்லாத சமுதாயத்தைக் கர்ண்பவனும் சிருட்டிக்கக் கூடியவனும் அவனே.

பிறரிடத்து அன்புள்ள பக்தன் அவர் துன்பங் கண்டு வருந்துவான். அத்துன்பத் தைத் துடைக்கின்ற ஆர்வம் அவனைச் சமு தாயத் திருத்தொண்டிற் புகுத்தி விடும். பெயருக்கும் புகழுக்குமாகச் சமுதாயத் தொண்டிலீடு படுபவர்களைப் போலல்லாது உண்மை ஊழியனாக பிறர் நலம் பேணக் கூடியவன் உண்மை பத்தனே. "பிறர்க்கறம் முயலும் பெரியோன்" "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'' என்ற புகழ் மொழிகள் அவனுக்குத்தான் தகும். சமூக ஊழியனாக மாறுகின்ற மெய்ப்பத்தன் தெய்வத்தின் குணங்களைச் சிறிது சிறிதாக அடையத் தொடங்குகிறான். தெய்வ பத்தியினால் இவ் வரும் குணங்களைப் பெற்றவனை மக்கள் தெய் வமாகவே கருதுவர். இதனாலன்றே,

"அங்கமெலாம் குறைந்தழுகு தொழு
[நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு
[அன்பராயின்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்று திருநாவுக்கரசர் அருளிப்போந்தார். எவ்வளவு கடை கெட்டவனும் மெய்யன் போடு கூடிய இறைவழிபாட்டால் பிறரால் வணங்கப் படக்கூடிய தெய்வத் தன்மையை அடைந்துவிடுவான் என்பதை இவ்வாசகம் உறுதிப்படுத்துகின்றது.

இறைவன் கழலருமையை ஒருவன் உணர, உணர அவனுக்குத் தன்னுடைய சிறுமையும் புலனாகின்றது. இறைவன் ஆளுகின்றவன் தான் ஆளப்படுகின்றவன் என்ற உணர்ச்சி அவனிடத்திலே தோன்றுகின்றது. எல்லாம் அவன் செயலல்லாது தன்னாலாவது ஒன்று மில்லை என்பதை உணர்ந்தவுடன் அவனிடத் திலுள்ள ஆணவம் குறைகின்றது. இப்படி யாக ஆணவம் அடங்குவதினால் அவனுடைய உலகியல் வாழ்க்கை செவ்வனே நடைபெறு கின்றது.

மெய்யன் போடு கூடிய இறைவழிபாடு ஒருவனிடத்திலே பொறுமையை வளர்க்கின் றது. இப்பொறுமை அவரவர் பத்தி நிலைக் கேற்றவாறமையும். சிலரால் ஐந்து பத்து நிமிடங்களுக்குத்தான் பொறுமையுடனிருந்து தியானிக்க முடியும். சிலர் பல மணி நேரம் தியாத்திலமர்ந்து பேரானந்தமடைவர். நம்ம வருள் பெரும்பான்மையோர் முன் வகுப்பைச் சேர்ந்தவர்களே. ஆனால் அவர்களுடைய வழி பாடு வலிவு பெறத் தியானம் நீடிக்கும். தியா னம் நீடிக்கப் பொறுமை வளர்ந்து கொண்டே போகும் பொறுமையில்லாததினாலே இவ்வு லக வாழ்க்கையில் நமக்கேற்படுகிற இடர்கள் தான் எத்தனை? பொறுமை இழந்து பிறரைக் கொலை செய்தவர்கள் எத்தனை பேர்? பொ றுமை என்ற குணமிருக்குமானால் இத்துன் பங்கள் நீங்கி எமது வாழ்வு செழிப்படையு மன்றே?

தியானம் பொறுமையை வளர்ப்பதல் லாது ஒரே பொருளையே கூர்ந்து நோக்குகிற தன்மையையும் கொடுக்கிறது. இந்த நிலை நம் போலியரிடத்தில் நீடித்திராவிட்டாலும் இறை வணக்கம் செலுத்துகிற ஒரு சில வினா டிகளாயினும் நம் மனம் அந்நிலையிலிருப்பதை நாம் உணர்கின்றோம். காலஞ் செல்லச்செல்ல ஒன்றையே கூர்ந்து நோக்கும் சக்திவளர்கி றது. தியானத்தால் உண்டாகின்ற இந்த சக்தி உலகியலில் பெரிதும் பயன்படுகிறது. இத்தகைய சக்தி உடையோர்களே ஒரே விஷயத்தை நுணுகி நுணுகி ஆராயுந்தன்மை படைத்தவர்கள் அவர்களே சிறந்த ஞானிக ளாகத் திகழக்கூடியவர்கள். உலகத்திற்றோன் றிய பெரும் கல்விமான்கள் எல்லாம் பத்தி மான்களே. கம்பர் பத்தாயிரத்திற்கு மேற் பட்ட பாக்கள் கொண்ட கற்றோர் போற்றுங் காவியமாகிய இராமாயணத்தை இயற்றினர். கற்பனையின் சிகரமாக விளங்கும் அக்காவி யத்தை இயற்றுவதற்குக் கம்பர் எவ்வள வாழமாகச் சிந்தித்திருப்பார். அப்படியாகக் கற்பனை உலகில் சஞ்சரித்துச் சிந்திக்கின்ற ஆற்றல் அவருக்கு இராம பத்தியினால் ஏற் பட்டதென்றுதான் கூறவேண்டும். பிற்காலத் திற்றோன்றிய விபுலானந்த அடிகள், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற பெரியார்களும் மெய்ப்பத்தர்களாக வாழ்ந்தமையினாலேயே எத்தனையோ நூல்களை ஆராய்கின்ற மன ஒருமைப்பாட்டைப் பெற்றனர். மாணவர்களா கிய நாம் கூட காலையில் ஒரு சில நிமிஷங்

களுக்குத் தெய்வ வழிபாடு நடத்திய பின்னர் பாடங்களைப் படிக்குங்கால் அவற்றிற் கூறப் படும் கருத்துக்களைச் சுலபமாகக் கிரகிக்க முடிவதை வாழ்க்கையில் அனுபவித்துக்கண் டுள்ளோம்.

செயற்கரிய செய்கின்ற பெரியார்கள் பத்திமான்களாகவே இருக்கின்றனர். தெய்வ வழிபாடு ஒருவனுக்கு மன உறுதியையும் தன்நம்பிக்கையும் கொடுக்கின்றது. வாழ்க் கையில் எவ்வித இடர்களையும் தன்னால் எதிர்க்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்படு கின்றது. தெய்வம் தனக்குத் துணையாகப் பக்கத்திலிருப்பது போல அவன் கருதுகின் றான். காந்தியடிகளுடைய வெற்றிக்குக் கார ணம் அவரது தளராத மன உறுதியும் "வெற்றி காண்பேன்" என்ற நம்பிக்கையுமே. அந்த நம்பிக்கை அவருக்கு இறை வழிபாட்டி னாலேயே ஏற்பட்டது. இராமனைக் கடக்க முடியாத கடலை இராமன் நாமத்தைக் கூறிக் கொண்டே கடந்தானும் அனுமான். பத்தியின் வலிமைதான் என்னே! ஆகவே வாழ்க்கைப் பாதையிற் செல்லுகின்றவனுக்கு எவ்வித இடர்களையும் எதிர்த்துப் போராடுகின்ற வைராக்கியத்தையும் ஈற்றில் வெற்றி பெறு வது திண்ணம் என்ற நம்பிக்கையையும் கொடுக்கவல்லது பத்தி.

இத்தகைய பத்தியை வளர்ப்பதெப்படி? அடியார்களோடு அண்டி வாழ்வதினாலும், சமய இலக்கியங்களைப் படிப்பதினாலும், தேவார திருவாசங்களைப் பாராயணஞ் செய் வதினாலும் பத்தியைப் பெருக்கலாம். இறை வன் அடியார்கள் உள்ளத்திலேயே உறை கின்றான். அத்தகைய தொண்டர்களின் பெருமையே பெருமை என்று பாராட்டுகின் றார் ஔவையார். அவர்களோடு அடியாற்கு அடியானாக வாழ்தல் இறைவனோடு வாழ்த லுக்குச் சமமாகும். பெரிய புராணம் கந்தப் புராணம் போன்ற பத்திச் சுவை நிறைந்த நூல்களைப் படிப்பதினாலும் எமது பத்தி மேலோங்கும். இதனாலேயே கோவில்களில் புராணப் படிப்பு இன்றும் நடைபெற்று வரு கின்றது. அவை என்றும் மக்களுக்கு உணர்ச்சி ஊட்டக் கூடிய அழியா இலக்கியங்கள். நாயன்மார்கள் உள்ளம் உருகிப்பாடிய செந் தமிழ்த் தேவார திருவாசகங்கள் பாராயணஞ் செய்வோர் நெஞ்சை உருக்குந்தன்மையன. இப்பத்திச் சுவை நிறைந்த பாசுரங்கள் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிப் பெருக் கால் எழுந்தவையாதலினால் படிப்பவரைப் பரவசமாக்குஞ் சக்தி அவைக்குண்டு. இசை யோடு பாராயணஞ் செய்வதே சாலச் சிறந் தது. இசை இறைவனை வசப்படுத்தும் தன் மையுடையது. கயிலைமலை நாதனைக் காம் போதியினைற் கவர்ந்தான் இராவணன். திரு வாசகத்தை மோகன இராகத்தில் அமைத் துப் படிக்கின்ற பொழுது கல் நெஞ்சும் கரைவதை உணர்கின்றோம். பத்திச் சுவை சொட்டும் பாசுரங்களைப் படிப்பதினால் உண் டாகும் அனுபவம் நீடித்திருக்க வேண்டின் இசைமட்டும் போதாது. அவற்றுள் பொதிந் துள்ள அரிய கருத்துக்களையும் உணரவேண் டும் இதனாலேயே "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்" என்றார் மாணிக்கவாசகர். ஒருவன் ஒன்றை உணர்ந் தான் என்றால் அது அவனுடைய உள்ளத் தைத் தொட்டுவிட்டது என்பது பொருள். உள்ளத்தைத் தொட்டது அவனை ஒரு பொழு தும் விட்டு நீங்காது. ஆகவே பத்தி அனு பவம் எம்மை விட்டு நீங்காமலிருக்க வேண் டின் அது எமது உள்ளத்தைத் தொட வேண்டும்.

இவ்வாறு பெருகுகின்ற பத்தி, மறுமை யில் பேரானந்த வாழ்வு பெற நம்மைப் பரி பக்குவ நிலை அடையச் செய்வதுமல்லாமல், இம்மையில் மனக்கவலையற்றவர்களாகப் பொறுமையுடையவர்களாக, தளராத மன உறுதியுடையவர்களாக, தன்னம்பிக்கையுடை யவர்களாக, மன ஒருமைப்பாடுடையவர்க ளாக, சமரசமுடையவர்களாக, சமூகத் தொண்டர்களாக நாம் வாழத்துணை புரிகின் றது. இத்தகைய பத்தி நெறிக்கண் நின்று பயனடைவோமாக.

சைவத்தின் இருகண்கள்

'அருள்'

"எல்லா உலகமும் ஆனாய் நீயே"

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே செய்தற்கரிய செயல்..... என்பது வள்ளுவர் கூறும் அறிவுரை. அஃதாவது பெறுதற்கரியதோர் பொருளை ஒருவன் முன்செய்த புண்ணிய வசத்தால் அடைவானேல், அப்பொருளைத்துணைக்கொண்டு தனது வாழ்வின் குறிக்கோளாக அமைந்த செயற்கரும் செயலை ஒருவன்முயன்று ஆற்றிப்பயன்பெறுக என்பது பொருள். இவ்வார்த்தைகளில் நாம் கவனிக்கவேண்டிய இருபொருள்களுள. அவற்றில் ஒன்று எய்தற்கரியது ; மற்றொன்று செய்தற்கரியது. இவ்விரண்டின் திறத்தினையும் அறிதலும் அடைதலும்தான் ஒருவனது வாழ்வின் குறிக்கோளாக அமைதல் வேண்டும். அவ்விரண்டினையும் சிறிது ஆராய்வாம்.

மணிவாசகப் பெருந்தகை குருந்த மர நீழலிலே குருவாகி வந்த இறைவன் 'நமச்சிவாய' என அடி எடுத்துக்கொடுப்ப, உண்மைஞானம் உணர்வு மீதூர, "புல்முதலாகத் தேவரீறுக எல்லாப்பிறப்பும் பிறந்தினைத்தேன்;" பின்னர் நல்வினை தலைக்கூட்ட "மானிடப்பிறப்பில் வந்து மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்," என்றும். வாகீசப் பெருந்தகையான திருநாவுக்கரசு நாயனர்,

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற்குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே

இந்த மானிலத்தே" என்றும் மானிடப்பிறவியின் எய்துதற்கருமையை விளக்கமாகக் கூறியுள்ளனர். கனகசபையின் அனவரத தாண்டவம் சொய்தருளும், சின்மயானந்த, சுத்தசைதன்ய, சொரூபியாகிய நடராசப் பெருமானது "ஐந்தொழில்களையும் அருளும் நடனத்தை, என்பு உள்ளுருகி, இருவினையை ஈடறுத்து, துன்பம்களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து, காதலாகி, கசிந்து கண்ணீர் மல்கக் காணும் பாக்கியம், இப்பிறவியிற் கிட்டுமானால், இம்மனிதப் பிறவியும் வேண்டும் என்பது புலனாகின்றது."

ஏனைத்தாவர சங்கமங்களுக்கும் மானுடப் பிறவிக்கும் வேறுபாடு எதனால் துணியப்படும் என்பது ஆராய்தற்பாலது. உண்டு உறங்குவதும், இன்பதுன்பங்களை அனுபவித்தலும். கருவில் தோன்றுதலும் அழிதலும், பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, ஆதியன அடைதலும், காதல், சுவையுணர்வு ஆகிய அகநிகழ்ச்சிகள் அடைதலும் மனிதப்பிறப்பிலுள்ளவர்களுக்கும் ஏனையபிறப்பிலுள்ளனவற்றுக்கும் ஒக்கும். ஆயினும், வேறுபாடு ஒன்றே·ஒன்றில் மாத்திரம் தங்கியிருக்கின்றது. அஃது ஒன்றே குறிக்கோள் என்பது.

குறிக்கோளாவது இன்னதென்பதனைச் சில உதாரணமூலம் காட்டுவாம். திரிகையில் தானியத்தை நெரித்து மாவாக்கிடுதற்கு, அத்திரிகை மேற்பகுதி சுழலுதற்குக் காரணமாக உறுதுணையாக அமைந்தது, நடுவே இறுகியுள்ள தறி. தறி கழலுமாயின், திரிகை சுழல்வதுமில்லை ; மா அரைபடுவது மில்லை. அத்தறிபோல கலங்காது, துளங்காது, உறுதியாக அமையவேண்டியது குறிக்கோள். குறிக்கோள் தறியானால். அதிலேதங்கிச் சுழலும் சுழற்சி மனத்தின் சலனத்துக்கும், மேல் திரிகை ஆன்மாவுக்கும் உவமை. தறியைப் பற்றித்திரிகை சுழல்வதுபோல, இன்ப துன்ப நுகர்ச்சிகளினூலே சுழலும் மனத்தினால் அவற்றைப்பட்டு சுழலும் ஆன்மா - மாயையிற் கிடந்து புரளும் ஆன்மா - குறிக்கோள் ஒன்றைப்பற்றி அதிலே இறுகி நின்று

இலக்கிய வாழ்வுறுமேல் பிறவிப்பயனை அடைந்ததாகிவிடும்.

இன்னும் ஒரு உதாரணம் வருமாறு: கடுகதிப் புகைரதம் எந்த நிமிஷத்திலும் உருண்டோடும் நிலையில் இருக்கிறது நாம் நினைத்த (குறிக்கோள்வைத்த) இடத்தை அடையக் கருதுவோமானால் அப்புகைரதத்தில் ஏறத்தான்வேண்டும். உருளும் புகைரதத்துக்கு ஆதாரமாக அமைந்தது தண்டவாளம். அது அசையாது, நெகிழாது துளங்காது. உறுதியுடன் புகைரதம் ஓட அது வழி கொடுக்குமேல் யாதொரு கெடுதியும் இன்றி நாம்நினைத்த இடத்தை அடைந்து விடுவோம். ஆனால், தண்டவாளமும் ஆடி, புகைரதமும் ஓடுமானால் என்ன கதிவரும் என்று சிந்தித்துப்பாருங்கள். நினைத்த இடத்தை நாம் அடையமுடியுமா? அது போல உறுதி அற்ற ஆன்மமுயற்சிகள், உறுதியுள்ள தொருகுறிக்கோளைப் பற்றியதாக, அமைத்தல் வேண்டும். அக்குறிக்கோள்யாது என்பதனை நோக்குவாம்.

எம்மை நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலைதந்து வளர்த்தவள் தாய்; குருகுபறவாமல் கோதாட்டி வளர்த்தவள் தாய். அவள் என்றும் துணையாவாளா? எமக்கு உண்டியும் உடையும் உறையுளும் தந்து, கல்விதந்து தன்னுயிரை எமக்காகதியாகித்த தந்தை என்றும் துணையாவாரா? எனக்குவந்த துன்பம் தமக்குவந்ததாகக் கருதி, உடன்பிறப்புக்காக உயிரையும் உவந்து கொடுக்கும், உடன்பிறந்தார்தான், கெடிது துணையாவாரா? கண்ணை இமை காப்பதுபோல, நோய்வந்தால் அக்குழந்தைக்காகத் தாமே மருந்துண்டார்களே என்று கருதும் பேற்ற பிள்ளைகள்தான் துணையாவார்களா? இவர்கள் யார்தான் இறுதியில் எமக்குத்துணைபுரிவார்? "தந்தை தாய் தமர்தாரம் மகவென்னும் இவையெல்லாம் சந்தையிற்கூட்டம்"..... "மணிமாட மாளிகை மேடை சதுரங்கச்சேனையுடனே வந்ததோர் அரசவாழ்வும் இந்திரசாலக் கோலம்" என்றார் தாயுமானார். "தந்தை யார் போயினர் தாயாரும் போயினர் தாமும் போவார் - கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் - கொண்டுபோவார் - எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே!" எனத்தன் மனத்தையே இடித்துக் கேட்கின்றார். நாவுக்கரசர். ஆகவே இந்நிலவுலகில் எம் அறிவின் அளவில் காணப்படும்பொருள்களியாவும், தோற்றியயாவும் அழிவுடுந்தன்மைய... என்றதருக உண்மையின் படி நிலை நில்லாதன. தமக்குத் துணை தெரியாது கலங்கும் இவர்களை, நாம் துணைகொள்வது அறிவாகுமா? மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

இதனை நன்குணர்ந்தவராகிய திருநாவுக்கரசுநாயனார் தனது வாழ்வு, சமணப் படுகுழியில் அழிவுபட்டுக், குறிக்கோள் இன்றிக் கழிந்ததே! என இரங்கினார். குறிக்கோளை நோக்கி அழுதரற்றித் தேடுகின்றார்

"பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் குழலார் தங்கள்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலநாய்க் கழிந்த நாளும்
குறிக்கோள் இல்லாது கெட்டே
சேலுலாம் பழன மூதூர்த்
திருக் கண்டீச் சரத்துள்ளானே"

என்று திருக்கண்டீச்சரத்து இறைவனை நோக்கிக் கதறி அழுகின்றார். "குளிர்ந்த தேன் பிலிற்றும்மலர் சொருகிய கூந்தலையுடைய பெண்களின் மேல், ஆர்வமீதூரத் தன் செயல்மறந்து, அம்மங்கை நல்லார் வடிவழகினில் மயங்கி மையலுற்றும், அப்பாலே தொந்திசரிய, மயிரே வெளிற, நிரைத்தந்த மசைய, முதுகேவளைய, இதழ்தொங்க, ஒருகை தடிமேல்வர மகளிர் கண்டு, பரிகசித்துச் சிரிக்கின்ற கிழம் ஆகியும், வாழ்ந்தகாலங்களிலே, குறிக்கோள் இல்லாது கெட்டேனே!" என்று இரங்கிக் கலங்குகின்றார்.

"அழுதபிள்ளைதானே பால்குடிக்கும்" பிழைசெய்வது குற்றமாகாது; பிழையென்றுணர்ந்து பின் அவன் திருந்துவானையின் அப்பிழை மன்னிக்கப்படும். கைலை பெயர்த்த இராவணனுக்கு இறைவன் அருள் சுரந்தாரன்றே? சமண இருள்புகுந்த திருநாவுக்கரசுநாயனார் குற்றம் மன்னிக்கப் படாததொன்றே? இல்லை. இறைவன் அவரை சூலையால் மடுத்துச் சைவத்துப் புகுத்தி, நீற்றறையில் காத்து, கல்லினைத் தெப்பமாக்கி,

நஞ்சை அமிழ்தாக்கி, யானையை வணக்கி, அருள் சுரந்தாரன்றே? ஆகவே நாவுக்கரசர் ஒருகுறிக்கோளைப் பற்றி அதில் உறைத்த காரணத்தாலேதான்,

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறிவோம்
பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும்
துன்பமில்லை"

என்றும்; "அஞ்சுவ யாதொன்றும் இல்லை - அஞ்சவருவதுமில்லை." என்றும், உறுதியும், திண்மையான பேரிறும்பூதும், எய்தினர். மேலும், என்ன கூறுகின்றார்? ஏழை மனமே! இப்பூமி பாதலத்து விழுந்து அழியினும் அழிக; சப்த சமுத்திரங்களும் கதி கலங்கினலென்ன; நாவலந்தீவு புடைசூழும் ஏழுசமுத்திரம் மாத்திரமன்றி ஏழுலகங்களும் அட்டதிக்கிலும் திசைமாறி ஓடினலும் என்ன? சூரியசந்திரர் விழுந்து ஒளிந்தாலும் எமக்கென்ன? அஞ்சாதே மனனே! எமக்குப் பற்றுக்கோடு (குறிக்கோள்) ஒன்று கண்டுவிட்டேன்! அலையாதெனில் திருப்பாதிருப்புலியூரில் முக்கண்ணுடை மூர்த்தியாகிய இறைவனது இருபாததாமரைகளுமே. அவை எமக்குத்துணையாகி உள்ளன.

"மண் பாதலம் புக்கு
மாகடல் மூழ்கி மற்றேழுலகும்
விண் பால் திசைகெட்டு
இருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பா திருப்புலியூர்க்
கண்பாவும் நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே"

என இறுமாப்போடு கூறுகின்றார்.

வானந்துளங்கிலென்; மண்கம்பமாகிலென் [மால்வரையும்
தானந்துளங்கித் தலைதடுமாறிலென் தண் [கடலுள்
மீனம்படிலென் விரிசுடர்வீழிலென் வேலை [நஞ்சுண்(டு)
ஊனமொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட [உத்தமர்க்கே.

என்றார்.

இதுவரை கூறியவற்றில் பெறுதற்கரியது மானிடப்பிறவி ஒன்றே என்பதும், அதுவே எய்தற்கரிய தென்பதும், அப்பிறவி கிடைக்கும்பேறு ஒருவனுக்கு முன்னைத் தவத்தால் கிடைக்குமேல் செய்தற்கரியதான - உறுதியான - உறைப்பான குறிக்கோள் ஒன்றைப் பற்றி வாழவேண்டும் என்பதும் அக்குறிக்கோள்தான் இறைவனது திருவருள் வடிவான பாதங்கள் என்பதும், அவ்விறைவன் பாதங்களை அடைதலே இப்பிறவியின் நோக்கம் என்பதும் கூறப்பட்டது.

அவன் பாதங்களை எப்படிநாம் அறிவது. எங்கே இருக்கின்றதென்பதற்குரிய வழிகளை இனி ஆராய்வாம். இறைவனைக் காடுகள் புகுந்தும், காய்கனிதின்றும் தேடி அலைய வேண்டாம். அவன் எங்களுள்ளேயே இருக்கின்றான். அவன் என்னிலும்பார்க்க மிகவும் எனக்கு நல்லவன். அவன் என்னுயிருக்குள் உயிராகி நிற்கின்றான்.

"என்னில்யாரும் எனக்கினியாரில்லை
என்னினும் இனியானினிதிங்குளன்
என்னுள்ளே உயிராய்ப்புறப்போந்துபுக்கு
என்னுள்ளே நிற்கும் இன்னம்பர்ஈசனே

வெண்ணெயைக் கையிற்கொண்டு நெய்க்கு அலைவர்போல யான் இவ்வளவு காலமும் "காடும் மலையிடமும் கானற்பெருவெளியும் தேடி அலைந்து அலுத்தேனே! அவனென்னுள்ளே இருக்கின்றானமே! இறைவனே! நீ எங்கிருக்கின்றாய்." "இறைவனே! நீயென் உடலிடம்கொண்டாயாமே!" என்று எமது மனம் கேட்டுத் தவிக்கின்ற தல்லவா?

காண வழிகாட்டித்தருகின்றேன்; சற்றுச் சிந்தியுங்கள். காட்டுவிறகை எடுத்துப்பார்த்தால் அதனுள் என்ன தெரிகிறது? சிலர் வைரம் தெரிகிறது; பட்டை தெரிகிறது, என்பர். ஆமாம் வெளிக்கண்ணுக்கு அவ்வளவுதான் தெரிகிறது. அகக்கண்ணுக்கு என்னதெரிகிறது? ஒன்றும் தெரியவில்லையே?.....? சிறுதீக்குச்சியை மூட்டி அதில் காட்டுவிறகைப் பற்றவைத்தால், அது கடர்விட்டு எரிகிறது. ஆகவே அந்தவிறகில் நெருப்பின் ஆற்றல் முன்னரே அடங்கியிருந்தது. அது எமது புறக்கண்ணிற் புலனாகவில்லை.

ஒரு கிண்ணம் பாலை எடுப்போம். அதனுள் என்ன தெரிகிறது? வெண்மை நிறம்... நீர்த்தன்மை - ஆடை வேறு ஒன்றும் தெரியவில்லையே. சற்றுப்பிரை விட்டு மறுநாள் நோக்கினால், கட்டித்தயிராகிவிடும். இதில் வெண்மைநிறம், கட்டித்தன்மை புலனாகின்றன. மத்தையிட்டுக் கடைந்தால், வெண்ணெய் வருகிறது அதனை உருக்கினால் நெய்வருகிறது. முன்னே பாலில் நெய்யிருந்தது உண்மை; ஏனெனில் இல்லாதது பிறவாது. ஆனால் எமக்குத் தெரியவில்லை. அதனை முறையாகப் பாகஞ்செய்ய நெய்வெளிப்படுவதாயிற்று. அதுபோலவே உடலுள் உயிரும் உயிருள் இறைவனும் உலோகாயதர் முதலாயினருக்கு வேறுபாகுபாடாகத் தோன்றுமல் மறைந்து தோன்றுகின்றன. தவம் உடையாருக்கு உடல்வேறு உயிர்வேறு என்றும், உயிரும் கடவுளும் ஒன்றே என்ற ஏகான்மவாதம் தோன்றி தயிரில் நெய்தோன்றுதவாறு இறைவனது உண்மைநிலை தோன்றுது. ஆகவே இறைவனிடத்தில் உண்மையன்பு வைத்து அவனை வழிபடுவோமாயின், எப்படி மத்திட்டுக் கடைய நெய் உருவாகி வெளிவருகின்றதோ, அவ்வாறே இறைவனும் எமது உயிரினுள் உணர்வாகிக் காட்சி தருவான். இதனை,

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

என்ற தேவாரம் நன்கு உணர்த்துகின்றது.

இவ்வாறு அன்பினால் உருகும் அடியார்களில், ஆணவமல சம்பந்த மாத்திரை உடைய ஆன்மாக்களுக்கு - அறிவிற் கலந்தும்; ஆணவம் கன்மமாகிய இருமலம்உடையவர்களுக்கு கன்மமலத்தை அறுத்து ஆணவத்தை வலிகெடுத்தும், மும்மலங்களையும் உடைய சகலருக்குக் குருவடிவமாக - ஞானசாரியனாகி மானிட வடிவுதாங்கிப், பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு ஞானோபதேசம் இறைவன் புரிவானென்றும் சைவசமய சாஸ்திரங்களும் தேவார் திருவாசக இதிகாச புராணங்களும் முழங்குகின்றன.

அருணகிரிக்கு அறுமுகப் பெருமான் அருள்செய்ததன்மை

" திருவடியும் தண்டையும் சிலம்பும்
சிலம்பு ஊடுருவப்
பொருவடி வேலும் கடம்பும்
தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வானவதனங்கள்
ஆறும் மலர்க்கண்களும்
குருவடிவாய் வந்துஎன் உள்ளம்
குளிரக்குதி கொண்டவே...

என்னும் பாசுரம் தெரிவிக்கின்றது.

இவ்வாறு அருந்த சக்தியும் வரம்பிலாற்றலும், உயிருக்குயிரான தன்மையும், என்றும் அநாதிமலமுத்தசித்த உருவாக உள்ளது, பிரபஞ்சங்களை ஆக்கி அளித்து ஒடுக்கி ஐந்தொழில் நடாத்தும் தன்மை, உடையதாகி உயிரினுக்கு உயிராக, ஏகமாகிநிற்பதும் பதியே. அப்பதியை அடையவேண்டியது ஆன்மா. அப்பதியை அடைந்து பேரின்பமுறச் செய்யாது தடுத்துக்கொண்டிருக்கும் மூலமலம் ஆணவம். அந்த ஆணவத்தால் முளைப்பன, நல்வினை தீவினையாகிய இருவகைக் கன்மங்கள். அக்கன்மங்கள் தோன்றுதற்கு துணையாக அமைந்தவை அசுத்த மாயைப்பிரபஞ்சம். அதனை ஒழிந்து இறைவனை அடைதற்கு விடிவாமளவும் விளக்குப்போல அமைந்து ஆணவத்தை முதிர்வித்து பக்குவமடையச் செய்வது சுத்த மாயை. இம்முப்பொருளுண்மையை உணர்ந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சோபான ஒழுங்கநெறியில் நின்று ஆன்மா அடைவது முத்தியாகும். அத்தகைய முத்தியின்பமும் நால்வகை நெறிகளாம், அவை முறையே சுலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகளாகும். சீவன் முத்தர்கள் இருவகையினர். தேகமிருக்கும் போதே முத்தியடையும் ஆன்மாக்களைப் பெத்தான்மாக்கள் என்பர். தேக அந்தத்தில் முத்தி பெறும் ஆன்மாக்களை முத்தான்மாக்களென்பர். இவ்வாறு வைதிக சைவநெறிக்கும் எமக்கும் இருகண்கள் போல இருந்து, தமிழுலகும், சைவ உலகும் உய்ய அருளிச் செய்து இருகண்களாக அமைந்தவர்களில் ஒருவர் மூன்றுவயதிலே இறைவனோடு கூடி உமையவள் பொன்வள்ளத்தில் கறந்து ஊட்டிய ஞானப்பாலுண்டு இறைவனைப் 'பெம்மான் இவன்' அன்றே! எனச் சுட்டிக்காட்டிய ஞானசம்பந்தப்பிள்ளையா

வார். மற்றிருவர் ஆகிய மெய்கண்டதேவரும் சந்தான குரவர்கள் பரம்பரையில் தோன்றிப் புறச்சந்தான சாரியருக்குள் தலைமை எய்தி மூன்றுமாண்டிலேயே மெஞ்ஞானம் தலைசிறப்ப முப்பொருளுண்மை தெரிந்து சிவஞானபோதம் அருளிச்செய்து சைவநன்மக்களுக்கு என்றும் அழியாத கண்ணின் மணியானார்கள்.

அவ்வாறு சமயாசாரியர்க்கும் சந்தான சாரியருக்கும் தலைமையாகிய அவ்விரு சுடர்மணிகளும் சைவ வைதிக நெறியை அதர்பட அமைத்துவழி காட்டினர். சிவத்தை அடைவிக்கும் நெறி சைவ நெறி. சைவம் சிவசம்பந்தமுடைய தென்பது பொருள். "மேன்மைகொள் சைவநீதி..... என்றும், "சிறந்தழுவு சைவநெறி".....என்றும், சமயம் என்பது சைவமென்றும், அதுவே சுத்த அத்துவித சைவ சித்தாந்தமென்றும், வரையறை செய்யப்பட்டது. அதனையே

சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்
[பொருளைக்
கைவந்திடவே மன்றில் வெளிகாட்டும்
[அந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டா
[முத்திதரும்
தெய்வசபையைக் காண்பதற்குச்
[சேரவாரும் செகத்தீரே.

என்னும் பாசுரம் விளக்குகின்றது,

தெய்வம் சிவனே சிவனருள் சமயம்
சைவம், சிவத்தொடு சம்பந்த மென்றுன்
சைவம் வளர்க்கும் சம்பந்தமூர்த்தி.

என்பதும் அது. இதுவரை கூறியவற்றுல் ஞானசம்பந்தரும் மெய்கண்ட தேவரும் சைவத்தின் இரு கண்கள் என்றும், சைவ சமயமே சமயமென்றும், அதுவே சிவசம்பந்தமான தென்றும், சைவமல்லாதன மதங்கள் என்ற பெயரினல் அழைக்கப்படும் என்பதும் கூறினும். மதங்களைப் பின்னர் மேற்கொண்டு ஆராய்வாம்.

யோகர் சுவாமிகள் அருட்பாமாலை

தெய்வம்

நம்பினபேர் தமக்கருளை நயந்தளிக்கும் தெய்வம்
நாவுக்கரசருக்கு நற்கதி கொடுத்த தெய்வம்,

வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வம் உயர் போதாந்தத் தெய்வம்,

அப்பிகைதன் பாகமாய் அமர்ந்திருக்கும் தெய்வம்
ஆராலுஞ் சொல்லரிய அருட்சோதி தெய்வம்,

தும்பிமுகன் அறுமுகவன் தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூழ் இலங்கைவாழ் தெய்வமிதே தெய்வம்.

ஆதிகால மனிதனும் அவன்கண்ட சமயமும்

—பண்டிதை பத்மாசனி அம்மாள் இராசேந்திரம்—

"அப்பனும் அம்மையும் சிவமே"

அழகிய இதழ்களை விரித்து மகரந்தப் பொடிகளைத் தூவி மலர்கள் எங்கும் வாசனையைப் பரப்புகின்றன. இம்மலர்களை ஏந்திய மரங்களெல்லாம் கண்ணுக்கினிய தோற்றத் தோடு காற்றிலசைகின்றன. கனிந்த பழங்களையுடைய விருட்சங்கள் தாழ்ந்து பழங்களை உதிர்த்துப் பட்சிகளையும் மிருகங்களையும் உண்மின் உண்மின் என்று கொப்புக்களாகிய கரங்களை நீட்டி யழைப்பனபோல் அசைகின்றன. செங்கதிரோன் தாமரை ஆம்பல் முதலிய மலர்களை யலர்த்தித் தன் அழகிய இளங்கதிர்களை விரித்துக் கீழ்த்திசையில் உதயமாகின்றன். எங்கும் அழகு எங்கும் ஆனந்தம்.

ஆனால் இவ்வழகும் ஆனந்தமும் எங்கே? சூரியன் வானவெளியின் உச்சியை யடைந்து தன்னிளங்கிரகணங்களால் மலர்த்திய மலர்களை யெல்லாம் வெதும்பச் செய்கின்றன். பின் தனது கதிர்கள் மென்மெலச் சுருங்கக் கீழே பணிந்து மறைந்து போகின்றன். மலர்ந்த மலர்கள் வாடியுதிர்ந்து இல்லாமற் போகின்றன. வானவெளியில் ஆனந்தமாயுலாவிய பட்சி சாலங்களைக் காண்டலரிதாகின்றது. இன்று மறைந்து போன கதிரவன் அடுத்த நாள் கீழ்த்திசையிற் றோன்றிப் புதிய மலர்களை மலர்த்தி பட்சிசாலங்களை வான வெளியில் உலவச் செய்து ஒரு நியதியை நிலைப்படுத்துகின்றன். இன்று எம்மை அன்போடணைத்து ஆதரித்த கரம் நாளை மறைந்தொழிகின்றது. எம்மோடனுடியவர்கள் நாளை அழிந்தொழிகின்றனர். இவ்வாறெல்லாம் நடைபெறுவதற்குக் காரணமென்ன? இவைகளெல்லாம் எவ்வாறு தோன்றுகின்றன? எங்குச் செல்லுகின்றன? என்பன முதலாகிய பல கேள்விகள் ஆதிகால மனிதனின் மனத்தில் சிந்தனையைக் கிளறிவிட்டன. இந்தச் சிந்தனையே சமயம் அல்லது மதம் என்னும் கொள்கைக்கு அடிப்படையாயிருந்தது.

முதலாவதாக மனிதன் எல்லாவிதமான பொருள்களும் தோன்றி நின்று அழிதற்குக் காரணம் ஒளியெனக் கண்டு அதனை வழிபடத் தலைப்பட்டான். காட்டில் அக்கினி பற்றி எரியும் போது அதன் கொழுந்துகளெல்லாம் மேல் நோக்கி யெழுதலைக் கவனித்தான். நீரின் கீழ்ப்பார்த்தாலும் நிலத்தில் ஒரு குழியகழ்ந்து பார்த்தாலும் அங்கெல்லாம் இருளாயிருப்பதையும் மேலே இராக்காலங்களிலும் நட்சத்திரங்கள் ஒளியுருவாக விளங்குவதையும் கண்டான். காட்டிற் பற்றியெரியும் அக்கினிக் கொழுந்துகள் மேனோக்கி யெரிகின்றன. ஆகவே அவியை அக்கினியிலிட்டால், மேலே வான வெளியில் விளக்கும் ஒளியுருவினர்க்கு நிவேதனமாகுமென நினைத்தான். காற்று, மழை முதலானவற்றைக் கொடுக்கும் பல ஒளியுருவான தேவதைகளைக் கற்பித்து அவற்றை வழிபடும் நோக்கமாக அக்கினியிற் பலியிடத் தொடங்கினன். இச்செயலே யாகங்களின் முதற்றொடக்கமாகும்.

சிந்தனையின் பலனாக அறிவு விருத்தியாகவே தானியங்கள் அதிகமாக விளைய வேண்டுமென்றும், கன்று காலி பெருக வேண்டுமென்றும், ஆடுமாடு முதலான மிருகங்களைப் பலியாக அக்கினிக் குண்டங்களிலிட்டும் பலவிதமான யாகங்களைச் செய்தார்கள் வேதங்களில் எம்மைச் சத்துருக்களிடமிருந்து காப்பாற்றுக எங்கள் கன்று காலிகள் பெருகுவதாக, மழை பெய்து தானியம் விருத்தியாகுக, என்றித் தொடக்கத்தனவாகிய பொருளையுடைய மந்திரங்களிருத்தலைக் கொண்டு இதன் உண்மையை நன்குணரலாம்.

யாகங்களிற் பலியிடுவதாற் கெ ா லை பெருகியெங்கும் இரத்தக்களமாவதையும் உயிர்கள் துடித்துப் பதைப்பதையுங் கண்ட ஒரு சிலர் காட்டிலுள்ள விருட்சங்களின் அடியிலும் மலைக்குகைகளிலுள்ளும் தனிமையாகப் போயிருந்து சிந்திப்பாராயினர். இவர்களுடைய மனம் ஒடுங்கி ஒரு வழிப்பட்ட சிந்தனையின் பயனாக பிரபஞ்சங்களைபெல்லாம் படைத்து அளித்து அழிக்கின்ற பரம்பொருள் இவர்களுடைய மனக்கண்ணில் முன்னே மங்களகரமான தோற்றத்தோடு காட்சியளித்தனர். இவ்வாறு ஒவ்வொருவரும் தாம் தாம் கண்ட உண்மைகளைச் சமயங்களென வகுத்து- அதாவது வழிபாட்டு முறைகளை வகுத்து 'நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் தன்னலமற்ற பண்பாட்டினால் எம்மவர் யாவரும் உய்வடைதற்கு பயன் படுமாறு செய்தனர். பலரும் பலவித முறைகளைக் கையாண்டு கடவுளுண்மையைக் கண்டமையால் சமயங்கள் பலவாயின. மங்களகரமான ரூபத்தையுடைய சிவத்தை வழிபடுவோரும் உலகமாதா வென்ற முறையில் சக்தியை வழிபடுபவரும் உலகத்தைக் காத்து இரட்சிப்பவர் என்ற முறையில் விஷ்ணுவை வழிபடுபவரும் என்றிவ்வாறான பல வழிபாட்டு முறைகளும் பரவி அது இந்துமதம் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்படுகின்றது.

எமது நாட்டில் மனிதன் சமயச் சார்பையே அடிப்படையான இலட்சியமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் ஒரு சிறந்த முறையைத் தொன்றுதொட்டே கடைப்பிடித்துள்ளான். உண்டல், உறங்கல் முதலான நாளாந்த வாழ்க்கையையும் சமயத்தின் பேரால் அமைத்திருக்கின்றார்களென்றால் மற்றவைகளைப்பற்றிப் பேசவும்வேண்டுமோ? களவு செய்யச் செல்பவனும் தெய்வமே என்னைக் காட்டிக் கொடாதே நான் போகுமிடத்தில் நிறைந்த பொருள் கிடைக்கவேணும் என்று தெய்வவழிபாடு செய்தே செல்லுகின்றான்.

ஒரு உண்மையான இந்து தனது மனைவி மக்கள் சுற்றம் பொன் பொருள் முதலான எவைகளை இழந்தாலும் கலங்கமாட்டான். எல்லாம் தெய்வ சங்கற்பமெனத் தெளிவான். ஆனால் தனது சமய வாழ்க்கைக்குக் குறைவேற்படுமென்று கண்டால் அவன் சகிக்க மாட்டான். இந்து மதத்தவர்களின் தெய்விக வாழ்க்கை பரம்பரையாக ஒவ்வொரு இந்துவின் இரத்தத்திலும் ஊறிக் கலந்திருக்கின்றது. இதனாலன்றோ மகாத்மா காந்தியடிகளும் அறப்போர் நடத்தித் தம் நாட்டை அடிமை வாழ்வினின்றும் மீட்டுக்கொண்டார். இக்காலத்தும் காந்தியடிகளின் உபதேசத்தைப் பின்பற்றிய இந்தியத் தலைவர்கள் நாம் செல்வத்தைப் பெருக்கி நாட்டைச் சீர்படுத்தி நாடு வளம் பெற அறவாழ்வு வாழ்வோம். அணுக்குண்டுகள் முதலான நாசக் கருவிகளால் உலகை வதைத்து வெற்றிபெற வேண்டியதில்லை யெனக் கூறுகின்றார்கள். ஆனால் தற்காலத்தில் மேல் நாட்டவர் செல்வ வளத்தாற் சிறப்புற்று அதன் பயனாகக் கலைகளை விருத்தி செய்து சந்திர மண்டலத்தைத் தாவுகின்றார்கள். உலகம் அஞ்சத்தக்க விதமான பல செயல்களைச் செய்கின்றார்கள். வல்லரசுகளாகிய அமெரிக்காவும் உருஷியாவும் எத்தனையோ விதமான அற்புதச் செயல்களைச் செய்தலை யார்தான் அறியார்? இவர்கள் எப்போது ஒருவரையொருவர் தாக்கி எமக்கு இன்னல் விளைக்கப்போகின்றார்களோ என்று உலகம் முழுவதும் அச்சத்தோடு வாழ்க்கை நடத்துகின்றது. உலக சரித்திரத்தில் இவ்வாறு அசுரத்தன்மையான இராட்சியங்களெல்லாம் அழிந்தொழிந்தனவெனக் கூறப்பட்டிருத்தல் யாவரும் அறிந்த ஒரு உண்மை. சில காலத்தின்முன் உலகம் முழுவதையும் தன் கீழாக்குவோமென்று உருத்தெழுந்த ஜெர்மனி தேசத்தின் நிலை யென்ன? நாகரிகத்திற் சிறந்ததென மதிக்கப்பட்டு உச்சநிலையை யடைந்திருக்கின்ற வல்லரசுகளெல்லாம் ஒரு காலத்தில் அழிந்தொழியும். ஆனால் எமது இந்துமதம் பரவிய நாட்டிற்கோ அழிவில்லை. வறுமை வந்தாலென்? செல்வம் வந்தாலென்? எதையும் ஒன்று போற்கருதி "இறைவனோடிசைந்த இன்பம் இன்பத்தோடிசைந்த வாழ்வு" என்ற உண்மையான வாழ்க்கையை நடத்துவார்கள்.

இன்னும் நம்நாட்டில் தமிழன் சென்ற ஆண்டில் பலவித இன்னல்களுக்காளானன். இதனைக்குறித்து ஆன்றோர் சொல்வதென்ன? தமிழன் கடவுளை மறந்து தன்னலத்தையே விரும்பி தனது மனைவி மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தால் போதும் அடுத்தவன் எக்கேடு கெட்டாலுமென்ன? என்ற எண்ணத்தோடு வாழ்ந்தான் இதனால் துன்புற்றான் என்பதே இப்போது அநேகர் பால் தெய்வபக்தி தீவினையச்சம் முதலான சிறந்த குணங்கள் விருத்தியாகி வருதலை நாம் நேரிற் காண்கின்றோம். இவற்றுக்கெல்லாம் காரணம் எமது இந்து மதத்தின் போதனை யன்றோ?

யாமிரப்பவை

"பொருளும் பொன்னும் போகமுமல்ல
அருளும் அன்பும் அறனு மூன்றும்"

என்னும் ஆன்றோர் வாக்கு எம்மவர் செவியில் எந்நேரமும் நின்று ஒலித்திடுவதாக.

மாணிக்கவாசகர் ஒரு வழிகாட்டி

"சிவனடிக் கன்பு செய் சித்தந் தித்திக்குமே"

மாணிக்கவாசகர் ஒரு வழிகாட்டி என் பதை நிரூபிக்க அவரின் காலத்தை முதலில் நிர்ணயிப்போம். மாணிக்கவாசகர் வரகுண பாண்டியனைப் பாடினர் ஆயினும் 'வரகுணன்' என்பது சிலாக்கியமான குணம் பொருந்திய வன் என்று பொருள் கொள்வது தவறல்ல. இதைவிட எட்டாம் நூற்றாண்டிலும் ஒன்ப தாம் நூற்றாண்டிலும் இரண்டு வரகுண பாண்டியர்கள் இருந்தார்கள் என்பதனால், சாஸனங்களில் வெளிப்படாத வேறு வர குண பாண்டியர்கள் முன்னிருந்தனர் என்று யூகிப்பதும் இழுக்கல்ல. திருவாசகத்தில் "சிரிப்பார், களிப்பார், தேனிப்பார்" என்று வருவதில் "தேனித்தல்" என்ற சொல் வழக்கு பிற்காலத்து வழக்கன்மையாலும் திருவாசகம் தேவாரத்துக்கு முந்தியது என்று நன்கு துணியப்படும். திருக்கோவை யாருக்குச் சிறந்த உரை பேராசிரியருடை யதே. பேராசிரியர் காலம் எட்டாம் நூற் றாண்டுக்கு முந்தியது என்று நிரூபிக்கப்பட் டுள்ளது. நூல் தோன்றிப் பல ஆண்டுகளுக் குப்பின்தான் உரைவகுப்பர். எனவே மாணிக்கவாசகர் காலத்தால் முற்பட்டவர் என்பது சாலவும் பொருந்தும். ஆகவே மாணிக்கவாசகர் எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அபிமானதுங்கன் காலத்தவரான, பெரியாழ்வார் மகள் ஆண்டாளுக்கும், ஆழ் வார்களுக்கும், பிற்காலப் புலவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கினர் என்பது வியப் பல்ல.

மாணிக்கவாசகரின் திருவாசகம் இனிய செஞ்சொற்களமையப்பெற்றுக் கனிவு மிகுந்து, பாநயஞ்செறிந்துள்ளது; மனவுருக் கத்தையும் கடவுட் பேரன்பையும் பேரின்ப நுகர்ச்சியையும் விளைப்பதில் இணையற்ற தாயித் திகழ்கின்றது. திருக்கோவையார், கோவை நூல்களில் தொன்மையுந் தலைமையு முடையது. அகப்பொருள் துறையில் தம் மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனு கவும் வைத்துப் பொருட்சுவை தோன்றப் பாடியிருத்தல் உள்ளத்தைக் கவருவதாகும். போது மலராகி மணம் மிகுந்து தேன் பிளிற்றும் இன்பப் பருவத்தில் அம்மலரை நாடி வண்டுகள் வருதல் உலக இயற்கை அவ்வண்ணமே உலகக்கட்டு களினின்றும் விடுபட்டு அன்பென்னும் புறஇதழ்களை விரித்து அருளென்னும் தேன்பிலிற்றும் பரி பக்குவநிலையை அடைந்த சீவான்மாவாகிய மலரைப் பரமாத்மா வலியவந்தணைதல், ஆண்ணந்து ஆட்கொள்ளுதல் முதலிய அருஞ் செயல்கள் செய்தல் அகப்பொருள் துறைக ளுடன் ஒன்றுபட்டுத் திருக்கோவையாரில் இலங்குதல் யாவராலும் சுவைக்கத்தக்கதே.

மணிவாசகர் கற்பனையால் ஊடுருவி நோக்கி முடிவுகளை அனுபவவாயிலாக் கவி தையில் சமைக்கிறார். ஓசையுமும் மனத் தில் கொப்பளிக்கும் உணர்ச்சிகளை வெளிப் படுத்திப் பிறர் உள்ளத்தை நெகிழவைக் கின்றது. உவமைகள் உண்மைப்பொருளைத் திறம்பட விளக்கிச் சிந்திக்கவைக்கின்றது. இவையாவும் சிறப்பாக அமைந்த மாணிக்க வாசகரின் கவிதைகளை இறைவன் கோவி லாகக் கொண்டுள்ளான். மணிவாசகர் அனுபவத்தைப் பெற்றுப் பின்னர் கவிதை ஆக்கினர். இவருடைய உள்ளத்தை உருக் கும் கவிதைகளைப் படித்தே ஏனையோர் அனுபவத்தைப் பெற்றார்கள். "திருவாச கத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்," எனவே உள்ளத்து உணர்ச்சி யைத்தட்டி எழுப்பும் பாடல்கள் ஏனையோ ருக்கு வழிகாட்டியாக அமைந்தன என்பதில் வியப்பில்லை.

" அன்பிலுல் அடியேன் ஆவியொடு
ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரம் அல்லாய் இன்னருள் தந்தாய்
யான் இற்கிலன் ஓர் கைம்மாறு,"

எனவும்,

" நினைத்தனை உள்ளத்தோர்
பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்தோறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக
ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பி "

எனவும். பாடுவதிலிருந்து ஆழ்ந்த அக அனுபவத்தை அறிதல்கூடும்.

காதல் வெள்ளத்தில் கரைபுரண்டோடி, பின் துன்பக்கடலிலே தோணிபெருது தத்தளிக்கின்றார், ஆண்டாள். மாணிக்கவாசகரைப் போலவே,

" என்புருகி இளமேல் நெடுங்கண்கள்
இமை பொருந்தா பலநாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்தனென்பது
ஓர்தோணி பெறுது உழக்கின்றேன் "

எனப்பாடுகிறார் ஆண்டாள். மாணிக்கவாசகர் பாடல்களில் காணப்படும் கருத்துக்களும் சொற்றொடர்களும் ஆண்டாள் பாடல்களிலும் காணலாம்.

" வண்டல் பயின்றில லெல்லாம் உன்சேரல்
கொண்டல் வண்ணன் திருவார்த்தை புரிந்
[தன்று "

என ஆண்டவனைக் காதல் ரூபத்தில் வைத்துப்பாடுகிறாள், ஆண்டாள். அகத்துறைக் குரிய காதல் பக்திப்பாடலில் முழுநூலிலும் இடம் பேறும் மாணிக்கவாசகர் கோவையைப் பின்பற்றியே எழுந்தன எனலாம். " அழுதழுறி அகமெகவே புகுந்தாண்டான்
[அன்புகூர "

என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தம்மைமறந்து ஈடுபடும் பாடலைப்போலவே ஆண்டாளும்,

" உடலுள் புகுந்து நின்று ஊறலறுகின்ற
மாயற்கு " என உருகிப்பாடுகிறார்.

இவற்றைப்போலவே இறைவனின் திருநாமங்களையும், தலங்களையும், லீலைகளையும், கீர்த்திகளையும் பாடி ஆண்டவன் பாதநிழலை இருப்பிடமாகக் கொண்டு இரண்டறக் கலந்து பாடும் மாணிக்கவாசகரின் பாடல் களையொட்டி ஆண்டாளும் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவையிலுள்ள மழைப் பாட்டையும், ஆண்டாளின் திருப்பாவையிலுள்ள மழைப் பாட்டையும் ஒப்பிட்டுப்பார்க்கலாம். நகைச்சுவையும் ஒருவித நாடகத்திறமையும், ஓசையின்பமும் தக்க முறையில் கலந்திருக்கின்றன. ஆண்டாளின் திருப்பாவை என்ற பிரபந்தத்தின் பெயரும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை என்ற பெயரையே கொண்டுள்ளது, ஆண்டாள், திருவெம்பாவையின் தொடர்பின் அருமையைத் தெரிந்தும், முதன்மையைக் குறித்துமே எடுத்தாண்டுள்ளார். நாச்சியார் திருப்பாவையில் ' எம்பாவாய் ' என்ற ஈற்றின் நெறியை நோக்கினும் திருவெம்பாவையின் மரபினையே கொண்டதாக அமைந்துள்ளது.

இயற்கைப் பொருள்வனப்பு சுடர்விட்டு ஒளிர்கின்றது மாணிக்கவாசகரின் பாடல்களில். காட்சிப்பொருளினுடைய நிறங்களின் ஒற்றுமை வேற்றுமையன்றி அவற்றின் வடிவமைப்பும் இன்பந்தரவல்லன. அவையாவற்றையும் உலகியற் போக்கோடு தழுவி அமைத்துள்ள பாடல்கள் பல திருக்கோவையாரில் உள்ளன. " போதோ, விசும்போ, புனலோ, பணிகளது பதியோ " எனப்பல விதமாக உருவகித்துப் பாடுதலைப்போலவே ஆண்டாளும் " ஆழி மழையான் " என்று கருத்துப்பொதிந்த உருவங்களினால் பாடுகிறார்.

இரங்குதலை உரிப் பொருளாகவுடைய நெய்தனிலத்தே தலைவிபிரிவுற்றுத் தலைவர் பால் தூது விடுகின்ற அகத்திணை மரபையும் மாணிக்கவாசகர் பாடல்களில் காணலாம்.

" உன்னை உகப்பன் குயிலே உன்துணைத்
[தோழியும் ஆவன்
..... சீர்ப்புயங்கள் வரக்கூவுவாய்."

என்று குயிற்பத்தில் பாடுவதைப்பின்பற்றியே ஆண்டாளும்,

" இன்னடிசிலோடு பாலமுதூட்டி எடுத்த
[என்கோலக்கிளியே
உன்னைடு, தோழமை கொள்ளுவன்
உலகளந்தான் வரக் கூவாய்." [குயிலே

என்று ஆசைகாட்டிப்பாடுகிறார். நாச்சியார் குயிற்தூது, மாணிக்கவாசகரின் குயிற்தூதின் பின்பட எழுந்தது என்பதற்கு, "மன்னு பெரும்புகழ்" என்று பெயர்புனையும் நாச்சியார் பாடலினால் உய்த்துணரலாம். மேலும் இத்தூதுப் பிரபந்தம் பிற்காலத்திலெழுந்த வண்டு, இளங்குருகு, வாரணம், நாரை, அன்னம், அன்றில், கூவை, புகையிலை ஆகிய தூதுப்பிரபந்தங்கள் யாவற்றிற்கும் வழி காட்டியாக அமைந்துள்ளது.

அன்றியும் மாணிக்கவாசகர் தமிழ் இசைக்குப் பெருந்தொண்டு புரிந்தார் என்பதை நன்குணரலாம். திருவெம்பாவைப் பாட்டு, அம்மானைப்பாட்டு, கோத்தும்பிப் பாட்டு, பூவல்லிப்பாட்டு, ஊசற்பாட்டு, சாழல்பாட்டு, குயிற்பாட்டு முதலியன இசைக் குரிய பாட்டுக்களாம். இவற்றைப்பாடு வோர்க்கு இன்பம் பயக்கவல்லன மாத்திர மன்றிச், சிறுவர் சிறுமிகளுக்கு வேத ஆகமக் கருத்துக்களை விளக்கி, ஏனைய புலவர்களுக் கும் இப்படிப்பட்ட துறையில் பாடல்கள் புனைவதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியன. "போற்றி" என்று வாழ்த்திப்பாடல்கள் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் புனைந் துள்ளார். இப்படி அமைந்த விருத்தப்பாக் களைப்போலவே பிற்காலத்துப புலவர்கள் பல கீர்த்தனங்கள் பாடியுள்ளார்கள்..

இக்காலத்துப் புலவர்களுக்கும் மாணிக் கவாசகர் பாடல்கள் வழிகாட்டியாகவே உள்ளன. பாரதியாரின் "பாரதமாதா திருப் பள்ளியெழுச்சி" மாணிக்கவாசகரின் திருப் பள்ளியெழுச்சியின் ரீதியில் அமைந்துள்ளது. உள்ளத்தைக் கவரக்கூடிய திருவாசகத்தின் சில பாடல்களைப் பின்பற்றிப் பாரதியின் தேசியகீதங்களின் நடையும் அமைந்துள் ளன.

" கூவின பூங்குயில், கூவின கோழி,
குருகுகளியம்பின, இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளி,
யொளி யுதயத்தொடுப் படுகின்றது
விருப்பொடு நமக்குத் தேவ
நற்செறி கழற்றாளினை காட்டாய்
யாவரு மறிவரியாயெமக் கெளியாய்!
எம்பெருமான் பள்ளியெழுந் தருளாயே."

என்ற மாணிக்கவாசகரின் பாடல்நடையில் பாரதியாரும்,

" புள்ளினம் ஆர்த்தன, ஆர்த்தன முரசம்,
பொங்கிய தெங்குஞ் சுதந்திரநாதம்
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்!
வீதியெலா மணுகுற்றனர் மாதர்
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஒதி நிற்கின்றார்
அள்ளிய தென்னமு தன்னை யெம்அன்னை
ஆருயிரே, பள்ளி யெழுந்தருளாயே."

எனப் பாடியுள்ளார். பாரதியார் எவ்வளவு தூரம் சொற்கள், ஓசை, நடை ஆகியனவற் றைப் பின்பற்றியுள்ளார் என்பதை இப்பா டல் புலப்படுத்துகிறது.

இவையாவற்றையும் நோக்குங்கால் மாணிக்கவாசகரின் பாடல்கள் பாரயம் பொதிந்துள்ளனவாகவும், சிறந்த எடுத்துக் காட்டாகவும் விளங்குவதை நன்குணரலாம்.

மாணவர்களுக்கு ஒரு சொல்

"நாட்டின் எதிர்கால முன்னேற்றம் இன்றுள்ள வாலிபர் களாகிய உங்கள் வளர்ச்சியிலும் உழைப்பிலுமே தங்கியிருக் கின்றது. தற்காலக் கல்வி பட்டதாரிகளாகும் பத்திரங்களைப் பெறுவதிலும் உத்தியோகத்தை நாடுவதிலுமே மூடிவடை கின்றது. இவ்வெறும் நூலறிவு பெறும் நோக்கம் முற்றுக மறைதல் வேண்டும். தெய்வீகத்தை உணரச் செய்வதே பூரண கல்வியாகும். இத்தன்மை அடைத்தற்குத் தன்னம்பிக்கை, ஒழுக்கம், அஞ்சாமை ஆகிய மூன்று குணப்பண்புகளையும் அறியச் செய்து அதன்படி வாழ்க்கை நடாத்த உதவ வேண்டும்"

—சிவதொண்டன்

உதிர்ந்த மலர்

"இஃதெல்லாம் நானே" "இவையெல்லாம் நீயே" "நீ எஜமான், நான் தாஸன்" என்ற இந்த மூன்றில் எதையேனும் ஒன்றைச் சொல்லக்கூடிய மனநிலைமை எப்போது பக்குவமாகுமோ அப்போதுதான் மனிதன் ஈசுவரனை அடைவான்.

—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்

எல்லா மனிதர்களிடத்திலும் ஈசுவரன் இருக்கிறான். ஆனால் ஈசுவரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணம்.

—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்

ஒருநாள் ஒரூரில் சாயங்காலச் சந்தை ஒன்றுகூடிற்று சில செம்படவப் பெண்கள் தாம் கொண்டுவந்த மீனை அங்கு விற்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். முன்னிருட்டு வந்துவிட்டது. மழையோ பாட்டம்பாட்டமாகப்பெய்யத்தொடங்கியது. பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்! பக்கத்தில் பூக்கடைக்காரனுடைய குடிசை இருப்பதைப் பார்த்து அங்கு ஓடினர். இந்தப் பூக்கடைக்காரன் மிகவும் நல்லவன்; அவன் அங்கு வந்த அப்பெண்களின் பரிதாபகரமான நிலையினைக் கண்டு தனது வீட்டின் ஓர் அறையைக் காட்டி, வேண்டுமானால் அன்று தங்கவும் அதனை உதவினான். அவர்கள் மிகவும் மகிழ்வுடன் ஏற்று அவ்வறைக்குள் சென்றனர். அந்த அறை கம கமவென்று நறுமணம் வீசியதைக் கண்டு நாலு பக்கமும் பார்த்தார்கள். ஒரு மூலையில் சில பூக்கூடைகள் வைக்கப்பட்டு இருந்தன. ஆனால், மீன் வாசனையோடு பழகியவர்களுக்கு நறுமணம் வீசும் வாசனை எப்படியிருக்கும்? அதுமட்டும் அல்லாமல் ஒருகால் கண்மூடி விழிக்கவும் முடியாததாயிருந்தது. அவர்களுள் ஒரு புத்திசாலிப்பெண் மற்றவர்களைப்பார்த்து ஒருயுக்தி சொன்னாள். "நமக்குத் தூக்கமோ வருவதாய் இல்லை. இந்தப் பூக்கூடைகளை எடுத்து வேறிடத்து வைக்கவோ முடியாது. நம்மிடத்திலுள்ள மீன் கூடைகளைக் கொஞ்சம் நகர்த்துப் பக்கத்தில் வைத்தால் அப் பூக்கூடைகளால் உண்டாகும் கஷ்டம் நீங்கும்" என்றாள். யாவரும் அந்தயோசனையை ஏற்று அப்படிச் செய்தனர். உடனே எல்லாப் பெண்களும் குறட்டை விட்டுத் தூங்கினர்.

பழக்க வாசனையின் பரமசக்தி இப்படிப்பட்டது தான்! உலக ஆசாபாச எண்ணத்தோடும் வாழ்வோடும் கூடியவர், பரிசுத்த, பற்றற்ற தன்மைகளையோ தலங்களையோ நாடினால் அமைதிக் குறைவு சுகக் குறைவு முதலியவற்றோடு கூடியவர்களாகத் தானே இருப்பார்கள்.

—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்

சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனி
[யாய்ச் சும்மாவிருக்க வருளாய்!
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே!

—தாயுமான சுவாமிகள்

எங்கும் உள்ள ஈசனர் எம்முடல் புகுந்தபின்
எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம்
[என்று பேதம் உள்ளதோ.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

—குறள்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாக—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

—பூதத்தாழ்வார்

கடையேன்ம லங்கள்முற்று மிருநோயு டன்
பிடித்த கலியோடி நந்துசுத்த—வெளியாகி
களிகூர என்றனுக்கு மயிலேறி வந்துமுத்தி
கதியேற அன்புவைத்து—னருள்தாராய்.

— அருணகிரிநாதர்

Nalvali — நல்வழி

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

Mark this! The Kurral divine, Logia of the Vedas Four Vyasa Sutras and Tamil hymns of the Saintly Trio, Kovai Tiruvasakam and Mystic Words of Tirumular Are in essence one — all the same truths teach.

எவன் தன்னைத்தானே ஜயித்தவனே
அவன் தனக்குத் தானே உறவினன்;

ஆனால் தன்னை ஜயிக்காதவனுக்குத் தானே பகைவனைப்போல் பகைமை நிலையில் உள்ளவனுவான்.

—ஸ்ரீமத் பகவத்கீதை

கைவிளக்கின் பின்னேபோய்
காண்பார்போல் மெஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய்
மெய்காண்ப தெந்நாளோ;

—தாயுமான சுவாமிகள்

பாராயோ என்னைமுகம்
பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து
செப்பாய் பராபரமே.

—தாயுமான சுவாமிகள்

குருவானவர் மஹிமை வாய்ந்த கங்கா நதிக்குச் சமானமாகிறார். அந்நதியில் ஜனங்கள் குப்பை கூளங்களையும் அசங்கியங்களையும் எறிந்தபோதிலும் அதன் பவித்ரம் ஒரு போதும் குறைவதில்லை. அதுபோல் நிந்தனைகளாலும் வசைகளாலும் குரு பாதிக்கப்படுவதில்லை.

—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்

மணியை அடிக்கும்போது, அடுத்தடுத்து வரும் அதன் ஒவ்வொரு ஓசையும் தனித்தனி உருவத்தையுடையது போலத் தோன்றும். ஆனால் அடிப்பதை நிறுத்தினால், சிறிது நேரம் வரையில் கேட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தொழியும். தெளிவற்ற சப்தமோ உருவமில்லாதது போலத் தோன்றுகிறது; மணியின் ஓசையைப்போல ஈசன் உருவமுள்ளவனையும் உருவமில்லாதவனையும் இருக்கிறான்.

—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்

காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே.

—திருமூலர்

சந்ததமு மெங்குமெல்லாந்
தானுகி நின்றசிவம்,
வந்தெனுளே பாயுதென்று
வாய்சொன்னற் போதுமடா!

—பாரதியார்

காவிக் கமலக் கடலுடன் சேர்ந்தெனைக்
[காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேது
[மின்றித்
தாவிப் படரக் கொழுகொம்பிலாத தனிக்
[கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்
[கின்றதே

—அருணகிரிநாதர்

நானென்றவாணவந் தன்னையேநீக்கி
நாதாந்தப்பேரொளி தன்னிலேதாக்கு
மோனமாமந்திரத் துண்மையேநோக்கு
முத்திக்குவித்தாய் முழுகிமதியாக்கு.

—முத்துத்தாண்டவர்

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்
[பும்பொய்
ஆனல் வினையேன் அழுதால் உன்னைப் பெற
[லாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்
[திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறு
[மாறே.

—மாணிக்கவாசகர்

ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினல்
தீங்குஇன்றி நாடுஎல்லாம் திங்கள்மும் மாரி
[பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயல்உகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்
[படுப்பத்
தேங்காதே புக்குஇருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்
[பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து ஏல்ஓர் எம்பா
[வாய்.

—ஆண்டாள்.

சகிப்புத் தன்மை

எல்லா மதங்களையும், மதக்கோட்பாடுகளையும், மதநம்பிக்கைகளையும் கண்ணியப்படுத்து (அவைகட்கு மரியாதை காட்டு) எல்லா மதஞானிகளையும் மரியாதை செய். எல்லா மதங்களும் நம்மை இறைவனிடமே அழைத்துச் செல்கின்றன. இந்த விஷயத்தை நன்கு நினைவிலிருத்து.

—சுவாமி சிவானந்தர்

குழந்தாய்! கவலையுறுதே! இவ்வுலகப் பந்தங்கள் எல்லாம் நிலையில்லாதனவே. இன்று அவையே சாரமும் பயனும் எனத் தோன்றும்; ஆனல் நாளை அவை மறைந்து விடும். இறைவனுடன் உள்ள தொடர்பே உண்மையானது.

—அன்னை சாரதா தேவியார்

பூசலார் அமைத்த புதுமைக் கோயில்

—ஆ. கந்தையா (B. A. HONS)—

"உள்ளத்தனையது உயர்வு"

பல்லவர் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த காலம். தூங்கலைகள் வளர்ச்சியும் உயர்ச்சியும் அடைந்து புத்துயிர் பெற்ற நேரம். அன்று பல்லவ அரசருள் பேரும் புகழும் உடையவனைப் வாழ்ந்தான் இராச சிம்மன். கலையுணர்ச்சி மிக்க அவன் உள்ளம் கயிலைமலைக் கடவுளர்க்குக் கோயில் அமைக்க விழைந்தது. அலைந்துதிரியும் மனக் குரங்கை ஒரு நிலைப்படுத்த கற்கோயில் உறுதுணையாகுமன்றே! எனவே காஞ்சியிலே ஈடும் எடுப்பும் இல்லாக் கற்கோயி லொன்றை அமைக்க முடிவு செய்தான் பல்லவ மன்னன்.

தமிழகத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்த சிற் பக்கலைஞர் பலர் காஞ்சிக்கு விரைந்தனர். அங்கே கற்கோயிலின் அழகை அழகு செய் யக் கலைஞர்கள் பலர் கூடினர். பல்லவ மன் னன் நிறைந்த பக்தியும், உயர்ந்த கலை யுணர்வும் உடையவன்லலவா? எனவே அதுவரை தமிழகம் கண்டிராத கற்கோயி லொன்று காஞ்சியிலே தோன்றிச் சிற்பக் கலைஞரின் திறனைப் பறைசாற்றி நின்றது. பல்லவன் கனவும் நனவாயது! உருக்குலைந்த நிலையிலும் உயர்வு உடைத்தாய் ஈடும் எடுப்புமின்றி இன்றும் மிளிர்கின்றதன்றே கயிலாயநாதர் கோயில்!

இராச சிம்மன் காலத்தில் திரு நின்ற ஊரில் வாழ்ந்தவர் பூசலார். வறுமையிலும் செம்மையாய், இறைவனடிகள் மறவாது வாழ்ந்தார். உண்ணப்போதிய உணவில்லை; உடுக்க நல்ல உடையில்லை; என் இருக்க இல்லமுமில்லை. இந்த வறுமைக் கோலத் திலும் இறைவனுக்குக் கற்கோயில் ஒன்று அமைக்கப் பூசலார் உள்ளம் விழைந்தது. ஆண்டவனுக்கு ஆலயம் அமைக்க ஆண்டு கள் பல முயன்றார். ஈற்றில் தோல்வியே கண்டார்.

பல்லவன் அரசன்; பூசலார் ஆண்டி ஆண்டிக்கும் அரசனுக்கும் உரிய ஏற்றத் தாழ்வை எடுத்துரைக்க வேண்டியதில்லை; மடுவுக்கும் மலைக்கும் உள்ள வேறுபாடு தானே! பல்லவ மன்னன் பணத்தின் மேல் வாழ்பவன். ஆகவே காஞ்சியிலே சிற்பக் கலையின் சிகரமாய்க் கற்கோயிலொன்று உருப்பெற்றது. ஆனல் பூசலார் வறுமை யால் வாடுபவர். ஈடும் எடுப்புமில்லாக் கற் கோயில் கட்ட அவரால் எப்படி முடியும்? நீண்ட நாட்கள் முயன்றும் கற்கோயில் சமைக்க அவருக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. கவலைகொண்டாரா பூசலார்? இல்லை இல்லை. கல்லின்றி, கலைஞரின்றிக் கற்கோயில் எடுக்க முடிவே செய்துவிட்டார். கல்லாலும் மரத் தாலும் கலைக்கோயில் அமைத்தும் சீரழிய விட அவர் உள்ளம் ஒருப்படவில்லைப் போலும்! எனவே பூசலார் புதிய வழியைக் கண்டார். கோயில் இறைவனுக்குத்தானே! பூசலார் உள்ளத்தில் புனித ஆலயம் உருப் பெற்றது. அங்கே சிற்பிகள் சிலைகளுக்கு உயிர்கொடுத்தனர்; ஓவியர் உயிரும், உணர் வும் நிறைந்த ஓவியங்கள் தீட்டினர். காஞ் சியில் பணத்தின் நிலைக்களமாய்ப் பல்லவன் கோயில் தோன்றியது; அன்பின் வடிவாக உருப்பெற்றது பூசலார் உள்ளக் கோயில். கலைஞர்களின் முயற்சியால் உயிர் பெற்றது மன்னவன் கோயில்; அருளின் ஆற்றலால் அமைந்தது ஆண்டியின் ஆலயம். கற்கோ யில் தோன்றிற்று காஞ்சியிலே; மனக்கோ யில் அமைந்தது திருநின்றவூரிலே!

பூசலாரின் உள்ளக்கோயில் அகக்கண் ணிற்கு அழகு தந்தது. பல்லவன் ஆலயம் புறக்கண்ணிற்கு விருந்தளித்தது. பூசலார், தான் அமைத்த கோயிலுக்குக் குடமுழுக்கு நாளைக் குறிப்பிட்டார். என்னே வியப்பு! காஞ்சியில் தோன்றிய கற்கோயிலுக்குக் கும்

பாபிஷேகம் செய்ய மன்னவன் எத்தனாளைக் குறிப்பிட்டானோ அதே தினத்தையே பூசலாரும் குறிப்பிட்டிருந்தார். மனக் கோயிலெங்கே? கற்கோயில் எங்கே? காஞ்சியின் சீரும் சிறப்பும் என்ன? திருநின்றவூரின் நிலை என்ன? காஞ்சியிலே பல்லாயிரம் மக்கள் கூடினர்; திருநின்றவூரில் பூசலார் மாத்திரம் மரமொன்றின் கீழ் அமர்ந்து இருந்தார். காஞ்சியிலே ஆரவாரம்; திருநின்றவூரில் அமைதி. விடிந்தால் திருமுழுக்கு நடைபெறவேண்டும். அடியார்க்கு எளியன் அல்லவா இறைவன்! அன்றிரவு பல்லவன் கனவிலே தோன்றினன். "அன்பனே! திருநின்றவூரில் பூசலார் கட்டிய கோயிலில் நாளை குடமுழுக்கு நிகழவிருக்கிறது. அங்கு யான் செல்லவேண்டும். எனவே நீ கட்டிய கோயிலின் கும்பாபிஷேகத்தைப், பின் போட்டுவை. அன்று நாம்வருவோம்." என்று கூறினன், சேக்கிழார் பெருமான் இங்கிகழ்ச்சியைத் தன் செய்யுளொன்றிலே அழகாகத் தீட்டுகின்றார். இறைவன், அடியவர் அன்புக்குக் கட்டுண்டு அருள்செய்ய முன்வருவான் என்ற உண்மையை அவர் செய்யுள் இனிது தெளிவுறுத்துகின்றதன்றே!

"நின்றவூர் பூசலன்பன் நெடிது நாள்
நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்து நாளை
நாம் புகுவோம்; நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்து பின் கொள்வாய்' என்று
கொன்றைவார் சடையான் அன்பர்
கோயில் கொண்டு அருளப் போந்தார்"

என்பது பெரிய புராணம்.

விழித் தெழுந்தான் மன்னவன்; வியப்புற்று நின்றனன். திருநின்றவூர், பூசலார் - என்ற பெயர்கள் அவன் நினைவுக்கு மாறி மாறி வந்தன.

"ஆண்டுகள் பலவாக ஆயிரக் கணக்கான சிற்பிகளைக் கொண்டல்லவா என் கோயில் அமைந்தது? சிற்பத்தின் சிகரமல்லவா என்கோயில்? இதனிலும் மேலான ஆலயத்தை அமைக்க யாரால் முடியும்? இல்லை. பூசலாரின் ஆலயம் இதனிலும் உயர்ந்தது. அதனாலேயே இறைவன் அங்கு செல்வதாகக் கூறினன். என்ன வியப்பு! யார் அந்தப் பூசலார்.? எவ்வாறு அவரால் சிறப்பான ஆலயம் அமைக்க முடிந்தது? அவ்வாறு அவர் கட்டினாலும் காஞ்சிக்கோயிலுக்கு அது ஈடாகுமா?" என்று அவன் உள்ளம் அவனுடன் போராடியது.

இராசசிம்மன் விரைந்து சென்றான் திருநின்றவூருக்கு; ஆலயத்தைத்தேடி அங்கும் இங்கும் அலைந்தான். எங்குங் கண்டிலன் பூசலாரைத் தேடினன். கண்டவர், நின்றவர் எல்லோரையும் கேட்டான். அப்போது "பூசலார் என்ற பெயருடைய அடியவரொருவர் அதோ அந்த மரத்தடியில் அமர்ந்து கண்மூடித் தவம் புரிகிறார்" என்று அவர்கள் கூறினர்கள். பூசலாரைச் சென்று சேர்ந்தான் மன்னவன். "அடியவரே! நீவிர் அமைத்த கோயில் எங்கே? அதனைக் காண்பியும். அதனைக் கண்குளிரக்காண என் உள்ளம் விழைகின்றது." என்று கூறி நின்றான் மன்னவன். அப்போது பூசலார் வியப்புற்றார். தான் அமைத்த கோயிலின் வரலாற்றை மன்னவன் எப்படி அறிந்தான் என வினவினர். அதற்கு, இறைவன் கனவில் தோன்றிக் கூறியதெல்லாம் விரித்துரைத்தான் மன்னவன். பூசலார் இறைவன் கருணையை வியந்தார்; நெகிழ்ந்து கண்ணீர் மல்கினர். உள்ளத்தே எழுப்பிய கோயிலின் வரலாற்றை மன்னனுக்கு எடுத்துரைத்தார். மன்னவனும் வியப்பில் மூழ்கினன். பூசலார் மகிமையைப் போற்றிக் காஞ்சிக்குத் திரும்பினன், பல்லவன்.

இவ்வரலாற்றில் பல உண்மைகளை நாம் உணர முடிகின்றது. அன்பினால் இறைவன் அருளைப் பெறலாம். ஆனால் ஆணவத்தால் அவன் அன்பைப் பெறவே முடியாது. மாசில்லா உள்ளத்தில் குடிகொள்ள விழைந்தான் இறைவன். அகங்காரங் கொண்ட அரசன் அமைத்த கோயிலில் குடிகொள்ள அவன் பின் நின்றான். இறைவன் எளிமையை விரும்புபவன். ஆடம்பரத்தை வெறுப்பவன். ஆண்டியும் அரசனும் இறைவனுக்கு சமமாவர். எனவே பூசலாரின் அன்புக்குக் கட்டுண்டு அவர் மனக்கோயிலே மாண்புறவைத்தான் இறைவன். அதனால் காஞ்சிக்கோயிலும் பூசலாரின் உள்ளக் கோயில் அன்பும் புனிதமும் நிறைந்தது என்பதைப் புலப்படுத்தித் தூய இதயத்தால் இறைவன் இன்னருளைப் பெறலாம் என்பதை இறைவனே தெளிவுறுத்தினன்.

குறிப்பிட வேண்டியவை

பல்கலைக் கழக இந்து மாணவர் மன்றம் இவ்வருடத்தின் முதல் இரு தவணைகளிலும் வெகு ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் தன் செயல்களை ஆற்றி வந்ததெனக் கூறலாம்; மூன்றாந்தவணையிலும் பல அரிய சமயத்துறைகளில் புகுந்து வெற்றி காண்பதென்பதே எமது திட்டமாக இருந்தது; எமது மனக்கோட்டைகளில் ஒரு சில—: (i) ஈழத்திலுள்ள வெவ்வேறு சமயப் பெரியார்கள் சிலரைக் கூட்டிச் சமயப் பாராளுமன்றம் ஒன்றை நடாத்துவது; (ii) பல்கலைக்கழக மாணவ மாணவியரிடையே திருமுறைப் போட்டியும், இந்து தருமக் கட்டுரைப் போட்டியும் நிகழ்த்துவது (iii) வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனைகளில் பாடக்கூடிய பக்திப் பாடல்களை, முற்கூட்டியே தனிப்பட்ட வகுப்புகள் வைத்துப் பயிற்சி அளிப்பது.

இத்தகைய எமது திட்டங்கள் யாவும் உருப்பெறுவதற்குத் தக்க காரணமும் இருந்தது:

ஆடி தொடக்கம் பங்குனிவரையிலுமாய காலத்தில் இயங்கிய பல்கலைக்கழகச் சங்கங்கள் இனிமேல் தொடங்கி தை முதல் மார்கழிவரை இயங்கவேண்டுமென்ற புதிய தோர் சட்டம் சடுதியாக இரண்டாம் தவணை இறுதியில் நிறுவப்பட்டது; இதன் விளைவில் மூன்றும் தவணைக்கென நாம் தவிர்த்து வைத்திருந்த திட்டங்கள் காற்றோடு காற்றாக மறைந்துவிட நேர்ந்தது; இதைக் குறித்து நாம் பெரிதும் வருந்துகிறோம். எம் மனக்குறையை 1960-ம் ஆண்டுச் செயற் குழுவாளர்கள் நிவர்த்தி பண்ண வேண்டும் என்பதே எமது பேரவா.

இம் மலரை நாம் வெளியிட எடுத்துக் கொண்ட முயற்சியில் இடையிடையே பல இடையூறுகளும், கவலைகளும் ஏற்படத்தான் செய்தன; இவற்றில் நாம் பெரிதும் வருந்தத்தக்க கவலை ஒன்றின் காரண கர்த்தாக்கள் நமது பல்கலைக் கழக மாணவ மாணவிகளே தான்! ஆமாம்! அதிர்ச்சியடைய வேண்டாம்.

கூட்டுப் பிரார்த்தனைகளிலும், நவராத்திரிப்பூசைகளிலும், சொற்பொழிவுகளிலும், சமயச்சார்பான படக்காட்சிகளிலும் நம் இந்து மாணவ மாணவிகள் முழுமனதுடன் பங்குபற்றியும் ஆதரவளித்தும் வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையே; ஆனால் நம் இந்து தருமத்திற்கு ஒரு சமயச் சார்பான கட்டுரையோ கவிதையோ வரைந்து தாருங்கள் என்றதும் முகத்தைத் தொங்கவிடுகிறார்கள். இல்லை, அலுத்துக் கொள்கிறார்கள். "சமயத்தைப் பற்றி எனக் கென்னப்பா தெரியும்?" என்றும் சிலர் கேட்கிறார்கள் என்றால் பாருங்களேன். இத்தனை காலமாக வெளியிடப்பட்ட நான்கு 'இந்து தரும' மலர்களிலும் பல்கலைக் கழக மாணவர்கள் எழுதிய கட்டுரைகள் வெகு சிறு இடத்தையே பெறுகின்றன; ஏன் இந்தக் குறை? சமயத்தில் கருத்தைவிட ஏன் இவ்வளவு யோசனையும் தாமதமும்? இக் குறை வெகு விரைவில் நீக்கப்படவேண்டும். எவ்வளவு தான் நாம் மாணவர்களைத் தூண்டியும், அவர்கள் எம்மை இம்முறையும் ஏமாற்றிவிட்டனர். இனி வெளிவரும் மலர்களுக்காவது நம் பல்கலைக்கழக மாணவர்கள் ஏராளமான விஷயதானம் செய்து மலரைச் சிறப்பிப்பார்கள் என எண்ணுகின்றோம்.

கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டி ஏன் இவ்வாண்டு நடாத்தப் படவில்லை? என வாசகர்கள் கேட்கலாம். அதற்கும் தகுந்த காரணங்கள் உண்டு. எப்படியும் இப்போட்டி நடாத்தவேண்டும். என்று உறுதி பூண்டு நாம் எடுத்துக் கொண்ட முயற்சி மாணவர்களின் ஒத்துழைப்பில்லாமையினால் கை கூடாமற் போய்விட்டது. என்பதை மிகவும் துக்கத்துடன் தெரிவிக்கின்றோம். வருங்காலத்திலாவது எம்மாணவர்கள் கூடிய கரிசனை காட்டுவார்களென எதிர்பார்க்கின்றோம்.

எமது சங்க நடவடிக்கையில் புதிய 'விக்கிரகம்' ஒன்று உருவாக்க நாம் எடுத்த முயற்சியில் எமக்கு வெற்றி கிடைத்திருப்பது மகிழ்ச்சி. இதைவிட எமக்கென புதிய ஒரு 'வாசிகசாலை' (சமய சம்பந்தமான புத்தகம் நிரம்பிய அலுமாரி ஒன்று அமைக்க) ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் எம்மாணவர்கள் சமய அறிவு வளர்க்க போதிய வசதி யளிக்கப்படும். இச்சிறு வாசிகசாலை பெரிதாக வளர்ந்து, எம் 'விக்கிரகம்' கோவிலாகமாறும் நன்னாளை வெகு தொலைவில் இல்லை! அந்நன்னாளை நாம் எல்லோரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். —ஞானகணேஷ்

இந்த மலர்

இம் மலரின் வாசனை மிக்க இதழ்களாகப் பரிணமிக்கும் அரிய கட்டுரைகளையும், கவிதைகளையும் எமது வேண்டுகோளுக்கிணங்க தந்துதவிய அறிஞர்களுக்கு எம் உள்ளங் கனிந்த நன்றி.

நாம் வேண்டிய பொழுதெல்லாம் மனமுவந்து உதவிகள் பல புரிந்த எமது பேராசிரியர் த. நடராசா அவர்கட்கும், திரு. வி. செல்வ நாயகம் அவர்கட்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம். எம் மதிப் பிற்குரிய ஆசிரியர்களாகிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, கலாநிதி சு. வித்தியானந்தன், கலாநிதி ஆ. சதாசிவம், திரு. ச. தனஞ்செயராச சிங்கம், ஆகியோர் பல பயன்மிகு ஆலோசனைகளையும், மனங் கனிந்த ஆசிகளையும் தந்தனர். அவர்களுக்கு எமது நன்றி.

எமக்கு விளம்பரம் தந்துதவிய வணிகப் பெருமக்களும், விளம் பரங்களைச் சேகரிப்பதற்கு எம்மோடு ஒத்துழைத்த நண்பர்களும் முக்கியமாக தன்னலங் கருதாச் சேவை புரிந்த, நண்பன் சச்சிதானந்தன் அவர்களும் எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவராவார்கள்.

இம்மலரைச் சீரிய முறையில் அச்சேற்றித் தந்த ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரின் ஒத்துழைப்பும் எமக்குக் கிடைத்தது பற்றி மகிழ்ச்சி.

—இதழாசிரியர்கள்

The Gifts you will be remembered for long....

for Him

★ "Old Spice" men's Toiletries
★ "His" Toiletries for Men
★ Parker Sets
★ Wristlets
★ Document Cases
★ Travel Cases
★ West-Clox
Etc. Etc.

for Her

★ Perfumery Sets
★ Parker for Ladies
★ Wristlets
★ Carry-all Cases
★ Vaccum Flasks & Ice Jugs
★ Jewellery Boxes in attractive Designs
Etc. Etc.

STERLING PRODUCTS LTD.

NINETY NINE, MAIN STREET,
COLOMBO - ELEVEN.

For Quality Jewellery

PATTAKANNU SUBBIAH ACHARY & SONS

MANUFACTURING JEWELLERS

"SOVEREIGN HOUSE"

102, NEW CHETTY STREET, COLOMBO-13.

Telephone: 2604.

Dial: 281 *Cables:* JEWELLERS

Visit

GOLD HOUSE

FOR

GUARANTEED BRILLIANTS

AND

FASHIONABLE JEWELS

L K S JEWELLERS

KANNATHIDDY. — JAFFNA.

★ உத்தரவாதம் பெற்ற வைரங்கள்!

★ நிகரற்ற அழகுற்ற பவுண் நகைகள்!

யாவற்றிற்கும் சிறந்த இடம்

தங்க மாளிகை

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

63, 65, கன்னதீட்டி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:	கொழும்பு	திருச்சி	சென்னை	காயல்பட்டணம்
போன்:	5658	49	2321	23 & 24

ஹாஜியார்ஸ்

நகை ஸ்தாபனத்தின் வளர்ச்சி!

1927-ம் வருடம் தோன்றிய எமது ஸ்தாபனம்
இன்றுவரை வளர்ந்தோங்கி வருவதொன்றே
— இதற்குப் போதிய சான்றாகும் —
வருக! நயம் பெறுக!!



கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

Branch:

HAJIAR'S

JEWEL HOUSE

66-68, SEA STREET, COLOMBO.

Printed at the Eelanadu Limited, Jaffna.